REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2024 மே 20 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 ANNIVERSARY තිනකරන්

வரு. 92 இல. 119 | Monday 20, May, 2024 | 20பக்கங்கள் | 50/-



## பாராளுமன்றம் 22 இல் கூடுகிறது பல சட்டமூலங்கள் விவாதத்துக்கு

பாராளுமன்றம் நாளை மறுதினம் புதன்கிழமை (22) கூடவுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார். சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் (14) நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய 06

## எலான் மஸ்க் – ஜனாதிபதி சந்திப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் உலகின் முன்னணி பணக்காரர்களில் ஒருவரான எலான் மஸ்க்குடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்தோனேசியாவில் நடைபெறும் 10ஆவது உலக நீர் உச்சி மாநாட்டின் உயர் மட்ட கூட்டத்தில் பங்கேற்கச் சென்றுள்ள ஜனாதிபதி அங்கு இவரைச் சந்தித்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

எலன் மஸ்க்குடன் இலங்கையில் *Starlink* திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி கலந்துரையாடினார்.

உலகளாவிய *Starlink* வலையமைப்புடன் இலங்கையை 06

## ஜனாதிபதியின் வட மாகாண விஜயம்: ஆளுநர், அமைச்சர் தலைமையில் கூட்டம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடமாகாண விஜயம் தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் வடமாகாண ஆளுநர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று (19 ) நடைபெற்றது. வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் தலைமையில் இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

பாதுகாப்புப் பிரிவினர், பொலிஸார், மாவட்ட அரசாங்க அதிபர்கள் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள் பலரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

வடக்கில் ஜனாதிபதி முன்னெடுக்கவுள்ள திட்டங்கள், திட்டங்களுக்கு பொறுப்பான துறைசார் அதிகாரிகளின் கடமைகள், பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் நிகழ்ச்சி நிரல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

## சீதையம்மனுக்கு மஹா கும்பாபிஷேகம்



**நுவரெலியா நிருபர்**

நுவரெலியா, சீத்தாஎலிய ஸ்ரீ சீதையம்மன் ஆலய மஹா கும்பாபிஷேக நிகழ்வு நேற்று (19) நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஆலய தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தலைமையில் 06



# தென்மேற்கு பருவமழை தீவிரம்; அனர்த்தங்கள் ஆபத்தாகலாம்

## அவசர உதவிகளுக்கு 117ஐ தொடர்பு கொள்ளவும்

### இடர் முகாமைத்துவ திணைக்களங்களுக்கும் அறிவுரை



**கற்பிட்டி தினகரன் விசேட, புத்தளம் தினகரன் நிருபர்கள்**

தென்மேற்கு பருவமழை எதிர்வரும் சில நாட்களில் தீவிரம் அடையும் எனத் தெரிவித்துள்ள வளிமண்டலவியல் திணைக்களம், வடமேற்கு, மேற்கு, தெற்கு, சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் அதிக மழையை எதிர்பார்க்கலாம் என எதிர்வு கூறியுள்ளது. வங்காள விரிகுடாப் பகுதியில் குறைந்த காற்றமுத்த தாழ்வு மண்டலம் ஏற்பட்டுள்ளதாலேயே, இந்நிலைமைகள் ஏற்படலாமென வளிமண்டலவியல் முன்னறிவிப்பு பிரிவின் பணிப்பாளர் அஜித் விஜயமான்னகே நேற்று (19) 06

## "சுரக்ஷா" மாணவர் காப்புறுதி திட்டம் மீண்டும் ஆரம்பம்

# ஜூன் முதல் வாரத்திலிருந்து சலுகைகளை பெறலாம்

## ஜனாதிபதியால் 2,000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

### பாரதூரமான நோய்களுக்கு ரூ. 15 இலட்சம் வரை நிவாரணம்

பொருளாதார நெருக்கடி காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த "சுரக்ஷா" மாணவர் காப்புறுதித் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி, நாடு முழுவதிலுமுள்ள அனைத்து பாடசாலை மாணவர்களும் எதிர்வரும் ஜூன் மாதம் முதல் வாரத்திலிருந்து காப்புறுதி திட்டத்தின் கீழ் நன்மைகளைப் பெற முடியும்.

இது தொடர்பில் நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த ஆகியோர் முன்வைத்த இணை அமைச்சரவைப் பத்திரத்துக்கு அண்மையில் அமைச்சரவை அனுமதி கிடைத்திருந்தது.

சுகாதார பிரச்சினைகள் காரணமாக கல்விச் செயற்பாடுகளை தொடர முடியாத மாணவர்களுக்கு கல்வியைத் தொடர வாய்ப்பளித்தல், அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி பாடசாலை வரவையும் மேம்படுத்தல் உள்ளிட்ட விடயங்களை நோக்கமாக கொண்டு 2017 ஆம் ஆண்டில், 06

## காங்கேசன்துறை–நாகப்பட்டினம் கப்பல் சேவை: திகதியின்றி ஒத்திவைப்பு



காங்கேசன்துறை – நாகப்பட்டினம் பயணிகள் கப்பல் சேவை திகதி அறிவிக்கப்படாமல் மீண்டும் ஒத்தி வைக்கப்படுவதாக கப்பல் நிறுவனம் அறிவித்துள்ளது. அத்துடன் பயணச்சீட்டு முன்பதிவு செய்தவர்கள், கட்டணத்தை திரும்பப் பெறுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. 06

## இந்தோனேசிய அமைச்சருடன் ஜனாதிபதி ரணில் முக்கிய சந்திப்பு

இந்தோனேசிய கடல்சார் விவகாரங்கள், முதலீடுகளுக்கான ஒருங்கிணைப்பு அமைச்சர் லுஹூத் பின்சார் பண்ட்ஜாய்டன் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து கலந்துரையாடினார். இச்சந்திப்பு பாலித்தீவிலுள்ள *"United In Diversity"* வளாகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில், *Global Blended Finance Alliance* அமைப்பின் நாடுகள், வெப்ப வலயத்திற்கான இலங்கையின் முன்னெடுப்பு (*Tropical Belt Initiative*), நீலப் பொருளாதாரம் 06

## 'புத்த ரஸ்மி' வெசாக் வலயம் பிரம்மாண்டமாக ஏற்பாடு

### 23ஆம் திகதி முதல் கொழும்பில் விழாக்கோலம்

"மற்றவர் செய்தவற்றை அன்றி நாம் செய்பவை குறித்து கவனம் செலுத்துவோம்" என்ற தொனிப்பொருளில் இம்முறையும் புத்த ரஸ்மி வெசாக் வலயம் பிரம்மாண்டமாக நடத்தப்படவுள்ளது.

இந்த வலயம் மே 23, 24, 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் ஜனாதிபதி அலுவலகம், ஷங்ரிலா பசுமை மைதானம் மற்றும் கங்காராம விகாரை ஆகியவற்றை மையமாகக் கொண்டு நடத்தப்படவுள்ளது. 06

## இராஜ மகேந்திரனுக்கு நினைவு முத்திரை



மஹாராஜா நிறுவனர் மற்றும் கம்மெத்த ஸ்தாபகர் மறைந்த ஆர்.இராஜமகேந்திரனின் 81ஆவது ஜனன தின நினைவை முன்னிட்டு, நினைவு முத்திரை 06

## வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த தாய், தந்தை, மகன் படுகொலை

### மீரிகம, மாலதெனிய பகுதியில் கோரம்; கொலையாளியான மருமகன் அதிரடி கைது



வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரை கொலை செய்து பணம் மற்றும் தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன. இச்சம்பவம், மீரிகம மாலதெனிய பகுதியில் நேற்று அதிகாலை பதிவாகியுள்ளது. மூவரையும் கொலை செய்த நபர் சைக்கிள் ஒன்றில் தப்பிச் சென்ற போது, பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். 06

## யுத்த வெற்றி விழா: 3,146 பேருக்கு பதவி உயர்வு

யுத்த வெற்றி தினத்தையிட்டு இலங்கை கடற்படையின் 3,146 பேருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

நாட்டில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு நேற்றுடன் 15 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இதனை முன்னிட்டு 3,146 கடற்படையினருக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி மற்றும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த 06

## தமிழர் தரப்பு பொது வேட்பாளர் யோசனையை ஏற்க முடியாது

### மாவை, சுமந்திரனுக்கு சம்பந்தனின் நிலைப்பாடு தெரிவிப்பு



ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தும் யோசனையை ஏற்றுக்கொள்ள முடியாதென தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவர் இரா. சம்பந்தன், தெரிவித்துள்ளார். 06

## குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளிடம் கடவுச்சீட்டை ஒப்படைத்தார் டயனா

### விரைவில் சட்ட நடவடிக்கை



முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தனது கடவுச்சீட்டை குடிவரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளார். நீதிமன்ற உத்தரவுக்கமையவே அவர், பயன்பாட்டிலுள்ள தனது கடவுச்சீட்டை ஒப்படைத்துள்ளார்.

டயனா கமகேவின் பாராளுமன்ற உறுப்புரிமையை இரத்துசெய்து உயர் நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டிருந்தது. டயனா கமகே இலங்கைப் பிரஜை இல்லையென்பதால், அவர் 06

## நாட்டில் கடும் மழை ஆறுகளில் நீர் மட்டம் உயர்வு

### சிவப்பு எச்சரிக்கை விடுப்பு




நாட்டில் பரவலாக பெய்துவரும் கடும் மழை காரணமாக வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கையை விடுத்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று அவசரமாக விடுத்துள்ள புதிய அறிவித்தலிலேயே, இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேல் மாகாணம் மற்றும் வடமேல் மாகாணங்களில் சில 06

## சகல இலங்கையருடனும் அமெரிக்கா துணை நிற்கும்



இலங்கையின் உள்நாட்டுப் போர் முடிவடைந்து 15 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளதையடுத்து, ஒன்றிணைந்த எதிர்காலத்துக்கான மீளெழுச்சி மற்றும் நம்பிக்கையை பிரதிபலிக்கும் வகையில், அனைத்து இலங்கையருடனும் அமெரிக்கா துணை நிற்பதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், தனது உத்தியோகபூர்வ X வலைத்தள பக்கத்தில் இதனை குறிப்பிட்டுள்ளார். 06

## டெங்கு: 04 மாதங்களில் 23,731 நோயாளர்கள் பதிவு



டெங்கு தீவிரமடைந்துள்ளதால் இவ்வருடம் இதுவரை 23,731 டெங்கு நோயாளர் அடையாளம் காணப்பட்டதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்வரும் நாட்களில் தொடர் மழை பெய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், டெங்கு நோய் பரவல் மேலும் 06

# நுவரெலியா சீதாஎலிய ஸ்ரீ சீதையம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம்





நுவரெலியா சீதாஎலிய ஸ்ரீ சீதையம்மன் ஆலய மஹா கும்பாபிஷேக நிகழ்வு நேற்று நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஆலய தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. கும்பாபிஷேக நிகழ்வில் வாழும் கலை அமைப்பின் நிறுவனரும் சமாதான தூதுவருமான ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி, கோயம்புத்தூர் சுவாமி ஜகதாத்மானந்தா சரஸ்வதி, பாராளுமன்ற உறுப்பினர்களான வேலுகுமார், வடிவேல் சுரேஷ் சீ.பி.ரட்ணாயக்க, மருதபாண்டி ராமேஸ்வரன் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜா, பிரதித் தூதுவர் டொக்டர் எஸ்.ஆதிரா உட்பட இந்தியா, நேபாளம், ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளில் இருந்து வருகை தந்தவர்களும் பெருந்திரளான பக்தர்களும் கலந்து கொண்டனர்.

நுவரெலியா தியாகு, தலவாக்கலை கேதீஸ்





















# குருதேவ் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் பிரதமர் தினேஷுடன் சந்திப்பு

### இலவசக் கல்வி நிலையங்களை நிறுவ விருப்பம் தெரிவிப்பு



உலகளாவிய சமாதானத் தூதுவர், ஆன்மீகத் தலைவர், வாழும் கலை மன்றத்தின் நிறுவுநர் குருதேவ் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் (18) அலரி மாளிகையில் பிரதமர் தினேஷ் குணவர்தனவைச் சந்தித்து விசேட கலந்துரையாடலில், ஈடுபட்டார். இளைஞர்,யுவதிகளின் திறன்களை மேம்படுத்த இலங்கையில் இலவச கல்வி நிலையங்களை நிறுவுவதற்கு தனது மன்றம் திட்டமிட்டுள்ளதாக குருதேவ் கூறினார்.

மட்டக்களப்பு மற்றும் வெல்லவாயவில் இரண்டு சிறுவர் இல்லங்களை இம்மன்றம் நிறுவியுள்ளது. இந்நிலையில்,

ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனத்தை நிறுவவும் இவர் விருப்பம் தெரிவித்தார். இந்நிகழ்வில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்களான ஜயந்த வீரசிங்க, யதாமினி குணவர்த்தன, கலாநிதி என். இராமானுஜம், வினோத் முனசிங்க, மதுராவ் மற்றும் வாழும் கலை மன்றத்தின் முன்னணி உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இந்தோனேசியாவில் ஜனாதிபதி ரணிலுக்கு சிறப்பான வரவேற்பு

### மாநாட்டில் இன்று ஜனாதிபதி சிறப்புரை

இந்தோனேசியாவில் நடைபெறவுள்ள 10 ஆவது உலக நீர் உச்சி மாநாட்டின் உயர்மட்ட அமர்வில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாலியிலுள்ள குஸ்தி நுரா ராய் சர்வதேச விமான நிலையத்தை (Gusti Ngurah Rai) (18) சென்றடைந்தார்.

இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விடோடோவின் (Joko Widodo) அழைப்பின் பேரில், ஜனாதிபதி இந்த விஜயத்தை மேற்கொண்டிருக்கிறார். இதன்போது விமான நிலையத்தில் ஜனாதிபதிக்கு இந்தோனேசிய எரிசக்தி மற்றும் கனிம வள அமைச்சர் அரிபின் தஸ்ரிஃப் (Arifin Tasrif) இந்தோனேசியாவுக்கான இலங்கைத் தூதுவர், அட்மிரல் பேராசிரியர் ஜெயநாத் கொழம்பகே, இலங்கைக்கான இந்தோனேசியத் தூதுவர் தேவி குஸ்டினா டோபிங் (Devi Gustina Tobing) ஆகியோரால் ஜனாதிபதிக்கு சிறப்பு வரவேற்பளிக்கப் பட்டது. இதன் போது இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன், பாரம்பரிய பாலி நடனக் கலைஞர்களின் நடன நிகழ்வும் இடம்பெற்றது. பத்தாவது உலக நீர் உச்சி மாநாட்டின் உயர்மட்ட அமர்வு, மே 18 20 வரை இந்தோனேசியாவின் பாலி நகரில் "கூட்டு செழுமைக்கான நீர்" என்ற தொனிப்பொருளில் நடைபெறுகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று (20) இம்மாநாட்டில் சிறப்புரை ஆற்றவுள்ளார்.



# தினகரன் 92 வருடங்களுக்கு முன்

## தினகரன் இன்று 20 மே 1932



கள்ளச் செக்கு வழக்கு

எதிரிக்குக் காவல் தண்டனை

"கொழும்பு, 19 வ

நேற்று அசைஸ் கோர்ட்டில் சர். சொலமன் டயஸ் பண்டாரநாயகாவின் கீழ்ப் பல காலமாக கிளார்க்காக இருந்த பீ, கே. அல்பர்ட் ரொட்ரிகோ ஜயசேனா என்பவர் கள்ளமாகச் சில செக்குகளை மாற்றினார் என்ற குற்றச் சாட்டின் பேரில் அவர்மீது தொடரப்பட்ட வழக்கு விசாரணை செய்யப்பட்டுத் தீர்ப்புக் கூறப்பட்டது. ஜூரிமார்கள் சர்வ சம்மதமாக எதிரி குற்றவாளியெனக் கூறினார்கள்.

## கள்ளச் செக்கு வழக்கு

### எதிரிக்குக் காவல் தண்டனை

நேற்று அசைஸ் கோர்ட்டில் சர். சொலமன் டயஸ் பண்டாரநாயகாவின் கீழ்ப் பல காலமாக கிளார்க்காக இருந்த பீ, கே. அல்பர்ட் ரொட்ரிகோ ஜயசேனா என்பவர் கள்ளமாகச் சில செக்குகளை மாற்றினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவர்மீது தொடரப்பட்ட வழக்கு விசாரணை செய்யப்பட்டுத் தீர்ப்புக் கூறப்பட்டது. ஜூரிமார்கள் சர்வ சம்மதமாக எதிரி குற்றவாளியெனக் கூறினார்கள்.

**(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)**

# வடமேல் மாகாண ஆளுநருடன் சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் சந்திப்பு



வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட்டை மரியாதை நிமித்தம் வடமேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் டபிள்யூகீத்சிறி ஜயலத் சந்தித்து கலந்துரையாடினார். இதன்போது, வடமேல் மாகாணத்திலுள்ள குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களின் தற்போதைய பாதுகாப்பு நிலைமைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

**படம்: கற்பிட்டி (தினகரன் விஷேட நிருபர்)**

# ஹிப்ளு மத்ரஸா பள்ளிவாசலில் தொடராக இயங்கும்

அக்கரைப்பற்று ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் இயங்கும் ஹிப்ளு மத்தரஸா தொடர்ந்தும் பெரிய பள்ளிவாசலிலேயே இயங்கும் என, பள்ளிவாசல் நிர்வாகம் அறிவித்துள்ளது. இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் ஆலோசனை மற்றும் அறிவுறுத்துலுக்கிணங்க இந்த ஹிப்ளு மத்ரஸாவை தொடர்ந்தும் பள்ளிவாசலில் நடத்துவதற்கு நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

வேறு இடத்துக்கு இந்த மத்ரஸாவை கொண்டு செல்வதற்கு சிலர் எடுக்கும் முயற்சிகள் குறித்து, அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் கவனத்துக்கு கொண்டுசெல்லப்பட்டது. இதை ஏற்றுக்கொள்ள முடியாதென அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை அறிவித்துள்ளது.

எனவே, மாணவர்கள்,பெற்றோர்கள் மற்றும் சமூக முன்னோடிகள் இவ்விடயத்தில் கரிசனை செலுத்தி, தொடர்ந்தும் பள்ளிவாசலில் இந்த மத்ரஸாவை நடத்துவதற்கு ஒத்துழைக்குமாறு அக்கரைப்பற்று ஜும்ஆபெரியபள்ளிவாசல் நிர்வாக சபை கோரியுள்ளது.

# வேப்ப மரத்திலிருந்து பால் வடியும் அதிசயம்

**(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)**



வேப்ப மரத்திலிருந்து பால் வழிந்தோடும் அதிசய சம்பவம் அக்கரைப்பற்று பொத்துவில் வீதியில் நிகழ்ந்துள்ளது. இவ்வீதியில் அமைந்துள்ள 241 வது பிரிகேட் இராணுவ முகாம் சிற்றுண்டிச்சாலை முன்றலில் உள்ள வேப்ப மரத்திலே, பால் வடிந்தோடியுள்ளது. கடந்த ஒரு வார காலமாக இம்மரத்திலிருந்து பால் வடிவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். இளம் மரத்திலிருந்து வடிந்தோடும் இந்த அதிசயத்தை பார்வையிட மக்கள ஆர்வத்துடன் இங்கு வருகின்றனர்.

நுரையாக பால் வழிந்தோடி மரத்தினடியில் குவியும் காட்சி மக்களை பரவசப்படுத்தியுள்ளது.


## B.O.C. டிரவல்ஸ் (பிறைவெட்) லிமிடெட்



### ஆர்வ வெளிப்பாட்டுக்கான அழைப்பு

### வாய்ப்புள்ள முதலீட்டாளர்களின் முன் தகைமைக்கான அழைப்பு

1. இலங்கை வங்கியின் துணை நிறுவனம் ஒன்றான B.O.C. டிரவல்ஸ் (பிறைவெட்) லிமிடெட்டின் சாத்தியமான கையகப்படுத்தலுக்காக முன் தகைமை விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு வாய்ப்புள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களிடம் இருந்து (தனிநபர்கள்/ கூட்டிணைப்புகள்/ கூட்டு முயற்சிகள்/ கூட்டுருக் குழுமங்கள்) ஆர்வ வெளிப்பாட்டு அழைப்பு விடுக்கப்படுகிறது.

   B.O.C. டிரவல்ஸ் (பிறைவெட்) லிமிடெட் ஆனது IATA (சர்வதேச விமானப் போக்குவரத்து சம்மேளனம்) - சான்றுபெற்ற இலங்கை வரும் சுற்றுலா பயணிகள் அல்லது இலங்கை குடியிருப்பாளர்கள் வெளிநாடு செல்வதற்கான பொது விற்பனை முகவர் மற்றும் வசதிகளை வழங்கும் பயண அமைப்பு மற்றும் பயண முகவர் வர்த்தக விமான சேவை, சுற்றுப்பயண நடத்துனராகும்.

2. வாய்ப்புள்ள முதலீட்டாளர்கள் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் வங்கிக் கணக்கிற்கு நிதிப் பரிவர்த்தனை அல்லது நேரடி வைப்பு மூலம் மீளளிக்கப்படாத கட்டணம் ஒன்றாக 6,000 இலங்கை ரூபாவை (20 அமெரிக்க டொலர்)(வங்கிக் கட்டணங்கள் மற்றும் மற்ற வரிகள் தவிர்த்து) செலுத்தி https://www.bdo.lk/en-gb/home என்ற முகவரியில் முன் தகைமை விண்ணப்ப ஆவணத்தை பெறுவதற்கு கோரப்படுகின்றனர். இந்த ஆவணத்தை 2024 மே 20 ஆம் திகதி தொடக்கம் 2024 ஜூன் 10 ஆம் திகதி வரை வேலை நாட்களில் 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை கீழ் குறிப்பிடப்பட்ட முகவரியில் இருந்து அல்லது கட்டணத்தை செலுத்தி மேலுள்ள இணையதள முகவரியில் இருந்து தரவிறக்கம் செய்ய முடியும்.

| | |
|---|---|
| கணக்கு பெயர் | BDO Consulting (Pvt.) Ltd. |
| வங்கியின் பெயர் | மக்கள் வங்கி, தலைமையகக் கிளை, கொழும்பு 02. இலங்கை |
| கணக்கு இல. | 204100120006879 |
| Sort Code | 7135-204 |
| Swift Code | PSBKLKLX |

3. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு BDO Consulting (Pvt.) Ltd தலைமை அலுவலகத்தில் 2024 ஜூன் 06 ஆம் திகதி 10.00 மணிக்கு இடம்பெறும். வாய்ப்புள்ள விலைமனுதாரர்கள் ஒன்லைன் மூலமும் இணைய முடியும்.

4. முன் தகைமை விண்ணப்ப ஆவணங்கள் மற்றும் அது சார்ந்த விளக்கங்களை தயாரிப்பதை வாய்ப்புள்ள முதலீட்டாளரின் செலவில் தெளிவாக மற்றும் வெவ்வேறாக மேற்கொள்ளல் வேண்டும்.

5. வாய்ப்புள்ள முதலீட்டாளர்களின் முன் தகைமைக்கான விண்ணப்பத்தை கொண்ட முத்திரை பொறிக்கப்பட்ட உறைகளை பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது விரைதூதர் மூலம் அல்லது வேலை நாட்களில் இலங்கை, கொழும்பு 02, சேர் சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை, 65/2, சாட்டர் ஹவுஸ், BDO Consulting (Pvt.) Ltd, இரண்டாவது மாடியில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும்.

6. விண்ணப்பங்கள் 2024 ஜூன் 18 ஆம் திகதி 14.00 மணிக்கு திறக்கப்படும். 2024 ஜூன் 18 ஆம் திகதி 14.00 மணிக்கு அல்லது தாமதித்து கிடைக்கும் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாது திருப்பித் தரப்படும்.

7. எந்த ஒரு அல்லது அனைத்து விண்ணப்பங்கள் அல்லது ஒட்டுமொத்த முன்மொழிவையும் இரத்துச் செய்தல் மற்றும் எந்த காரணமும் கூறாது முன்மொழிவு ஒன்றின் எந்த ஒரு பகுதியையும் ஏற்கும் உரிமை BDO Consulting (Pvt.) Ltd வசமானது.

**முகவரி: BDO Consulting (Pvt.) Ltd இலங்கை வங்கியின் பரிவர்த்தனை ஆலோசகர்**
**சாட்டர் ஹவுஸ்,**
**இல. 65/2, சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை,**
**கொழும்பு 02, இலங்கை.**
**தொ.: +94 77 326 1627 (முகாமைத்துவ பணிப்பாளர்)**
**+94 77 368 4625 (பணிப்பாளர்)**
**+94 11-2421878-79-70**
**மின்னஞ்சல்: buddhip@bdo.lk**










உங்களுக்கு மிகவும் வசதியான, நட்புறவுடனான, வினைத்திறனுடனான சேவையை உறுதி செய்து கொள்ளும் நோக்கில் லேக் ஹவுஸின்
புதிய விளம்பர நிலையம்
2024 மே மாதம் 21ஆம் திகதி முதல்
இல. 72, ஹைலெவல் வீதி,
மஹரகமையில் திறக்கப்படவுள்ளது....

பத்திரிகைகளில் பிரசுரித்துக்கொள்ள வேண்டிய அரச மற்றும் தனியார்துறை நிறுவனங்களின் சகல விளம்பரங்களையும் சிறு விளம்பரங்கள் மற்றும் இணையதளத்திற்கான விளம்பரங்களையும் இந்த நிலையத்தின் ஊடாக மிகவும் இலகுவாக பிரசுரித்துக்கொள்ளலாம்.

- வாகன தரிப்பிட வசதி
- வங்கி அட்டைகள் மூலம் பணம் செலுத்தும் வசதி

லேக் ஹவுஸ் விளம்பர நிலையம்,
இல. 72, ஹைலெவல் வீதி, மஹரகம.
தொலைபேசி: 011 2828 114 / 071 9879094
maharagama.advt@lakehouse.lk

வார நாட்களில் (அரச விடுமுறை நாட்கள் தவிர) மு.ப. 8.30 முதல் பி.ப. 5.00 மணி வரை திறந்திருக்கும்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் வைகாசி மாதம் 07ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 துல்கஃதா பிறை 11

### குறள் தரும் சிந்தனை



அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று

*மனத்தில் அன்பு இல்லாதவருடைய வாழ்க்கை, பாலைவனத்தில் பட்டமரம் தளிர்த்தது போன்றது.*

## சீரற்ற காலநிலை நிலவுவதால் அவதானம் பேணுவது அவசியம்

நாட்டில் மழையுடன் கூடிய காலநிலை ஆரம்பமாகியுள்ளது. வளிமண்டலவியல் திணைக்களத்தின் அறிவிப்பின்படி, கடந்த 24 மணித்தியாலயங்களில் அதிகூடிய மழைவீழ்ச்சி மத்துகம பிரதேசத்தில் கிடைக்கப்பெற்றுள்ளது. அதேவேளை நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் மழை பெய்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் அறிவிப்பில் களுத்துறை, மத்துகவில் 114.00 மில்லிமீற்றர், கொழும்பு, கொட்டவெகரவில் 108.00 மி.மீ, கம்பஹா, அலவலவில் 104.00 மி.மீ, கேகாலை, வரக்காபொலவில் 103.50 மி.மீ, காலி, எல்பிட்டியவில் 102.00 மி.மீ, களுத்துறை, கல்வலவில் 98.50 மி.மீ, கண்டி, பல்லேபோலவில் 61.00 மி.மீ என்றபடி அதிகூடிய மழைவீழ்ச்சி கிடைக்கப்பெற்றதாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

இந்த மழைக்காலநிலையுடன் சேர்த்து இரத்தினபுரியில் ஏற்பட்ட கடும் காற்றினால் மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 12 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களது வீடுகள் பகுதியளவில் சேதங்களுக்கு உள்ளாகியுள்ளன என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்திருக்கிறது. அதேவேளை வட மாகாணத்தின் சில பிரதேசங்களிலும் கடும் காற்றினால் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இவை இவ்வாறிருக்க, இந்த சீரற்ற காலநிலையின் விளைவாக நாட்டின் தாழ்நிலப் பிரதேசங்களில் வெள்ளநிலையும் மலைநாட்டிலும் மலைசார்ந்த பிரதேசங்களிலும் மண்சரிவும் ஏற்படக்கூடிய அபாயமும் ஏற்பட்டுள்ளது.

நீர்ப்பாசனத் திணைக்களத் தரவுகளின்படி, நாட்டிலுள்ள சில கங்கைகளின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. அவற்றில் களுகங்கை, ஜின் கங்கை, நில்வளா கங்கை, மாதுறு ஓயா, மகாவலி கங்கை, யான் ஓயா, மா ஓயா, தெதுரு ஓயா, அத்தனகலு ஓயா என்பவலற்றின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

அநுராதபுரம் மாவட்டத்தின் இராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் இரண்டு வான்கதவுகளும் அங்கமுவ நீர்த்தேக்கத்தின் ஒரு வான்கதவும் மேலதிக நீரை வெளியேற்றவென திறந்து விடப்பட்டுள்ளன.

அதனால் வளிமண்டலவியல் திணைக்களத்தின் அறிவிப்பின்படி, சீரற்ற காலநிலை நீடிக்குமாயின் கங்கைகளின் இரு மருங்குகளிலும் தாழ்நிலப் பிரதேசங்களிலும் வெள்ளம் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் நிலவுகின்றது. இப்பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் விழிப்புடன் இருப்பது மிக அவசியம் என்று பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

மேலும் நேற்றைய மழைவீழ்ச்சியினால் காலி, புத்தளம், களுத்துறை உள்ளிட்ட சில மாவட்டங்களின் பல வீதிகள் நீரில் மூழ்கின. அதனால் வழமையான போக்குவரத்துக்கும் இடையூறுகள் ஏற்பட்டன. பிரதேசவாசிகளின் ஒத்துழைப்புடன் அனர்த்த முகாமைத்துவ நிலைய மாவட்ட மட்ட உத்தியோகத்தர்கள் அவற்றை துரிதகதியில் சீர்செய்துள்ளனர்.

இச்சீரற்ற காலநிலை காரணமாக மலைநாட்டிலும் மலைசார்ந்த பிரதேசங்களிலும் மண்சரிவுகள் ஏற்படுவதற்கான அச்சுறுத்தல்கள் நிலவுவதாகத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

அந்த வகையில் பதுளை மாவட்டத்தின் ஹல்துமுல்ல, ஹப்புத்தளை, ஹாலிஎல, எல்ல ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் கண்டி மாவட்டத்தில் யட்டிநுவர, உடுநுவர, பஸ்பாகே கோரளை, கங்க இஹல கோரளை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும், கொழும்பு மாவட்டத்தில் சீதாவக்க பிரதேச செயலகப் பிரிவுக்கும் மண்சரிவு முன்னெச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. அத்தோடு கேகாலை, களுத்துறை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களது பல பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் இதே மண்சரிவு முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

அதனால் மலைநாட்டிலும் மலைசார்ந்த பிரதேசங்களிலும் வாழும் மக்கள் நிலத்திலும், வீட்டுச் சுவர்களிலும் திடீரென வெடிப்புககள் ஏற்படுதல், அவை விரிவடைதல், புதிய நீரூற்றுக்கள் உருவாதல், அந்த நீரூற்றுக்களில் சேற்றுநீர் வெளிப்படல், மின் தூண்களும் உயர்ந்த மரங்களும் திடீரென சரிதல் போன்றவாறான அறிகுறிகள் தென்படுமாயின் மிகுந்த விழிப்புடன் செயற்பட வேண்டும். அவ்வாறான அறிகுறிகள் வெளிப்படுமாயின் அப்பிரதேசங்களில் இருந்து பாதுகாப்பான இடங்களை நோக்கி விரைவாக நகர்வதோடு, அந்த அறிகுறிகள் குறித்து கிராம உத்தியோகத்தருக்கும் பிரதேச செயலாளருக்கும் அறிவிக்கவும் தவறக்கூடாது.

தற்போதைய சீரற்ற காலநிலையினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களையும் சேதங்களையும் குறைப்பதற்கும் தவிர்ப்பதற்கும் தேவையான அறிவுறுத்தல் மற்றும் விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை அனர்த்த முகாமைத்துவ நிலையம் முன்னெடுத்துள்ளது. அத்தோடு பாதிப்புக்களுக்கு உள்ளாகக்கூடிய மக்களுக்கு உடனுக்குடன் நிவாரணங்களும் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. அதற்குத் தேவையான அறிவுறுத்தல்களை அனர்த்த முகாமைத்துவ நிலையம் மாவட்ட மட்ட அலுவலகங்களுக்கு வழங்கியும் உள்ளது.

ஆகவே தற்போதைய சீரற்ற காலநிலை குறித்து கவனயீனமாகவோ அசிரத்தையுடனோ நடந்து கொள்ளக்கூடாது. அது மக்கள் முன்பாக இருக்கும் பாரிய பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# கொத்தடுவ புதிய ஈரநிலப் பூங்கா அபிவிருத்திப் பணிகள் ஆரம்பம்



கொத்தடுவ புதிய ஈரநில பூங்கா அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கொழும்பு மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்ட ஈரநிலங்களின் அபிவிருத்தியின் கீழ், கொத்தடுவ ஈரநிலத்தை அபிவிருத்தி செய்வதில் இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் கவனம் செலுத்தியுள்ளது.

தற்போது தியசரு, பெத்தகான, கொட்டுபெம்ம ஆகிய நகர ஈரநிலங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு பொதுமக்களின் பாவனைக்காக திறக்கப்பட்டுள்ளன. சுற்றுச்சூழலின் சமநிலையைப் பேணுதல், பரபரப்பான நகரத்தில் பொதுமக்களின் மனநலத்தைப் பேணுதல், தடுத்து நிறுத்துதல், வெள்ளப் பெருக்கு நேரங்களில் நீரை சேர்த்து வைத்துக் கொள்வது போன்றவற்றில் கவனம் செலுத்தி, ஈரநிலங்களை பலவந்தமாக பிடித்துக் கொள்வதைத் தடுத்து கொத்தட்டுவ ஈரநிலப் பூங்கா உருவாக்கப்படும்.

பலவந்தமாக ஈரநிலங்களில் கட்டடங்களைக் கட்டுவதன் காரணமாக 'பெரிய கொழும்பு வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ் உள்ள நீரேந்து பகுதிகளாக அரசு கையகப்படுத்தியுள்ள தாழ்நிலங்கள்' நாளாந்தம் குறைந்து கொண்டு வருகின்றன. அவற்றைப் பாதுகாத்து ஈரநிலங்களை புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவதன் மூலம் அவற்றின் நிலைபேற்றுத் தன்மையை உறுதிப்படுத்துவது என்ற இலக்கின் கீழ் இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் கீழ் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்திற்காக 180 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வருட முடிவின் போது பூங்காவின் வேலைகளை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த 35 ஹெக்டேயர் ஈரநிலத்தைச் சுற்றியுள்ள 4 கி.மீ நீளத்தில் 3.5 கி.மீ நீளத்தில் நடைபாதை தற்போது கட்டப்பட்டுள்ளது. கொத்தடுவ புதிய ஈரநிலப் பூங்காவில் வண்ணத்துப்பூச்சி தோட்டம் மற்றும் பறவைத் தோட்டங்கள், துவிச்சக்கரவண்டி பாதைகள், உணவகங்கள், வனவிலங்கு மையம், தோட்டங்களின் ஊடாக நடைபாலங்கள் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்குரிய அனுபவங்கள் தனியார் துறையின் ஆதரவுடன் செயல்படுத்தப்படவுள்ளன.

ஈரநிலங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, இந்தச் சூழலில் ஈரநிலங்கள் குறித்த ஆய்வுகளை மேற்கொள்ள சிறப்பு ஆய்வு மையம் நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் ஈரநிலங்கள் பற்றிய கல்வியை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

**ஈரநிலங்கள் மற்றும் தாழ்நிலங்களின் அபிவிருத்திக்காக இன்னும் பல திட்டங்கள்**



1991 இல் ரம்சா மாநாட்டில் உறுப்பினரான பின்னர், இலங்கை ஈரநிலங்களுக்கு அதிக கவனம் செலுத்தியதுடன் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சுற்றுலாத் துறையில் அதிக கவனம் செலுத்தியது. அதன்படி, உலகின் முதல் ஈரநில தலைநகராக கொழும்பு மாவட்டம் அடையாளம் காணப்பட்டது.

சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதற்காக இலங்கையில் உள்ள அனைத்து ஈரநிலங்களையும் அபிவிருத்தி செய்து பராமரிப்பதில் விசேட கவனம் செலுத்துமாறு இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் ஈரநிலங்கள் மற்றும் தாழ்நிலங்களின் அபிவிருத்திக்காக பல திட்டங்களை ஆரம்பித்துள்ளது.

ஈரநில கார்பன் வரிசைப்படுத்தல் கற்கைநெறி மார்ச் மாதத்தில் தொடங்கி செப்டம்பரில் முடிவடைய திட்டமிடப்பட்டுள்ளதாக கூட்டுத்தாபனம் மேலும் கூறியுள்ளது.

ஏனைய இரண்டு திட்டங்களுக்காக ஈரநிலப் பாதுகாப்பிற்கான குறிப்பிட்ட ஈரநில முகாமைத்துவ மூலோபாயங்களை நடைமுறைப்படுத்த 2 மில்லியன் ரூபாவும், சட்டவிரோத நடவடிக்கைகளில் இருந்து ஈரநிலங்களைப் பாதுகாப்பதற்கு 20 மில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளதாக இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் ஈரநிலங்களைப் பாதுகாத்தல் மற்றும் ஈரநிலங்கள் மற்றும் தாழ்நிலங்களையும் அபிவிருத்தி செய்யும் நோக்கில் மேலும் 3 திட்டங்களை நடைமுறைப்படுத்துகிறது.

கொழும்பு நகரில் நீரின் தரத்தை மேம்படுத்துவதற்கான திட்டம், ஈரநில ஆக்கிரமிப்பை தடுப்பதற்கான திட்டம் மற்றும் களு ஓய மலையின் கழிவு நீர் அகற்றல் மற்றும் சூழலை அபிவிருத்தி செய்யும் திட்டம் என்பனவாகும். அது 2030 ஆம் ஆண்டு முடிக்கப்படுவதற்கு இருக்கின்றது. இந்த திட்டங்களுக்காகஉ முறையே 4 மில்லியன் ரூபா, 21மில்லியன் ரூபா, 2.5 மில்லன் ரூபா பணம் செலவிடப்படவுள்ளன.

கொழும்பு நகரின் நீரின் தரத்தை மேம்படுத்தும் திட்டம் 22.08% முன்னேற்றத்தை எட்டியுள்ளதாகவும் களுஓயா மழைநீர் வடிகால் மற்றும் சுற்றுச்சூழலை மேம்படுத்தும் திட்டம் ஏற்கனவே 40% முன்னேற்றத்தை எட்டியுள்ளதாகவும் இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

**முனீரா அபூபக்கர்...**

# வடமாகாணத்தில் இயலாமையுடைய நபர்களை வழிநடத்தும் குழுக்கள் நியமிக்கப்பட வேண்டும்

**மாற்றுத்திறனாளிகள் பற்றிய பாராளுமன்ற ஒன்றியத்தின் தலைவர் டலஸ் அழகப்பெரும எம்.பி கருத்து**

இயலாமையுடைய நபர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், பிரச்சினைகள், தற்பொழுது காணப்படும் வாய்ப்புக்கள் மற்றும் அவற்றை உரிய முறையில் நிவர்த்தி செய்வதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் முன்மொழிவுகள் பற்றிய தகவல்களைக் கலந்துரையாடுவதற்கான விசேட செயலமர்வு மாற்றுத்திறனாளிகள் பற்றிய பாராளுமன்ற ஒன்றியத்தின் தலைமையில் அண்மையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

மாற்றுத்திறனாளிகள் பற்றிய பாராளுமன்ற ஒன்றியத்தின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தலைமையில் நடைபெற்ற இந்த செயலமர்வில் ஒன்றியத்தின் இணைத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே, கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், வடமாகாண சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் எம். வாகீசன், பூநகரி, கண்டாவளை, கரச்சி மற்றும் பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளின் பிரதேச செயலாளர்கள், தேசிய ஜனநாயக நிறுவனத்தின் (NDI) ஆலோசகர் ஷியாமா சல்காது, இயலாமையுடைய நபர்களுக்கான சங்கங்களின் ஒன்றிணைந்த முன்னணியின் தலைவர் ரசாஞ்சலி பதிரகே உள்ளிட்ட பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இயலாமையுடைய நபர்களின் சங்கங்களின் பிரதிநிதிகள், இயலாமையுடைய பிள்ளைகளுக்கு கல்வி வழங்கும் தரப்பினர் உள்ளிட்ட பலரும் இங்கு பங்கேற்றிருந்தனர்.



நாட்டின் நிர்வாகக் கட்டமைப்பு மற்றும் சமூகத்தில் இயலாமையுடைய நபர்களுக்கான ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்கான பொறிமுறையை நிறுவுவதற்குத் தேவையான தகவல்களும் முன்மொழிவுகளும் சேகரிக்கப்பட்டன.

இதில் கலந்துகொண்ட இயலாமையுடைய நபர்களின் அமைப்புக்களின் பிரதிநிதிகள் தங்களது கருத்துக்கள், ஆலோசனை மற்றும் பிரச்சினைகளை எடுத்துரைத்தனர்.



இங்கு கருத்துத் தெரிவித்த ஒன்றியத்தின் தலைவர் டலஸ் அழகப்பெரும எம்.பி குறிப்பிடுகையில், வடமாகாணத்தில் சகல மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கள் மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவிலும் இயலாமையுடைய நபர்களை வழிநடத்துவதற்கான குழுவொன்றை நியமிக்குமாறும், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் இயலாமையுடைய நபர்களுக்குக் காணப்படும் பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடுவதற்கு விசேட இடத்தை ஒதுக்குமாறும் கோரிக்கைவிடுத்தார். அத்துடன், இந்த நடைமுறை நாட்டின் சகல மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

2012ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டின் புள்ளிவிபரங்களுக்கு அமைய ஒட்டுமொத்த சனத்தொகையில் 8.2% அதாவது ஏறத்தாழ 17 இலட்சம் பேர் இயலாமையுடைய நபர்களாக அடையாளம் காணப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். ஆனால், ஒவ்வொரு மாவட்டத்துக்கும் பிராந்தியத்துக்கும் ஏற்ற வகையில் தரவுகளைப் பார்க்கும் போது அதில் வேறுபாடுகள் இருப்பதாகவும் தலைவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், இயலாமையுடைய நபர்கள் பொதுப் போக்குவரத்தில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பது தொடர்பில் இங்கு வருகை தந்திருந்த பலரும் முறைப்பாடுகளைத் தெரிவித்தனர். இந்நாட்டின் போக்குவரத்து சேவையில் இணைப்பதற்காக பஸ்கள் விரைவில் இறக்குமதி செய்யப்படவிருப்பதாகவும், அவ்வாறு இறக்குமதி செய்யப்படும் பஸ்களில் இயலாமை உடைய நபர்களின் தேவைக்குரிய பஸ்களையும் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஒன்றியத்தின் இணைத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே இங்கு தெரிவித்தார்.

**எம்.ஜயலத் பெரேரா...**
*பதில் பணிப்பாளர் (சட்டவாக்க சேவைகள்) பாராளுமன்றம்*

# தமிழ் இலக்கியத்தின் முற்போக்கு எழுத்தாளர் செம்பியன் செல்வன்

அத்தியடியிலும் , நீராவியிடியிலும் என் இலக்கிய ஆசான் செம்பியன் செல்வனுடன் அளவளாவிய தருணங்கள் ஆயிரம். இலங்கையின் பன்முக ஆளுமை கொண்ட எழுத்துக்கலைஞன் செம்பியன் செல்வன் எனது நான்காவது கவிதைத் தொகுதியான 1989 இல் வெளியான 'உறக்கந்தேடும் உலகிற்காய்' என்ற நூலுக்கு முன்னுரையையும் எழுதியுள்ளார்.

நாவல், சிறுகதை, நாடகம், உருவகம், குறுங்கதை, திரைப்படம், சஞ்சிகை என தமிழ் இலக்கியத்தின் பல்வேறு பிரிவுகளிலும் தனது ஆளுமையினைப் பதித்தவர் செம்பியன் செல்வன். பன்முக ஆளுமை கொண்டவர் அவர். இராஜகோபால் என்ற இயற்பெயருடைய செம்பியன் செல்வன் (ஜனவரி 1, 1943_ மே 20, 2005) புகழ்பெற்ற எழுத்தாளர்.

அவர் இளவயதிலேயே சிறந்த வாசிப்பாளனாக இருந்தார்.1960 இல் பேராதனை பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்று புவியியல் சிறப்புக்கலைப் பட்டதாரியானார்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட இலக்கிய மறுமலர்ச்சியால் உருவாக்கப்பட்டவர்களில் செம்பியன் முக்கியமானவர். இந்தப் பல்கலைக்கழகச் சூழலில் ஆற்றல்மிக்க எழுத்தாளர் கூட்டம் செம்பியன் செல்வனின் நண்பர்களாக இருந்துள்ளனர்.

பட்டப்படிப்புக்காக 1960களில் பேராதனை பல்கலைக்கழகத்துக்குள் இவருடன் செங்கை ஆழியான், துருவன், அங்கையன் கைலாசநாதன், செ. கதிர்காமநாதன், செ. யோகநாதன், கலாபரமேஸ்வரன், நவசோதி, குந்தவை, ஆகியோர் இணைந்து 'பல்கலை வெளியீடு' என்னும் அமைப்பை உருவாக்கி ஆண்டுக்கொரு சிறுகதைத் தொகுதியை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டனர். மேலும் 1963ஆம் ஆண்டு ஜனவரியில் பத்து சிறு கதைகளைத் தாங்கி வெளிவந்த 'விண்ணும் மண்ணும்' செம்பியன் செல்வனால் தொகுக்கப்பட்டது.



**செம்பியன் செல்வன் படைப்புகள்:**

சர்ப்பவியூகம் சிறுகதைத்தொகுதி, அமைதியின் இறகுகள் (சிறுகதைகள்),குறுங்கதைகள் நூறு (குறுங்கதைகள்), கானகத்தின் கானம் (நாவல்), நெருப்பு மல்லிகை (நாவல்), விடியலைத் தேடும் வெண்புறாக்கள் (நாவல்), மூன்று முழு நிலவுகள் (நாடகம்), ஈழத்துச் சிறுகதை மணிகள் (விமர்சனம்), நாணலின் கீதை (தத்துவம்)

**அன்னாரின் நினைவுதினம் இன்று**







செம்பியன் செல்வனின் 'நெருப்பு மல்லிகை' என்ற நாவல் 81 நாவல்களிடையே முதலாவதாகத் தெரிவாகியது. அதிசிறந்த பிரதேசப் பரிசு நாவல் என இரட்டை முதல் பரிசு பெற்றது இந்த நாவல்.

' விடியலைத் தேடும் வெண்புறாக்கள்' எனும் நாவலை செம்பியன் செல்வன் தொடராக எழுதிவந்தார். இது 300 பக்கங்கள் கொண்ட நூலாக அச்சாகியிருந்தது. 1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வுக் காரணமாக 'விடியலைத் தேடும் வெண்புறாக்கள்' நாவலின் அச்சான பிரதிகள் அழிந்து போயின.

1963 காலப்பகுதியில் செங்கை ஆழியானும், செம்பியன் செல்வனும் ஒருவர் மாறி ஒருவராக எழுதிய தொடர்தான் 'நிழல்கள்'. இந்த இருவரும் இணைந்து எழுதிய 'நிழல்கள்' யாழ் சமூகத்தின் முதிரா இளைஞர்களின் மனப் போராட்டங்களைச் சுவையாகச் சித்தரிக்கும் நாவல். மேலும் செம்பியன் செல்வன் 'நேரங்கள்' 'கர்ப்பக்கிரகம்' ஆகிய நாவல்களையும் படைத்துள்ளார்.

புவியியல் சிறப்புப்பட்டதாரியான இவர் விவேகி சஞ்சிகையின் இணையாசிரியராக இருந்தவர். விவேகி 1970களில் இலங்கையில் இருந்து மாதாந்தம் வெளிவந்த தரமான தமிழ் சிற்றிதழ் ஆகும்.

'அமிர்த கங்கை' சஞ்சிகையின் ஆசிரியராக இருந்தவர் செம்பியன் செல்வன். 'அமிர்த கங்கை' இதழ் யாழ்ப்பாணத்தில் இருந்து 80 களின் நடுப்பகுதியில் வெளிவந்தது.

புவியியல் பட்டதாரியாக பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய செம்பியன் செல்வன் திருகோணமலை சென் ஜோசப் கல்லூரியிலும் செட்டிக்குளம் மகாவித்தியாலயத்திலும், யாழ் இந்துக் கல்லூரியிலும் ஆசிரியராகப் பணியாற்றினார்.

செங்கை ஆழியானின் 'வாடைக்காற்று' நாவலை மூலக்கதையாகக் கொண்டு, அவரது அனுமதியுடன் செம்பியன் செல்வன் திரைக்கதை உரையாடல் எழுத்துப் பிரதியை தயாரித்தார். இந்த எழுத்துப் பிரதியை பின்னர் திரைப்படமாக தயாரித்தனர்.

செங்கை ஆழியான் எழுதிய வாடைக் காற்று திரைப்படமான பொழுது, அதற்கான திரைக்கதை, வசனங்களை எழுதிய செம்பியன் செல்வனுக்கு இலங்கை அரச திரைப்படக் கூட்டுத்தாபனம் ஈழத் திரைப்பட வரலாற்றிலேயே முதன்முறையாக A தரமுடையதாகத் தெரிந்து ரூபா 1.84,000 மான்யம் வழங்கியது. இவர் தொடர்ந்தும் ஈழத் திரைப்படக் குறும்படங்களிலும், அவை தொடர்பான வழிகாட்டல் விரிவுரைகளிலும் கணிசமான பங்களிப்புச் செய்துள்ளார். இலங்கையின் நவீன இலக்கிய உலகின் ஈடிணையற்ற இலக்கியவாதியாகத் திகழ்ந்த செம்பியன் செல்வன் மே 20, 2005இல் காலமானார்.



**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

## மானுடவியல்



165

அப்பொழுது, பரமசிவனுடைய திருவருளினாலே, ஒருபூதம் விரைந்து வந்து, பீடத்தின் மேலே ஆயிரம்பொன் பொருந்திய கிழியொன்று வைத்து, முன்னே நின்று, "இந்தக்கிழி பொன்னுலவாக்கிழி இது பரமசிவனால் உமக்கு அருளிச் செய்யப்பட்டது" என்று சொல்ல; பிள்ளையார் திருவருளை நினைந்து, நமஸ்கரித்து எழுந்து கும்பிட்டு, பீடத்தின் மேலே வைக்கப்பட்ட பொற்கிழியைச் சிரமேற்கொண்டு, தந்தையார் கையிற் கொடுத்து, "பரமசிவனையே தலைவராக நினைந்து வேதவிதிப்படி செய்யப்படும் யாகத்தை நீருஞ் சீர்காழியில் இருக்கின்ற மற்றப்பிராமணர்கள் சமஸ்தரும் செய்ய, இக்கிழி குறையாது முகும்" என்று சொல்லி, சீர்காழிக்குப் போம்படி அவருக்கு விடைகொடுத்து அனுப்பி, தாந்திருவாவடுதுறையில் எழுந்தருளியிருந்தார்.

சிலநாட்சென்ற பின் அவ்விடத்தை அகன்று, திருக்கோழம்பம், திருவைகன் மாடக்கோயில், திருநல்லம், திருவழுந்தூர், திருத்துருத்தி, மாயூரம், திருச்செம்பொன் பள்ளி, திருவிளநகர், திருப்பறியலூர், திருவேட்டக்குடி என்னுந் தலங்களைத் தரிசித்துக் கொண்டு, தருமபுரத்தை அடைந்தார். அந்தத் தருமபுரம் திருநீலகண்டப் பெரும்பாணருடைய தாயார் பிறந்த தலமாதலால், அங்குள்ள அவருடைய சுற்றத்தார்கள் வந்து எதிர்கொண்டு வணங்கித் துதித்தார்கள். அது கண்டு, திருநீலகண்டப் பெரும்பாணர் பிள்ளையார் அருளிச்செய்த அருமையாகிய திருப்பதிகங்களின் இசையைத் தாம் யாழில் இட்டு வாசிக்கப்பெற்ற பெரும்பேற்றை அவர்களுக்கு அருளிச்செய்தார். அவர்கள் அதைக் கேட்டு "நீர் திருப்பதிகவிசையை அளவு பெற யாழிலே அமைத்து வாசித்தலினாலே உலக முழுதிலும் இசை விளங்குக" என்றார்கள். உடனே பெரும்பாணர் மன நடுங்கி, பிள்ளையாருடைய திருவடிகளை வணங்கி நின்று, "சுவாமி! திருப்பதிகவிசை அளவுபடாத தன்மையை இவர்களேயன்றி உலகத்திலுள்ள மற்றையாவரும் அறிந்து உண்மையை உணர்ந்து உய்யும்பொருட்டுத் தேவரீர் ஒரு திருப்பதிகம் பாடியருளுவீராகில், அடியேன் அதனிசை யாழிலே அடங்காமையைக் காட்டப்பெறுவேன்" என்றார்.



(தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# களுவாஞ்சிகுடி ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த சடங்கு உற்சவம்

களுவாஞ்சிகுடி ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 15ஆம் திகதி திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமானது. இவ்விழா 23.05.2024ஆம் திகதி அதிகாலை திருக்குளிர்த்தியுடன் நிறைவுபெறவிருக்கின்றது. இவ்வாலயத்தை நோக்குகின்ற போது 2ம் நூற்றாண்டளவில் கண்ணகை அம்மன் வழிபாடு கிழக்கு மாகாணம் எங்கும் பரவலானது.

அம்மன் ஊர்சுற்றுக் காவியம் பத்தினித் தெய்வம் பதி கொண்ட கிராமங்களை வலியுறுத்திக் கூறுகின்றது. களுவாஞ்சிக்குடியில் எழுந்தளியுள்ள இவ்வாலயத்திற்கு ஆதிகுடியாகிய பெரிய கவுத்தன்குடி சின்னக் கவுத்தக்குடி மக்களால் நெருக்கத்து வெளி காணியில் ஐந்து ஏக்கர் நிலக்காணி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

களுவாஞ்சிக்குடியில் எழுந்தருளியுள்ள இவ்வாலயம் ஆதிக்குடியான கவுத்தன்குடி மக்களாலும் அவர்களுடன் ஏனைய பங்குதாரர்களான 11 பாகைக்குரியவர்களும் ஒற்றுமையாக இவ்வாலயத்தை ஸ்தானம் பண்ணி வழிபாடு செய்து வருகின்றனர்.



### ஆலயத்தின் வரலாறு

புகழ்பெற்ற களுவாஞ்சிகுடி ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயம் இற்றைக்கு 2ம் நூற்றாண்டு தொடக்க காலத்தில் மதுரையில் இருந்து கொண்டு வரப்பட்ட செம்பகச் செல்வி விக்கிரகமானது இங்கு வைத்து பிரதிஷ்டை செய்யப்பட்டு பூசிக்கப்பட்டதாக அறியக் கிடைக்கின்றன. இச் சிலைப் பேழை 1600 வாக்கில் யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு வரப்பட்ட ஏழு சிலைகளில் ஒன்றே இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டு ஆரம்ப வழிபாடு மேற்கொண்டதாக வரலாற்றுக் கதைகளினூடாக அறிய முடிகின்றது.

தமிழிலே தோன்றிய முதல் காப்பியம் இளங்கோவடிகளின் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமும் இதில் உரைசால், பத்தினியை உயர்ந்தோர் எனும் கூற்றுக்கமைய களுவாஞ்சிக்குடி மக்களும் கண்ணகைத்தாயாரை போற்றி ஆலயம் அமைத்து வழிபடக்கிடைத்த அரிய வாய்ப்பு என்றே கருத இடமுண்டு பண்டைய வரலாற்று சரிதையின் படி இவ்வாலயம் இற்றைக்கு ஐந்நூறு வருடங்களுக்கு மேற்பட்ட புரதான ஆலயங்களில் ஒன்றாகும் என ஏ.ஊ கந்தையா அவர்கள் சைவக் கோவில் எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். மட்டு நகரிலிருந்து தெற்கு நோக்கி செல்லும் வீதியில் 16 வது மைலில் களுவாஞ்சிகுடி அமைந்துள்ளது. படுவான் கரை, எழுவான்கரை மக்களுக்கும் பொது வசதிகள் யாவும் ஒருங்கே அமையப் பெற்ற பிரதேசமாகும். எனவே பழமையும் பெருமையுமிக்க களுவாஞ்சிகுடி ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயம் பற்றி நினைக்கும் போது எல்லோருக்கும் ஒரு பக்தியுள்ள தன்மை அறியாமலே தோன்றி விடுகின்றது.

கடல் சூழ் இலங்கை கஜபாகு வேந்தனும் எந் நாட்டாங்க இயைவரபனுமை எனும் கூற்றுத் தொடர் கஜபாகு மன்னனே இலங்கைக்கு கண்ணகை அம்மன் வழிபாட்டைக் கொண்டு வந்தான் என்று விளம்புகின்றது. இந்த வரலாற்றோடு தொடர்புபட்ட சேர நாட்டிலிருந்து ஸ்ரீ கண்ணகை அம்பாளின் சிலை பக்தி முத்தி எனும் இரு பெண்களினால் மட்டக்களப்பு வாவியினூடாக கொண்டு வரப்பட்ட போது இச்சிலை கொண்டு வந்த பேழை தற்போது ஆலயம் அமைந்திருக்கும் இடத்தில் இடம்பெயராது பக்தி முத்தி ஆகிய இருவரும் இளைப்பாறத் தங்கிய போதில் நிலைத்திருந்ததென்றும் அப்பெண் மணிகள் தாம் கண்ட கனவின் படி அவ்விடத்திலேயே ஆலயம் அமைக்க கவுத்தன் குடி அன்பர்களுக்கு ஆதரவு நல்கினர் என்பது கர்ண பரம்பரைக் கதைகள் ஊடாக அறியக் கிடைக்கின்றது.

கலைச்சுடர், இலக்கிய வித்தகர்
நாராயணபிள்ளை நாகேந்திரன்




## அறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**20042) கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்தபிறகு, அங்கேயே சிறிது நேரம் உட்கார்ந்து வரவேண்டும் என்ற நியதி இருக்கிறதா?**

கோயிலுக்குச் சென்று தெய்வத்தை வழிபட்ட பிறகும் தெய்வத்தைப் பற்றிய சிந்தனை நம் உள்ளத்தில் தொடர வேண்டும். கோயிலில் தெய்வத்தைத் தரிசித்த பிறகு அங்கு அமைதியாகச் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தால், தெய்வம் நமக்குக் கூறுவது என்ன என்று விளங்கும்.

நாம் தெய்வத்தை வழிபட்டால் மட்டும் போதாது. தெய்வத்தின் பதிலுக்கும் நாம் அமைதியாகச் செவிசாய்க்க வேண்டும் என்பது இந்த வழக்கத்தின் நோக்கமாகும்.

**20043) இறைவனைப் பூஜிப்பதற்கு எந்த எந்தப் பூக்களைப் பயன்படுத்தக்கூடாது?**

வாசனை இல்லாத பூக்களையும் மகரந்தமில்லாத பூக்களையும் பூஜைக்கு உபயோகிக்கும் வழக்கமில்லை.

**20044) எந்த எந்த நேரங்களில் கோயிலுக்குப் போகக்கூடாது?**

கோயிலில் சந்நிதி திறந்திருக்கும் நேரங்கள் அனைத்தும் கோயிலுக்குப் போவதற்கு உரிய நேரங்கள்தான்.

**20045) பூஜையின்போது மணி அடிக்கிறார்கள். இதற்கு என்ன காரணம்?**

நாத தத்துவத்தை நினைவுபடுத்தும் பொருட்டு பூஜையின்போது மணி அடிக்கப்படுகிறது. இது முதலாவது காரணம்.

உலகியல் வேலைகளில் மூழ்கியிருக்கும் மக்கள் மணியோசையைக் கேட்டுத் தெய்வ சிந்தனையில் ஈடுபட வேண்டும். இது இரண்டாவது காரணம்.

**20046) முக்கியமாகக் கோயில்களில், பல விதமான தீபங்களை சுவாமிக்கு ஆராதனையின் போது காட்டுகிறார்கள். அதன் கருத்து என்ன?**

தீபாராதனையில் வரிசையாக அலங்கார தீபம், ஐந்து தீபம், மூன்று தீபம், ஒரு தீபம், முடிவில் கர்ப்பூர தீபம் என்று தீபங்களைக் காட்டும் வழக்கம் இருந்துவருகிறது. பலவாகக் காணும் உலகம், ஐம்பூதங்களில் ஒடுங்கி, அது முக்குணங்களில் ஒதுங்கி, அதுவும் ஒன்றுபட்டு, முடிவில் திரியின் கரியான அகங்காரமும் அழிந்து, கர்ப்பூரம் போல் நிர்க்குணமான பரம்பொருளில் மறைகிறது என்பது கருத்து.

**20047) கோயிலுக்குச் சென்றால், மூன்று தடவை பிரதட்சணம் வரவேண்டும்' என்று சிலர் சொல்கிறார்கள். அவ்விதம் சொல்வதற்கு என்ன காரணம்?**

கோயிலுக்குச் செல்லும் நாம் சொல், செயல், சிந்தனை மூன்றினாலும் இறைவனிடம் நம்மை ஒப்படைக்க வேண்டும். இந்தக் கருத்தில் அமைந்த ஒரு வழக்கத்தையொட்டி, நாம் ஆலய வழிபாட்டில் மூன்று தடவைகள் பிரதட்சணம் செய்கிறோம்.

**20048) கோயில்களில் நிவேதனம் செய்த பின்பு அந்தப் பிரசாதத்தை எதிரில் உள்ள பலிபீடத்தில் வைத்துப் பிறகு காக்கைக்குப் போடுகிறார்கள். இது ஏன்?**

பூஜையை வீட்டில் செய்தாலும் கோயிலில் செய்தாலும் பூஜையின் முடிவில் தாழ்ந்த உயிர்களுக்குச் சிறிதாவது உணவளிக்க வேண்டும். அதுதான் பலி. அதற்குத்தான் பலிபீடம்.

**20049) மனித வாழ்க்கையின் இலட்சியம் என்ன?**

மனித வாழ்க்கையின் இலட் சியம் ஆத்மஞானம் பெறுவதும், உலகிற்கு நன்மை செய்வதுமே ஆகும்.

**20050) ஜபமும் தியானமும் செய்வதால் வரப்போகும் துன்பத்தை நீக்கிக்கொள்ள முடியுமா?**

தீவினைகள் மூன்று வகைப்படும். அவையாவன: வந்தவை, வந்திருப்பவை, வரவிருப்பவை. இவற்றைத் தொலைக்கக்கூடியது நாமஜபம்.

நோய் வந்தால் சில மருந்துகளை உட்கொண்டு நோயை நீக்கிக்கொள்கிறோம். மேலும் வரவிருக்கும் நோயையும் சில மருந்துகளைச் சாப்பிடுவதனால் முன்பே தவிர்த்துக்கொண்டுவிடவும் இயலும் அல்லவா?

அதுபோல், வரவிருக்கும் தீவினைகளையும் இறைவனிடம் முழுமையாகத் தன்னை அர்ப்பணித்துக்கொள்வதால், போதிய அளவு மேற்கொள்ளப்படும் ஜபம், தியானம் போன்ற தவ சாதனைகளினால் விலக்கிக்கொண்டுவிடலாம். அல்லது வெகுவாகக் குறைத்துக் கொண்டுவிடலாம். சில பரிகாரங்கள், தான தர்மங்கள் போன்றவற்றாலும் துன்பங்களை நீக்கிக்கொள்ள முடியும்.

# அமெரிக்காவின் முதல் இந்துக் கோவில்

அமெரிக்காவின் நியூயார்க் பகுதியில் அமைந்துள்ள இந்த ஆலயம், அமெரிக்காவில் கட்டப்பட்ட முதல் இந்துக் கோவில் என்ற சிறப்புக்குரியது. இந்தியாவில் மட்டுமின்றி, உலகின் பல்வேறு நாடுகளிலும் இந்து ஆலயங்கள் பல இருக்கின்றன. அனைத்து சமயத்தவர்களுக்கும் வழிபாட்டிற்கான உரிமை அளிக்கும் வகையில் உலக நாடுகள் பலவும், அவரவர் சமய தலங்களைக் கட்டுவதற்காக இடத்தையும் ஒதுக்கிக் கொடுக்கின்றன.

அந்த வகையில் அமெரிக்காவில் இந்துசமய ஆலயங்கள் பல இருக்கின்றன. அவற்றில் குறிப்பிடத்தக்க சில ஆலயங்களைப் பற்றி இங்கே பார்க்கலாம்.

மகா வல்லப கணபதி அமெரிக்காவின் நியூயார்க் பகுதியில் அமைந்துள்ள இந்த ஆலயம், அமெரிக்காவில் கட்டப்பட்ட முதல் இந்துக் கோவில் என்ற சிறப்புக்குரியது. இது 'ஸ்ரீ மகா வல்லப கணபதி தேவஸ்தானம்' என்றும், 'கணேஷ் கோவில்' என்றும் அழைக்கப்படுகிறது. இதன் கட்டுமானம் 1970ம் ஆண்டு தொடங்கப்பட்டு 1977ம் ஆண்டு நிறைவடைந்துள்ளது. இருப்பினும், பாரம்பரிய மற்றும் மத நிகழ்வுகளை நடத்துவதற்காக 1970ல் திறக்கப்பட்டது. இது அமெரிக்காவின் மிகவும் பிரபலமான இந்துக் கோவில்களில் ஒன்றாக கருதப்படுகிறது.

சிவவிஷ்ணு கோவில் (புளோரிடா) அமெரிக்காவின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது, புளோரிடா. இங்கு சிவன் மற்றும் விஷ்ணு கோவில் அமைந்துள்ளது. இதனை 'சிவவிஷ்ணு கோவில்' என்று அழைக்கிறார்கள். 1990ல் கட்டப்பட்ட இந்த ஆலயம், 6 ஆயிரத்து 200 சதுர அடி பரப்பரளவில் பரந்து விரிந்து அமைந்துள்ளது. சென்னையைச் சேர்ந்த கட்டடக் கலைஞரான கணபதி ஸ்தபதி வழிகாட்டுதலின்படி, மகாபலிபுரத்தைச் சேர்ந்த 12 கட்டடக் கலைஞர்கள் உதவியுடன் இந்த ஆலயம் கட்டப்பட்டதாக அங்குள்ள கல்வெட்டுக் குறிப்புகள் சொல்கின்றன.

வெங்கடேஸ்வர சுவாமி கோவில் திருப்பதி வெங்கடாஜலபதியை நினைவுபடுத்தும் வகையில், அமெரிக்காவின் மத்தியப் பகுதியான இல்லினொய்ஸ் என்ற இடத்தில் அமைந்துள்ளது, ஸ்ரீ வெங்கடேஸ்வர சுவாமி ஆலயம். இதனை 'பாலாஜி கோவில்' என்றும் அழைப்பார்கள். மகாவிஷ்ணுவை பிரதான தெய்வமாக கொண்டு வடிவமைக்கப்பட்ட ஆலயம் இது. அமெரிக்காவில் உள்ள பழமையான இந்து ஆலயங்களில் இதுவும் ஒன்று. இந்த ஆலயம் சுமார் 20 ஏக்கர் பரப்பளவில் அமைந்திருக்கிறது. இந்த இடம் இந்திய அமெரிக்க குடும்பங்கள் பலவற்றால் நன்கொடையாக வழங்கப்பட்டது. இந்த ஆலயத்தில் வெங்கடாஜலபதி தவிர, விநாயகர், சிவன், பார்வதி ஆகியோருக்கும் சன்னிதிகள் உள்ளன.

அமெரிக்காவின் புகழ்பெற்ற நகரமான கலிபோர்னியாவின் எல்லையில் இருக்கிறது, ஆஷ்லாந்து. இங்கு புகழ்பெற்ற லட்சுமி தேவி ஆலயம் இருக்கிறது. 'ஸ்ரீ லட்சுமி கோவில்' என்று அழைக்கப்படும் இந்த ஆலயம், 12 ஏக்கர் பரப்பளவில் அமைந்திருக்கிறது. 1980ல் தொடங்கப்பட்ட இந்த ஆலயத்தின் கட்டுமானம், இரண்டு ஆண்டுகளில் முடிவுற்று மக்களின் வழிபாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. இந்த ஆலயம் தரையில் இருந்து சுமார் 50 அடி உயரத்தில் எழுப்பப்பட்டுள்ளது. இங்கு கோவில் நிர்வாகம் சார்பில், தினசரி பூஜைகள், திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன.

மேலும் சுலோக வகுப்புகள், இந்திய கலாசாரம், மொழி குறித்த வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. இந்த ஆலயத்தில் மகாலட்சுமி தவிர, கணபதி, வெங்கடேஸ்வரா, நடராஜர், சுப்பிரமணியர், ஹரிஹரபுத்ரா, கருடன், நவக்கிரக சன்னிதிகள் அமைந்திருக்கின்றன. அட்லாண்டா ஆலயம் 1980களின் முற்பகுதியில் கட்டப்பட்ட அழகு வாய்ந்த ஆலயம் இதுவாகும். இந்திய பாரம்பரிய கட்டடக்கலையின் உருவகமாக வெள்ளை நிறத்தில் இந்த ஆலயம் கண்களுக்கு விருந்துபடைக்கும் வகையில் கட்டப்பட்டுள்ளது. அமெரிக்காவில் உள்ள ஜார்ஜியாவின் அட்லாண்டா பகுதியில் அமைந்திருக்கிறது,

இந்த ஆலயம். இக்கோவிலில் விநாயகர், அனுமன், துர்க்கை, நாகேந்திரன் மற்றும் பைரவரை பின்பற்றுபவர்கள், வழிபாடு செய்கிறார்கள். இங்கு அமைந்துள்ள சிவன் மற்றும் விஷ்ணுவின் சன்னிதிகள் கோவிலின் சிறப்புகளின் ஒன்றாகும். வெங்கடேஸ்வரர் என்ற பெயரில் மகாவிஷ்ணுவும், ராமலிங்கேஸ்வரர் என்ற பெயரில் சிவபெருமானும் அருள்பாலித்து வருகிறார்கள்.

## யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 88



பிறிதொருவரின் குணம், செயல், இயல்பு ஆகிவைகளை அறிந்து கொண்டு, அதன் மூலம் அவன் பெறுகின்ற பலன்கள். விளைவுகளை அறிந்து கொண்டால், அதுவே நமக்கு அனுபவ பாடத்தைக் கற்றுக் கொடுக்கும். நற்செயல்களால் மேலோங்கி வளர்பவர்களை, சமுதாயத்தில் நற்பெயர் பெற்ற சான்றோர்களின் வாழ்வை வழிக்காட்டும் பாடமாக நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இதே போல் மனிதன் ஒருவன் தனது நடை, உடை, பாவனை, நடத்தை. குணம் செயல் ஆகியவைகளால் உருவாகும் நற்பலன்களின் மூலமும் அனுபவ பாடம் கற்றுக் கொள்ள முடியும். தன்னை சீர்த்திருத்திக் கொண்டு பிறப்பின் நோக்கத்தை அடைவதற்கான வழியில் நடந்து ஒருவன் நற்கதி பெற வேண்டும். அதாவது நற்சேர்க்கை, சுய ஆய்வு, சிந்தனை, அனுபவம் ஆகியவைகளை ஆதாரமாகக் கொண்டு நல்லறிவு பெற வேண்டும். வேண்டும். இம்முயற்சியை தொடர்ந்து செய்திட வேண்டும்.

ஞானமில்லாத வாழ்வு பொருளற்றது. அறியாமையானது இம்மை (உலக வாழ்க்கை) மற்றும் மறுமை (ஆன்மீக வாழ்க்கை) ஆகியவற்றை நாசமாக்கி விடும். எனவே அறியாமை இருளிலிருந்து விலகி, ஞான தீபத்தின் ஒளியை நோக்கி நாம் முன்னேறிக் கொண்டிருக்க வேண்டும். தனது சோம்பலையும் கவனமின்மையையும் நீக்கி விட்டால் தன்னுடைய பலவீனம் அகன்று விடும் என்பதை மனிதன் உணர வேண்டும். பின்னர் அவன் வாழ்வு சிறப்புற்று விளங்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

மனிதன் தனக்குத் தானே ஒரு முழுமையான மூலக்கூறு ஆவான். அவனுக்குள்ளேயே அனைத்து சக்திகளும், பிறந்ததிலிருந்தே உள்ளன. அந்த சக்தியை ஆதாரமாகக் கொண்டு, எந்த நிலையிலும் நாம் முழுமையான வெற்றியின் சிகரத்தை தொட்டு விட முடியும்.

மனிதனுடைய உள்ளத்தின் விழிப்புணர்வே, அனைத்து தெய்வங்களின் பிரதிநிதியாகும். உந்தன் சக்தி உன் உள்ளத்தில் உறங்கி கிடக்கும் வரை, அதற்கு எவ்வித மதிப்பும் இருக்காது. அந்த சக்தி விழித்துக் கொள்ளும் போது, நம்மை சுற்றி நாலாபுறமும் அதிசய ஞான ஒளி பிரகாசிக்கும்.

நம் நற்குணங்களோ அல்லது தீயகுணங்களோ தான், நாம் பெற்றிருக்கும் உன்னத நிலை அல்லது அவலநிலைக்கு காரணம் ஆகும். வெளிப்புற லாபநட்டங்கள், உதவி இடைஞ்சல்கள் இவை யாவும் நம்மை உயர்த்துவதில்லை அல்லது தாழ்த்துவதில்லை. நம் உயர்வுக்கும் தாழ்வுக்கும் நாமே பொறுப்பு. எவன் தன்னை உணர்ந்து, தன் குறைகளை களைந்து நேர்மறை சிந்தனையுடன் செயல்படுகிறானோ அவன் வெற்றிக் கோட்டைக்கு மிக அருகில் இருக்கிறான். எவன் ஒருவன் தனது உள்ளாற்றலை புரிந்து கொண்டு அதனை தட்டி எழுப்புகிறானோ அவனிடம் அபரிதமான தெய்வசக்தி மிகுந்து காணப்படும்.

வெளிப்புற உதவிகளை புறந் தள்ளி, மனிதனின் உள்ளே பொதிந்துள்ள நல்லியல்புகளை வெளிக் கொணர்ந்து, உயர்வதே சிறப்பு. முன்னேற்றத்திற்கான அனைத்து ஆதாரங்களும் மனிதனின் உள்ளாற்றலின் விழிப்புணர்வில் தான் உள்ளது. இவ்வகையில் மனிதன் அளப்பரிய சக்தி கொண்டவனாவான்.

## விபுலாநந்தா நாட்டிய நிருத்தியாலய மாணவிகளின் நடனநிகழ்வுகள்






இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் காரைதீவு சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணி மன்றமும் இணைந்து நடாத்திய முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழாஅங்குரார்ப்பண நிகழ்வில் விபுலாநந்தா நாட்டிய நிருத்தியாலய மாணவிகளின் நடன நிகழ்ச்சிகள் களைகட்டிய போது...

(படங்கள்: காரைதீவு குறூப் நிருபர்)

# புத்தளம் மாவட்ட பாடசாலைகளை மூட முடிவு

சீரற்ற வானிலை காரணமாக புத்தளம் மாவட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளையும் இன்று (20) மூடுவதற்கு வடமேல் மாகாண ஆளுநர் தீர்மானித்துள்ளார்.

இன்றைய வானிலைக்கு ஏற்ப எதிர்வரும் நாட்கள் தொடர்பில் தீர்மானிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் வடமேல் மாகாண பிரதம செயலாளரால், மாகாண கல்விப் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தினால் புத்தளம் மாவட்டத்தில் 19,128 பேர், பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ்பி ஹேரத் தெரிவித்தார்.

பிரதேச செயலாளர்கள் அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் இவர்களுக்கு தேவையான நிவாரணங்கள் வழங்கப்பட்டுவருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

புத்தளம் தள வைத்தியசாலை தொடர்ந்து பெய்து வரும் கன மழையால் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

வீடுகளுக்கள் வெள்ள நீர் புகுந்துள்ளதால் அதிகமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## இந்தோனேசிய அமைச்சருடன்...

(Blue Economy) கடற்பாசி தொழில் துறை குறித்து பேசப்பட்டது. அதேபோல், தென்துருவ நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு, சதுப்புநில பயிர்ச்செய்கை தொடர்பான

ஒத்துழைப்பு வேலைத்திட்டத்திற்கான ஆராய்ச்சி ஒத்துழைப்பு உள்ளிட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது. ஒருங்கிணைக்க இருதரப்பு பணிக்குழுவை நிறுவுதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

இந்துச் சமுத்திர எல்லை நாடுகளில் (IORA) தற்போதைய தலைவராக இலங்கையின் வகிபாகம் உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் இங்கு ஆலோசிக்கப்பட்டது.

இந்த சந்திப்பில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, நீர் வளங்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான், காலநிலை மாற்றங்கள் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, இந்தோனேசியாவுக்கான இலங்கை தூதுவர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொழம்பகே, காலநிலை மாற்றங்கள் தொடர்பான செயலகத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரியும். சிரேஷ்ட மேலதிகச் செயலாளருமான வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

## வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த...

மருமகன் ஒருவரையே கைது செய்ததாக,நால்ல பொலிஸார் தெரிவிக்கின்றனர்.இக்கொலைச் சம்பவத்தில்,மீரிகம மாலதெனிய பகுதியைச் சேர்ந்த நுகதேனி ஆராச்சிகே லயனல் பிரேமசிறி (வயது 78), அவரது மனைவி துலியாவதி ஜயலத் மெனிக்கே (80) மற்றும் அங்கவீனமுற்ற மகன் ஒருவரான நுகதேனி ஆராச்சிகே சுமுது பிரியசாந்த (42). ஆகியோர் உயிரிழந்தனர்.இக்கொடூரச் சம்பவம்நேற்று (19) அதிகாலை இரண்டு மணியளவில் இடம்பெற்றது.

மாலதெனியவிலிருந்து மீரிகம நோக்கி சைக்கிளை தள்ளிச் சென்ற கொலையாளியை நிறுத்தி. ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் விசாரணை செய்துள்ளனர்.

2,55,000 ரூபா பெறுமதியான தங்க மோதிரம் மற்றும் தங்கச் சங்கிலி மற்றும் குறடொன்றும் அவரிடம் காணப்பட்டது. பின்னர் இச் சந்தேக நபர் பொலிஸ் நிலையம் அழைத்துச் செல்லப்பட்டார்.

இவரின் சட்டைப் பையில் மாலதெனிய பிரதேசத்திலுள்ள வீடொன்றின் விலாசம் அடங்கிய காகிதத் துண்டு காணப்பட்டது. இதையடுத்து, வீட்டை பொலிஸ் குழுவினர் சோதனையிடச் சென்ற போதே, அங்கிருந்த அனைவரும் உயிரிழந்து கிடந்ததை அவதானித்தனர்.

மின்சார மீட்டருக்கு அருகாமையில் வீட்டுக்கு மின்சாரத்தைக கொண்டு செல்லும் பிரதான மின் வயர் அறுந்து விழுந்து கிடந்ததை அவதானித்த பொலிஸார்,குறடினால் மின்சாரத்தை துண்டித்து இக்கொலைகள் புரியப்பட்டதாக பொலிஸார் ஊகித்தனர்.தாயும் தந்தையும் அவர்கள் உறங்கும் அறையிலும், ஊனமுற்ற மகனின் சடலம் வரவேற்பறையிலும் காணப்பட்டன. உயிரிழந்த மகனுக்கு இரத்தக் காயம் இருந்ததாகவும், அவர்கள் மூவரும் கழுத்து நெரிக்கப்பட்டு கொல்லப்பட்டிருக்க லாமென சந்தேகிப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர் எடுத்துச் சென்ற சைக்கிள் உயிரிழந்த சித்தப்பாவுக்கு சொந்தமானதென பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொலையுண்டவர்கள் சந்தேக நபரின் மனைவியின் சித்தப்பாவும் சிறிய தாயும் அவர்களது மகனும் என தெரியவந்துள்ளது. சந்தேகநபர் சிலாபம் பஙடகதெனிய பகுதியைச் சேர்ந்த நபர் எனவும், அவர் அந்தப் பகுதியில் வேலை செய்து வருவதாகவும், அவ்வப்போது மனைவி வீட்டுக்குச் சென்று வருவதாகவும் தெரியவந்துள்ளது. சந்தேக நபர் வீட்டின் பின்பக்க கதவை உடைத்தே வீட்டுக்குள் பிரவேசித்துள்ளார்.

குற்றப்பிரிவு பொலிஸ் ஆய்வாளர்கள் மற்றும் கைரேகை நிபுணர்களை வரவழைத்து சம்பவ இடத்தில் விசாரணை நடத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

## தமிழர் தரப்பு...

மாவை.சோ.சேனாதிராஜா மற்றும் எம்.ஏ.சுமந்திரனிடமே இதுகுறித்த தனது இறுக்கமான நிலைப்பாட்டை சம்பந்தன் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட எம்.ஏ.சுமந்திரன், ”சம்பந்தன் ஐயாவை நேரில் ஒரு தடவை சந்தித்திருந்தேன். இதன்பின்னர் அவர் தொலைபேசி வாயிலாக உரையாடியிருந்தார்.

தேர்தலில் தமிழர் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது சம்பந்தமாக மூன்று விடயங்களை சுட்டிக்காட்டினார்.

முதலாவதாக, நாங்கள் தொடர்ச்சியாக தமிழர் சார்பில் பொதுவேட்பாளர் ஒருவரை களமிறக்குவதில்லை என்ற நிலைப்பாட்டில், ஐக்கிய இலங்கைக்குள் தீர்வை பெற்றுக் கொள்ளமுயற்சிகளைமுன்னெடுத்து வருகின்றோம்.

அதேபோன்று இரண்டாவதாக, பொதுவேட்பாளர் விவகாரம் ஒஸ்லோ உடன்பாட்டை மீறுவதாக அமையும். ஏனென்றால் ஒஸ்லோ உடன்பாட்டில் இலங்கை அரசாங்கம் சமஷ்டி அடிப்படையிலான பேச்சுக்கு தயார் என்றே கூறியுள்ளது.

ஆகவே, பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவதன் ஊடாக அந்த ஒப்பந்தத்தை தூக்கியெறிந்து செயற்பட முடியாது.

மூன்றாவதாக இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் வடக்கு கிழக்கை இணைப்புச் செய்வதாக இருந்தால், வாக்கெடுப்பு நடத்த வேண்டும். எனினும் அவ்வாறு வாக்கெடுப்பு நடத்துவதாக இருந்தால் கல்லோயாத் திட்டம் உள்ளிட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றங்கள் அகற்றப்பட வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் வெளியேற்றப்பட்டவர்கள் மீளக்குடியேற்றப்பட்டதன் பின்னரேயே, வாக்கெடுப்பை நடத்த முடியும்.

அவ்விதமான சந்தர்ப்பங்களை விடுத்து பொதுவேட்பாளர் தெரிவுக்குச் செல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர் குறிப்பிட்டார்.

## டெங்கு:...

அதிகரிக்கலாமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் அதிக டெங்கு நோயாளர் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

கொழும்பு மாவட்டத்தில் 5,057 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 2,214 பேரும், களுத்துறையில் 1,244 பேரும் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 3,879 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.மேலும், இந்த மாதத்தில் இதுவரை 1,458 டெங்கு நோயாளர் இனங்காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

## சகல இலங்கையருடனும்...

நீதி, சம உரிமைகள் மற்றும் வாய்ப்புகளுக்கான அணுகல் ஆகியவற்றைத் தொடர்ச்சியாக எதிர்பார்க்கும் தரப்பினர் உள்ளிட்ட இலங்கை மக்களுடன் தாம், உறுதியான பங்காளியாக இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நிலையான சமாதானம் மற்றும் முன்னேற்றத்திற்கான பன்முகத்தன்மையை உள்ளடக்கிய, வளமான எதிர்காலத்தை நோக்கிய இலங்கையின் பயணத்துக்கு ஆதரவளிப்பதற்கான தமது அர்ப்பணிப்பை தாம், மீண்டும் உறுதிப்படுத்துவதாக, ஜூலி சங் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஜூன் முதல் வாரத்திலிருந்து...

அப்போதைய பிரதமர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் எண்ணக் கருவுக்கமைய "சுரக்ஷா" மாணவர் காப்புறுதித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இத்திட்டம் 01.12.2022 வரை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில்,பொருளாதார நெருக்கடி காரணமாக, இதற்கான நிதியை வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டதால் இத்திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

எவ்வாறாயினும், நாட்டில் தற்போது பொருளாதார மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கும் நிலையில், "சுரக்ஷா" மாணவர் காப்புறுதியை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கு 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் 2,000 மில்லியன் ரூபாவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒதுக்கீடு செய்திருந்தார். 2048 ஆம் ஆண்டளவில் அபிவிருத்தியடைந்த இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு தேவையான மனித வளங்களை உருவாக்குவதற்கான வேலைத்திட்டத்தை பலப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

அதன்படி, அரசாங்க பாடசாலைகள், அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களில் கற்கும் 1–13 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கும், 5 –21 வயது வரையான 45 இலட்சம் மாணவர்களுக்கும், விசேட தேவையுள்ள மாணவர்களுக்கான பாடசாலைகளில் பயிலும் 4 21 வயது வரையான மாணவர்களுக்கும் மருத்துவ மற்றும் விபத்துக் காப்புறுதி உள்ளிட்ட சலுகைகளும் இந்தத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும்.

மேலும் குறைந்த வருமானம் பெறுவோர் அதாவது 1,80,000 ரூபா இற்கும் குறைவான வருட வருமானத்தைக் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஆயுள் காப்புறுதியின் கீழ் பெற்றோரின் மரணத்திற்கான நிவாரணங்களும் இந்த திட்டத்தின் கீழ் சகல மாணவர்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

1. சுகாதாரக் காப்புறுதி

அரச,தனியார் வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெறுவோருக்கு 3,00,000 ரூபா வரையில் வழங்கப்படும். அதன்படி அரச வைத்தியசாலைகளில் தங்கும் ஒரு இரவுக்காக 2,500 ரூபா வழங்கப்படும். (அரச வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெற்றுக்கொண்டாலும் பெற்றோர் தொழிலுக்குச் செல்ல முடியாமல் எதிர்கொள்ளும் அசௌகரியங்களை கருத்தில் கொண்டு இந்த கொடுப்பனவு வழங்கப்படுகிறது.) தனியார் வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெறுவோருக்கு ஒரு இரவுக்கு 7,500 ரூபா என்ற அடிப்படையில் வழங்கப்படவுள்ளது.

❖ நிவாரணத் தொகை 20,000 ரூபா வரையில் ஏற்கனவே காணப்பட்ட கண் குறைபாடுகளுக்கான கண்ணாடிகள், செவிப்புலன் குறைபாட்டிற்கான செவிப்புலன் கருவிகளுக்கான நிவாரணங்களும் வழங்கப்படவுள்ளன. அத்தோடு பிள்ளைகள் நோய்வாய்ப்படும் வேளையில் வெளி ஆய்வுக் கூடங்களில் பெறப்படும் அறிக்கைகளுக்கான கொடுப்பனவுகளும் வழங்கப்படவுள்ளன.

❖ பாரதூரமான நோய்களுக்கு 2,00,000 ரூபா முதல் 1,5,00,000 ரூபா வரையில் வழங்கப்படும்.

2. விபத்துகளுக்கான காப்புறுதி

❖ முழுமையான நிரந்தர ஊனத்திற்கு 2,00,000 ரூபா வழங்கப்படும்.

❖ முழுமையான இடைநிலை ஊனத்திற்கு – 1,50,000 ரூபா முதல் 2,00,000 ரூபா வரையில் வழங்கப்படும்

❖ தற்காலிக ஊனத்திற்கு 25,000 ரூபா முதல் 1,00,000 ரூபா வரையில் வழங்கப்படும்.

3. வாழ்வாதாரக் காப்புறுதி

❖ பெற்றோரின் மரணத்தில் குறைந்த வருமானம் ஈட்டும் குடும்பப் பிள்ளைகளின் பெற்றோரில் ஒருவருக்கு 75,000 ரூபா வரையில் வழங்கப்படும். பெற்றோர் இருவருக்கும் இந்த நிவாரணம் வழங்கப்படும். ஒரு குடும்பத்தில் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு இந்த நிவாரணங்கள் உரித்தாகும். ஆனால் ஒரு பிரச்சினைக்கு அதிகபட்சமாக 2,25,000 ரூபா ஒதுக்கப்படுகிறது. (அதிகபட்சமாக 3 குழந்தைகளுக்கு தலா 75,000 ரூபா ஒதுக்கப்படும்.) இந்தக் காப்புறுதி திட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பாக கல்வி அமைச்சு இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் உடன்படிக்கை செய்து கொள்ளவுள்ளது.

## காங்கேசன்துறை...

நேற்று (19) ஞாயிற்றுக்கிழமை கப்பல் சேவை ஆரம்பிக்கப்படவிருந்தது. எனினும், இச்சேவை மீண்டும் ஒத்தி வைக்கப்படுவதாக கடந்த சனிக்கிழமை அறிவிக்கப்பட்டது.

நாகப்பட்டினம் காங்கேசன்துறைக்கிடையி லான கப்பல் சேவை, தொடர்ந்து ஒத்தி வைக்கப்படுவதால் டிக்கெட் முன்பதிவு செய்த பயணிகளிடம் அந்நிறுவனம் வருத்தம் தெரிவித்துள்ளது.இது குறித்து அந்நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில்:

“நாப்பட்டினம் காங்கேசன்துறைக்கிடையே கப்பல் போக்குவரத்தை இயக்க முடியவில்லை. 13, 17 மற்றும் 19ஆம், திகதிகளில் கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கும் என மூன்று முறை அறிவிக்கப்பட்டது.இருந்தபோதும்,

இச்சேவையை ஆரம்பிக்க முடியவில்லை.

சேவையில் ஈடுபடவுள்ள கப்பல் பழையது என்பதால்,சில பாதுகாப்பு குறைபாடுகளும் உள்ளன. இதனை சரி செய்தால் மட்டுமே கப்பல் போக்குவரத்துக் கழகம் உரிய அனுமதி வழங்கும். தவிர்க்க முடியாத கடல் போக்குவரத்து விதிமுறைகள், காலநிலை மாற்றங்களால் மறு திகதி அறிவிக்கப்படாமல் கப்பல் சேவை ஒத்தி வைக்கப்படுகிறது.

டிக்கெட் முன்பதிவு செய்தவர்கள், கட்டணத்தை திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தென்மேற்கு பருவமழை...

தெரிவித்தார். இதுபற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: வளிமண்டலவியலில் ஏற்படும் மாற்றங்கள் நாட்டில் பாரிய மழை,காற்று மற்றும் வெள்ளங்களை ஏற்படுத்தலாம். மக்கள் இது குறித்து எச்சரிக்கையாகவும் விழிப்புடனும் இருப்பது அவசியம். அனர்த்த நிலைகளிலிருந்து மக்களை மீட்டெடுக்க மீட்புப்படையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ திணைக்களங்களுக்கும் இது குறித்து அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.அவசரநிலைமைகள் ஏற்பட்டால் 117 என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டு உதவிகளைப் பெற முடியும்.

## இராஜ மகேந்திரனுக்கு...

வெளியிடப்பட்டுள்ளது. இலங்கை தபால் திணைக்களம் இம்முத்திரை யை வெளியிட்டுள்ளது. அன்னாரை கௌரவிக்கும் வகையிலேயே நினைவு முத்திரையும் தபால் உறையும் வெளியிடப்பட்டுள்ளது.

## குடிவரவு, குடியகல்வு...

தொடர்ந்தும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க முடியாதென உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது.

இதற்கமைய, அவர் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வகிப்பதை தடுத்து நீதிமன்றத்தினால் எழுத்தாணை கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

இதனிடையே, டயானா கமகே வெளிநாடு செல்வதற்கு தடை விதித்தும் கொழும்பு பிரதம நீதவான் திலின கமகே கடந்த (09) தீர்ப்பளித்திருந்தார்.இந்நிலையில்,

முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகே, அரசாங்கத்துக்குச் சொந்தமான மூன்று உத்தியோகபூர்வ வாகனங்களையும் கடந்த (10) அதிகாரிகளிடம் கையளித்திருந்தார்.

இதேவேளை கடந்த (15) டயனா கமகேவிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் ஐந்து மணி நேரம் வாக்குமூலமொன்றையும் பதிவு செய்திருந்தது.

இதன் பின்னர்,சட்ட மா அதிபருடன்,குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் குழு கலந்துரையாடி,டயானா கமகேவின் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொண்டது. டயனா கமகேவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் பலதரப்பட்ட ஆலோசனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## ‘புத்த ரஸ்மி’...

இந்த வலயம் தன்சல் மற்றும் மின்னொளி தோரணைகள் உள்ளிட்ட பல அம்சங்களை உள்ளடக்கியதாக அமைக்கப்படவுள்ளது.

இம்மாதம் 23, 24, 25 ஆம் திகதிகளில் ஜனாதிபதி அலுவலகத்திற்கு முன்னுள்ள வளாகத்தில் உணவு, பிஸ்கட், தேநீர், உணவு தன்சல் வழங்கும் நிகழ்வு இரவு 7.00 மணி முதல் இடம்பெறும். அன்றைய தினம் மாலை வேளையில் முப்படையினர் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களம், பொலிஸாரின் பக்திப் பாடல் இசைக்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது.

பாலதக்ஷ மாவத்தை மற்றும் பேர வாவியின் அருகில் "சூல்ல தர்மபால" கதையை எடுத்துக்காட்டும் வெசக் தோரணத்தை மே 23 மாலை 7.30 மணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திறந்துவைக்க உள்ளார். இந்த தோரணம் 23, 24, 25 ஆம் மூன்றாம் திகதிகளில் காட்சிப்படுத்தப்படும்.

# இன்றைய பலன்கள்

(20.05.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**



பணி புரியும் இடத்தில் வீடு வாகனம் வாங்க விண்ணப்பிக்க கூடியவர்களுக்கு அந்த முயற்சி கைகூடும். ஆடை அபரணச் சேர்க்கை உண்டு. நீண்ட நாட்களாக முயற்சித்தும் நடைபெறாத காரியங்கள் இப்பொழுது நடைபெறும்.

**ரிஷபம் :**



ஒரு காரியத்தை செய்யலாமா வேண்டாமா என்று இரட்டை சிந்தனை மேலோங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் கெடுபிடி அதிகரிக்கும். சகபணியாளர்களாலும் தொல்லை உண்டாகலாம்.

**மிதுனம்:**



வெளிநாட்டில் இருந்து வரும் அழைப்பு மகிழ்ச்சி தரும். சுப விரயங்கள் அதிகரிக்க உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் உங்கள் குரலுக்கு செவி சாய்ப்பார்.

**கடகம்:**



குடும்பத்தின் ஒற்றுமைக்கு குந்தகம் விளைவித்தவர்கள் உங்களை விட்டு விலகுவர். ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். பழைய ஆபரணங்களை கொடுத்துவிட்டு புதிய ஆபரணங்கள் வாங்கும் முயற்சி கைகூடும்.

**சிம்மம்:**



வாடகை கட்டிடத்தில் இருக்கும் தொழிலை சொந்த கட்டிடதிற்கு மாற்றலாமா? என்று யோசிப்பீர்கள். பொருளாதார நிலை உயரும். குடும்பத்துக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களையும் ஆடம்பர பொருட்களையும் வாங்கி சேர்க்க முன்வருவீர்கள்.

**கன்னி:**



வெளிநாட்டில் உள்ள நல்ல நிறுவனங்களில் இருந்து உத்தியோகத்திற்கான அழைப்புகள் வரலாம். ஆடை அபரணச் சேர்க்கை உண்டு.

**துலாம்:**



பத்திரப்பதிவில் இருந்த தடை அகலும். உத்தியோகத்தில் இதுவரை கேட்டு கிடைக்காத சலுகைகள் இப்பொழுது கிடைக்கும்.

**விருச்சிகம்:**



செல்வாக்கு அதிகரிக்கும். பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பும். மனதில் நினைத்ததை மறுகணமே செய்து முடிப்பீர்கள்.

**தனுசு:**



கடன் சுமை குறைய வழி பிறக்கும். உடல் ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவது நல்லது.

**மகரம்:**



ஆடை ஆபரணச் சேர்க்கை உண்டு. பெண்வழி பிரச்சனைகள் அகலும். பூர்வீக சொத்துக்களை பிரித்துக் கொள்வதில் இருந்த பிரச்சினைகள் படிப்படியாக நீங்கும்.

**கும்பம்:**



தங்கம் வெள்ளி போன்ற விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகழும் வாய்ப்பு கிடைக்கும். தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்:**



விரையங்களில் இருந்து விடுபட சுப பிரியங்களை மேற்கொள்வது நல்லது. உறவினர்களிடம் பகையை வளர்த்துக் கொள்ள வேண்டாம்.

## சீதையம்மனுக்கு...

நிறைவடைந்தது. கும்பாபிஷேக நிகழ்வில் வாழும் கலை அமைப்பின் நிறுவநரும் சமாதான தூதுவருமான ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி, கோயம்புத்தூர் சுவாமி ஜகதாத்மானந்தா சரஸ்வதி, பாராளுமன்ற உறுப்பினர்களான வேலுகுமார் வடிவேல் சுரேஸ் சீ.பி. ரட்ணாயக்க, மருதபாண்டி இராமேஸ்வரன் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, பிரதி தூதுவர் டாக்டர் எஸ். ஆதிரா உட்பட இந்தியா நேபாளம் ஜப்பான் அமெரிக்கா ஆகிய நாடுகளில் இருந்து வருகை தந்த பெருந்திரளான பக்தர்களும் இதில் கலந்து கொண்டனர்.

## யுத்த வெற்றி விழா...

பெரேரா ஆகியோரின் ஒப்புதலுடன், இவர்கள் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

சுமார் 30 வருடங்களாக நீடித்த பயங்கரவாதத்தை மனிதாபிமான நடவடிக்கையின் மூலம் வெற்றியடையச் செய்வதற்கு ஆயுதப் படைகள், பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் வீரர்கள் உயிர்த் தியாகம் செய்து ஈடுசெய்ய முடியாத பங்களிப்பை ஆற்றியதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாராளுமன்றம் 22 இல்...

குழுக் கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

அன்றைய தினம் மு.ப. 9.30 மணிக்கு பாராளுமன்றம் கூடவுள்ளது.மே,14 இல், வெளியிடப்பட்ட வர்த்தமானியில் 'பொருளாதார நிலை மாற்றம்' மற்றும் 'பகிரங்க நிதிசார் முகாமைத்துவம்' ஆகிய இரண்டு சட்டமூலங்களும் முதலாவது வாசிப்புக்காக பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளன. இதையடுத்து மு.ப. 9.45 மணி முதல் பி.ப. 5.30 மணிவரை எதிர்கட்சியால் கொண்டு வரப்படும் ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தை மேற்கொள்ள, பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகவும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

## எலான் மஸ்க்...

இணைப்பதற்கான விண்ணப்ப நடைமுறைகள் தொடர்பிலும் ஜனாதிபதி கலந்துரையாடியதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

உலகின் முன்னணி பணக்காரர்களில் ஒருவரான எலான் மஸ்க், டெஸ்லா நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நாட்டில் கடும் மழை...

இடங்களில் இன்றும் 150 மில்லி மீற்றருக்கும் அதிகளவான கனமழை பெய்யக்கூடுமென, அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சப்ரகமுவ மாகாணம், காலி, மாத்தறை, கண்டி, நுவரெலியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் சில இடங்களில் நூறு மில்லி மீற்றருக்கும் அதிகளவான பலத்த மழை பெய்யக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. இதற்கிடையில், மழையுடன், நீர்த்தேக்கங்கள் மற்றும் ஆறுகளின் நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது. களனி கங்கை, மகாவலி கங்கை, நில்வளா கங்கை மற்றும் ஜின் கங்கையை ஒட்டியுள்ள தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் உள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தெதுரு ஓயா, மஹா ஓயா, அத்தனகலு ஓயா, பெந்தர கங்கை, கிரம ஓயா, உரு பொக்கு ஓயா, கலா ஓயா மற்றும் மல்வத்து ஓயா ஆகிய கரைகளை சுற்றியுள்ள தாழ்நிலங்களும் வெள்ள அபாயத்தை எதிர்கொண்டுள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# ஜனாதிபதியின் இந்தோனேசிய விஜயம்











## பீடி உற்பத்தி பொருட்களை அனுமதியின்றி எடுத்துச்செல்ல தடை

பீடி உற்பத்தியாளர்கள் தமது தயாரிப்பு பொருட்களை வாகனங்களில் கொண்டு செல்லும் போது அதற்கான அனுமதிப்பத்திரத்தை அவசியம் பெற்றிருக்க வேண்டுமென கலால் ஊடகப் பேச்சாளரும், பிரதி கலால் ஆணையாளருமான சன்ன வீரக்கொடி தெரிவித்தார்.

பீடி உற்பத்தியாளர்கள் தமது உற்பத்தியை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கும் விநியோகத்தின் போது பீடிகளை தடையின்றி எடுத்துச் செல்வதற்கும் நடைமுறையொன்றை வகுக்குமாறு கலால் திணைக்களத்திற்கு கோரிக்கையொன்றை முன்வைத்திருந்தனர்.

அதற்கமைய கலால் ஆணையாளர் நாயகம் எம்.ஜே.குணசிறி இந்த தீர்மானத்தை எடுத்துள்ளார்.

அதற்கமைய, கலால் திணைக்களம் 'இலவச அனுமதி பத்திரத்தை வழங்குவதுடன் நாடு முழுவதும் பீடிகள் கொண்டு செல்லப்பட்டால் கலால் துறை தலைமை அலுவலகத்திடமும், மாவட்டத்திற்குள் பீடிகள் விநியோகம் செய்யப்பட்டால் கலால் உதவி ஆணையர் அல்லது கலால் கண்காணிப்பாளரிடமும் இந்த அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

இதுதொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் சன்ன வீரக்கொடி கூறினார்.

அனுமதிப்பத்திரமின்றி பீடிகளை எடுத்துச்செல்வோருக்கு எதிராக சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும் என்றும், உற்பத்திக்கான அனுமதிப்பத்திரமும் தற்காலிகமாக ரத்து செய்யப்படலாம் என்றும் பிரதி கலால் ஆணையாளர் தெரிவித்தார்.

பீடி வாங்கும் போது கடைக்காரர்கள் கட்டாயம் பற்றுச்சீட்டை பெற வேண்டும் என்றும், பரிசோதனையின் போது பீடி வாங்கியதற்கான பற்றுச்சீட்டை சமர்ப்பிக்கத் தவறினால், சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும் என்றும் சன்ன வீரக்கொடி மேலும் தெரிவித்தார்.

## சீரற்ற காலநிலை பொதுமக்கள் அவதானம்



மழை நிலைமைகள் அதிகரித்து வருவதால் கொழும்பு மற்றும் அதனைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிகளில் வசிக்கும் மக்களை அவதானமாக இருக்குமாறு கேட்டுகொள்ளப்பட்டுள்ளது. வீதிகளில் செல்லும் வாகனங்களை மரங்களுக்கு அருகாமையில் நிறுத்தும் போது அவதானமாக இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள வானிலை அறிவிப்பில் பருவமழைக்கு முந்தைய கால நிலையின் தாக்கம் காரணமாக கடும் மழை மற்றும் காற்றின் நிலை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.


சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
**(சுத்திகரிப்புப் பிரிவு)**

**பகிரங்கக் கேள்வி – 4508T**

**40,000 எண்ணிக்கையான 19 லீற்றர் குடிநீர் போத்தல்களை வழங்குதல் (2024-2025)**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன, இலங்கை, களனிய, சப்புகஸ்கந்த சுத்திகரிப்புப் பிரிவு, திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் உள்ளூர் வழங்குநர்களிடமிருந்து மேற்குறிப்பிட்ட பொருளை வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

எந்தவொரு கேள்விதாரரும் கேள்வியைச் சமர்ப்பிக்கும்போது வேண்டுகோள் கடிதத்துடன் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 3,500.00 ரூபாவை 2024 ஜூன் 10ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையான அலுவலக நாட்களில் கொழும்பு - 09, இல. 609, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைமை அலுவலகத்தின் 05ஆம் மாடியிலுள்ள காசாளரிடம் செலுத்துதல் வேண்டும் அல்லது களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்புப் பணியகத்தின் காசாளரிடம் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும். மேலும் சகல கொடுப்பனவுகளையும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலக்கத்தின் ஊடாக கேள்வி இலக்கம் மற்றும் கேள்விதாரரின் பெயரை சுருக்கமாகக் குறிப்பிட்டு பணத்தை செலுத்தலாம்.

கேள்வி நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்புகள் அடங்கிய கேள்வி ஆவணங்கள் www.ceypetco.gov.lk மற்றும் www.dgmarket.com எனும் இணையதளங்களில் கிடைக்கத்தக்கதாக உள்ளன.

மாற்றுவழியாக கேள்வி ஆவணங்களை கீழ்க்குறிப்பிடப்பட்ட விலாசத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனு ஆவணங்கள் 2024 ஜூன் 12ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படுவதோடு, அன்றைய தினமே உடனடியாக அவைகள் சுத்திகரிப்பு நிலைய மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும்.

**முகாமையாளர் (பொருள்வளம்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**சுத்திகரிப்புப் பிரிவு,**
**சப்புகஸ்கந்த,**
**களனி, இலங்கை..**
**தொலைபேசி: 011-2400110**



**கேள்வி அழைப்பு**

**பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை**
**கேகாலை**

**காகிதாதிகள் மற்றும் பாவனைப் பொருட்களை கொள்வனவு செய்தல்**

1. கேகாலை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் மற்றும் அதன் கீழ் உள்ள சுகாதார நிறுவனங்களின் பாவனைக்காக காகிதாதிகள் மற்றும் பாவனைப் பொருட்களை வழங்குதல் சார்பாக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து 2024.06.12 மு.ப. 10.30 வரை பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.
2. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற தகைமை கொண்ட கேள்விதாரர்களுக்கு கேகாலை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் கணக்குப் பிரிவிலிருந்து 2024.05.20 முதல் 2024.06.11 வரை வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரையான காலத்திற்குள் கேள்வி ஆவணங்களைப் பரீட்சிப்பதற்கு மற்றும் கொள்வனவு செய்வதற்கு முடியும்.
3. பொருட்கள் பற்றிய விபரங்கள் மற்றும் கேள்வி ஆவணங்களை www.rdhskegalle.lk இணைய தளத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை,**
**கேகாலை.**
**தொ.பே.இல. 035 - 2222549**



**களனிப் பல்கலைக்கழகம் இலங்கை**
University of Kelaniya Sri Lanka

**விசேட அறிவித்தல்**
Special Notice

**பட்டமளிப்பு விழா – 2024 ஜூன் 03**
Convocation - 03rd June 2024

பல்கலைக்கழக அமைப்பிற்குள் செயற்படுத்தப்படும் தொடர் வேலை நிறுத்தம் காரணமாக 2024 ஜூன் 03ம் திகதி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த பட்டமளிப்பு விழா மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது என இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

அப்பட்டமளிப்பு விழா மீண்டும் நடைபெறும் திகதி எதிர்வரும் காலங்களில் அறிவிக்கப்படும்.

The Convocation scheduled on 03.06.2024 is postponed until further notice due to ongoing trade union action in the Universities.

The new date of the Convocation will be notified later

**உப பீடாதிபதி**
**Vise Chancellor**
15.05.2024








# கிழக்கின் குரல்



## மலேசிய உயர்ஸ்தானிகரால் கல்முனையில் பள்ளிவாசல் திறப்பு



(எம்.என்.எம்.அப்ராஸ்)

கல்முனை கிறீன் பீல்ட் முஹ்யிதீன் மஸ்ஜித் புனர் நிர்மாணப்பணிகள் கட்டம் கட்டமாக நிறைவு செய்யப்பட்டு புதிய தோற்றத்தில் அமைக்கப்பட்ட பள்ளிவாசல் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. கல்முனை கிறீன்பீல்ட் பள்ளிவாசல் நிருவாகிகள் மேற்கொண்ட கோரிக்கைக்கு அமைவாக கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் மூலம் YWMA பேரவையின் ஒருங்கிணைப்பில் கடந்த 2022 ஆம் ஆண்டு அடிக்கல் நடப்பட்டு தற்போது புனர் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்தன.

கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளரும், கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் ஸ்தாபகருமான ரஹ்மத் மன்சூரின் அழைப்பின் பேரில் கல்முனைக்கு வருகை தந்திருந்த இலங்கை மற்றும் மாலை தீவுக்கான மலேசிய உயர்ஸ்தானிகர் பட்லி ஹிஷாம் ஆதமினால் பள்ளிவாசல் திறந்து வைக்கப்பட்டது.

## அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் நீண்டகால எல்லைப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான கலந்துரையாடல்

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் நீண்டகாலமாக நிலவி வருகின்ற எல்லைப் பிரச்சினைகளுக்கு சுமுகமாக தீர்வு காணும் வகையில் விஷேட கலந்துரையாடலொன்று காரைதீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இவ் விஷேட கலந்துரையாடல் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்ரினா முரளிதரன் ஆகியோரின் ஒருங்கிணைப்பில் நடைபெற்றது.

இதன்போது இவ்விரு மாவட்டங்களிலும் காணப்படும் எல்லைப் பிரச்சினை மற்றும் காணிப்பிணக்குகள் தொடர்பாக பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

மயிலத்தமடு மாதவனை, அம்பாறை மாவட்ட உகன மட்டக்களப்பு மாவட்ட வெல்லாவெளி, அம்பாறை மாவட்ட நாவிதன்வெளி, மட்டக்களப்பு மாவட்ட களுவாஞ்சிகுடி, அம்பாறை மாவட்ட கல்முனை எல்லைக்குட்பட்ட கால்நடை வளர்ப்பாளர்களின் மேய்ச்சல் தரை மற்றும் காணிப் பிரச்சினைகள், கல்முனை வடக்கு பிரதேச செயலக, காணி உறுதிப் பத்திரங்கள் வழங்குதல் தொடர்பாகவும் சுமுகமாக கலந்துரையாடி அவற்றை தீர்ப்பதற்கான ஆலோசனைகள் அரசாங்க அதிபர்களினால் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டன.



மேலும் சட்ட விரோதமாக காணிகளைப் பிடித்தல், சட்ட விரோத பயிர்ச் செய்கை, புதிதாக வீதிகளை அமைத்தல் மற்றும் மனித யானை மோதல் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. குறித்த கலந்துரையாடலில் மகாவலி அதிகார சபையினரால் மாவட்டங்களில் மேற்கொள்ளப்படுகின்ற செயற்திட்டங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. இக் கலந்துரையாடலில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்களான திருமதி சுதர்சினி ஸ்ரீகாந், திருமதி நவரூப ரஞ்சனி முகுந்தன், பிரதேச செயலாளர்கள், மகாவலி அதிகாரசபை அதிகாரிகள், காணி உத்தியோகத்தர்கள், துறைசார் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மணற்பிட்டி வால்கட்டு பிரதான வீதிக்கான கொங்கிறீட் இடும் பணிகள் ஆரம்பம்

கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜா ங்க அமைச்சரும், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான சிவ. சந்திரகாந்தனின் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் 85 மில்லியன் செலவில் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மணற்பிட்டி வால்கட்டு பிரதான வீதிக்கான கொங்கிறீட் இடும் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிருத்திக் குழு தலைவருமான சிவ. சந்திரகாந்தன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்திருந்தார்.

குறித்த இவ் வீதியானது சுமார் 40 வருடங்களுக்கு மேலாக செப்பனிடப்படாமல் மிகவும் சேதமடைந்து காணப்பட்டதால் இப் பிரதேசத்தில் உள்ள விவசாய நிலங்களுக்கான உள்ளீடுகளை எடுத்துச் செல்லுதல், விவசாய உற்பத்திகளை எடுத்துச் செல்லுதல் உள்ளிட்ட விவசாய நடவடிக்கைகளின் போது விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.



அத்தோடு வாகனங்கள் பயணிக்க முடியாத நிலையில் இவ் வீதியானது சேதமடைந்து காணப்பட்டதன் காரணமாக குறித்த இவ் வீதியினூடாக போக்குவரத்துக்கள் தவிர்க்கப்பட்டிருந்ததோடு, சுமார் 15 கிலோமீட்டர் தூரத்தை கடந்து மாற்று பாதைகளை பயன்படுத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு மக்களும் விவசாயிகளும் தள்ளப்பட்டிருந்தனர்.

## கிழக்கு மாகாணத்தில் முதல் தடவையாக தமிழர் பண்பாடும் செல் நெறிகளும் பன்னாட்டு ஆய்வு மகாநாடு

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட எழுத்தாளர் சங்கம் மற்றும் தமிழ் சங்கம் அந்தமான் தமிழ் இலக்கிய மன்றம் இணைந்து நடத்தும் தமிழர் பண்பாடும் செல் நெறிகளும் பன்னாட்டு ஆய்வு மகாநாடு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை (17.05.2024) மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பாரம்பரிய தமிழர் கலாசார முறைப்படி நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக, கிழக்குப் பல்கலைக் கழக உப வேந்தர் பேராசிரியர் வா.கனகசிங்கம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.ஜே முரளிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினர்களாக சென்னை கிறிஸ்தவக் கல்லூரியின் உதவிப் பேராசிரியர் சு.சதாசிவம் மற்றும் மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத் தலைவர் வீ.ரஞ்சிதமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்வாய்வு மகாநாட்டில் கலை கலாச்சார நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன் தமிழர் பண்பாடும் செல் நெறிகளும் என்னும் தலைப்பில் பன்னாட்டு ஆய்வு மகாநாடும் இங்கு இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து செம்புலன் ஆய்வு நூல் முதல் பிரதியை மாவட்ட அரசாங்க அதிபர் பெற்றுக் கொண்டதுடன். தமிழின் மேம்பாட்டுக்கு துணை நின்ற தமிழ்நாடு மற்றும் மட்டக்களப்பு மாவட்ட ஆய்வாளர்களும் கலைஞர்களும் இங்கு அதிதிகளால் கௌரவிக்கப்பட்டனர். 21 பேருக்கு சர்வதேச விருதுகள் பிரதம அதிதிகளால் வழங்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் முதல் தடவையாக இந்தியாவிலிருந்து 40 கலைஞர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்திய கலைஞர்கள் சுவாமி விபுலானந்தர் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

ஒரே மேடையில் தமிழின் மேம்பாட்டுக்கு துணை நின்ற தமிழ்நாட்டு மற்றும் மட்டக்களப்பு மாவட்ட 60 கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

தமிழ்நாட்டு நூல் ஆசிரியர்களால் வெளியிடப்பட்ட சில நூல்களும் இங்கு அதிதிகளால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

## 34 வருடங்களின் பின்னர் நடைபெற்ற சாம் தம்பிமுத்துவின் நினைவேந்தல்

பெரியபோரதீவு தினகரன் நிருபர்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அருண் தம்பிமுத்துவின் பெற்றோர்களாகிய சாம் தம்பிமுத்து, கலாமாணிக்கம் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டு 34 வருடங்களின் பின் இடம்பெற்ற முதலாவது நினைவேந்தல் நிகழ்வு கடந்த சனிக்கிழமை(18.05.2024) மாலை மட்டக்களப்பு வில்லியம் ஓல்ட் மண்டபத்தில் நடைபெற்றது.

அவர்கள் இருவரும் 34 வருடங்களுக்கு முன்பு கொழும்பில் வைத்து படுகொலை செய்யப்பட்டனர். அவர்களது முதலாவது நினைவேந்தல் நிகழ்வு அவர்களது ஏக புதல்வனான தம்பிமுத்துவின் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது சாம் தம்பிமுத்து, கலாமாணிக்கம் அவர்களது பெற்றோர்களது திருவுருவப் படத்திற்கு சாம் தம்புமுத்துவின் உறவினர்களால் மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

சாம் தம்பிமுத்து பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள் சம்பந்தமாகவும் அக்காலக் கட்சிகளின் அரசியல் இருப்பு பற்றியும் இங்கு கலந்து கொண்ட அரசியல் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளால் இதன்போது நினைவுரைகள் ஆற்றப்பட்டன.



கிழக்கு மாகாணத்தில் முதல் தடவையாக இறால் வளர்ப்பு முறையினை படுவான்கரை பகுதியில் அறிமுகப்படுத்திய பெருமை அவர்களை சாரும்.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஞானமுத்து சிறிநேசன், சீனிதம்பி யோகேஸ்வரன், பாக்கியச்செல்வம் அரியநேத்திரன், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெத்தினம், இ.பிரசன்னா, அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிப்பது? மு. கா இன்னமும் தீர்மானிக்கவில்லை

### முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாஹ்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்னும் எந்த தீர்மானமும் எடுக்கவில்லை என கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவர்களில் ஒருவருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

காங்கேயனோடையில் சமூகப் பணியில் ஈடுபட்ட சிரேஷ்ட பிரஜைகள் மற்றும் அரச சேவையிலிருந்து பதவி உயர்வு பெற்ற காங்கேயனோடைச் சேர்ந்த இரு பெண் உத்தியோகத்தர்களை கௌரவிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்



கடந்த (17) வெள்ளிக்கிழமை மாலை இடம் பெற்ற இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்ற ஜனாதிபதி வேட்பாளர்கள் யார் என்பது பற்றி இன்னும் தெரியாது.

ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்ட பின்னர் அது தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆராய்ந்து யாருக்கு தமது ஆதரவை வழங்குவது என்று முடிவெடுக்கும்.

இந்த நிலையில் இன்னும் யாரையும் ஆதரிப்பது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானிக்கவில்லை

கிழக்கு மாகாண முஸ்லிம்கள் மற்றும் இலங்கை முஸ்லிம்களுடைய நிலவரம், இலங்கையினுடைய பொருளாதார நிலவரம் சிறுபான்மை சமூகங்களின் அரசியல் உரிமை போன்ற பல்வேறு விடயங்களை வைத்தே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எந்த ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிப்பது என்று தீர்மானிக்கும் எனவும் மேலும் குறிப்பிட்டார்

## உயர் இரத்த அழுத்த தின சைக்கிள் பவனி

( மாளிகைக்காடு குறூப் நிருபர்)

உலக உயர் இரத்த அழுத்த தினத்தை முன்னிட்டு கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி பழைய மாணவர்கள் அமைப்பான ஸஹிரியன் '90 அமைப்பினரின் விழிப்புணர்வு சைக்கிள் பவனி அண்மையில் இடம்பெற்றது.



சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை முன்றலில் இருந்து ஆரம்பமான சைக்கிள் பவனி கல்முனை அம்பாறை நெடுஞ்சாலை வழியாக காரைதீவு, மாவடிப் பள்ளி வழியாக சம்மாந்துறையைச் சென்றடைந்து மீண்டும் சாய்ந்தமருதை வந்தடைந்தது.

## அட்டாளைச்சேனையின் நீரேந்து பகுதிகளில் நன்னீர் மீன் வளர்ப்பு மற்றும் கால்நடை பண்ணைகள்

(ஒலுவில் விசேட நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் தரிசு நிலங்களாக காணப்படும் நீரேந்து பகுதிகளில் நன்னீர் மீன் வளர்ப்பு மற்றும் கால் நடை பண்ணைகளை அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம். றியாஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஆராயும் பொருட்டு அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பி.ரீ.எம். இர்பான், அம்பாறை மாவட்ட கால் நடை சுகாதார திணைக்களத்தின் அதிகாரிகள், நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள், கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் அதிகாரிகள் மற்றும் சுற்றாடல் அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள் ஆகியோர் குறித்த பிரதேசங்களுக்கு வியாழக்கிழமை (16) நேரடியாக கள விஜயம் செய்து பார்வையிட்டனர்.



கோணாவத்தை ஆற்றங்கரை பிரசேங்களிலும் மீன் வளர்ப்பு திட்டத்தினை ஆரம்பிக்கவுள்ளதாகவும் பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம். றியாஸ் தெரிவித்தார்.

தரிசு நிலங்களாகவும், நீரேந்து பகுதிகளாகவும் காணப்படும் இடங்களை மக்கள் சட்ட விரோதமாகவும் அடாத்தாகவும் பிடித்து மண் இட்டு நிரப்பி வருவதனால் பாரிய அனர்த்தங்கள் ஏற்படுகின்றன. அனர்த்தங்களிருந்து மக்களை பாதுகாப்பதோடு, வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்கில் நன்னீர் மீன் வளர்ப்பு திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும், இதில் ஆர்வம் உள்ளவர்களுக்கான வழிகாட்டல்கள் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## காத்தான்குடி 5 பத்ரியா ஜும்ஆப் பள்ளிவாசலில் அன்னதானம்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்



காத்தான்குடி 5 பத்ரியா ஜும்ஆப் பள்ளிவாசலில் இரு பதாயிரம் பேருக்கு சமைத்த உணவு அன்னதானம் வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. காத்தான்குடி 5 பத்ரியா ஜும்ஆப் பள்ளிவாயலில் 38 ஆவது வருடமாக ஹாஜாஜி கந்தூரியை முன்னுட்டு இந்த சமைத்த உணவு அன்னதானம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

கந்தூரிக்கான கொடியேற்றம் கடந்த புதன்கிழமை இடம் பெற்றது.

கடந்த ஐந்து தினங்களாக காத்தான்குடி பத்ரியா ஜும்ஆப் பள்ளிவாசலில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன

இறுதி தினமான நேற்று ஞாயிற்றுக்கிழமை இருபதாயிரம் பேருக்கு சமைத்த உணவு அன்னதானமாக வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்த கந்தூரி நிகழ்வு காத்தான்குடி அப்துல் ஜவாத் ஆலிம் வலியுல்லாஹ் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் மௌலவி ஏ.ஜே.அப்துர் ரஊப் மிஸ்பாஹி தலைமையில். அவரின் பிரார்த்தனையுடன் அன்னதானம் வழங்கும் நிகழ்வு. ஆரம்பித்து வைக்கப்பட்டது

# மலையகத்தின் பல பகுதிகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை



கடும் மழை காரணமாக மலையகத்தில் பல மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் அதிகாலை 03.00 மணி முதல் இன்று (20) அதிகாலை 03.00 மணி வரை அமுலாகும் வகையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனத்தின் சிரேஷ்ட புவியியலாளர் வசந்த சேனாதீர தெரிவித்தார்.

அதன்படி, பதுளை மாவட்டத்தின் எல்ல பிரதேச செயலகங்களுக்கு இரண்டாம் கட்டத்தின் கீழ் எச்சரிக்கை அறிவிப்புகள் விடுக்கப்பட்டுள்ளன.

கடும் மழை காரணமாக பதுளை மாவட்டத்தில் மண்சரிவு அனர்த்தம் ஏற்பட்டு இரண்டு பிரதான வீதிகள் நேற்றுமுன்தினம் மூடப்பட்டன.

எல்ல பசறை பிரதான வீதியின் 21 கிலோமீற்றரிலும் , கொடுகஹ தென்ன பகுதியிலும் மண்சரிவு அனர்த்தம் ஏற்பட்டுள்ளதால் அவ் வீதியின் போக்குவரத்து முற்றாக தம்பிதமடைந்தது. இதேவேளை, நேற்றுமுன்தினம் தற்காலிகமாக மூடப்பட்ட எல்ல வெல்லவாய வீதி நேற்று காலை 06 மணியளவில் மீண்டும் திறக்கப்பட்டது. எல்ல வெல்லவாய பிரதான வீதியின் பல பகுதிகளில் சேறும் சகதியுமான நீர் பெருகியதன் காரணமாக நேற்று முன்தினம் இரவு 08 ஆம் திகதி முதல் வீதி தற்காலிகமாக மூடப்பட்டது.

நேற்று காலை வீதியை ஆய்வு செய்ததை தொடர்ந்து எல்ல வெல்லவாய வீதியை திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பதுளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. பதுளை மாவட்டத்தின் மேலும் 04 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் கண்டி, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை ஆகிய மாவட்டங்களுக்கும் மண்சரிவு எச்சரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சிரேஷ்ட புவியியலாளர் வசந்த சேனாதீர தெரிவித்தார்.

## மலைச்சாரல்



## மத்திய மாகாண யுத்த வீரர்கள் நினைவு தினம் அனுஷ்டிப்பு



(அக்குறணை குறூப் நிருபர்)

மத்திய மாகாண யுத்த வீரர்கள் நினைவு தினம் கண்டி, மயிலப்பிட்டிய யுத்த வீரர்கள் நினைவு தூபியில் நேற்று நடைபெற்றது.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

ஆளுநர் உட்பட உயிரிழந்த யுத்த வீரர்களது குடும்ப அங்கத்தவர்களால் மலரஞ்சலி செலுத்தப்பட்டது. யுத்த வீரர் சேவை அதிகார சபை, மத்திய மாகாண சபை, ஆளுநர் காரியாலயம் என்பன இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன மத்திய மாகாண பிரதான செயலாளர் அஜித் பிரேமசிங்க, ஆளுநர் செயலாளர் மஞ்சுலா மடஹபொல, கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன், ரணவிரு சேவா அதிகார சபையின் பிரதித் தலைவர் ஓய்வு பெற்ற எயார்வைஸ் மாசல் நிஹால் ஜயசிங்க உட்பட மரணித்த யுத்த வீரர்களது குடும்ப அங்கத்தவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## பாரிய மரம் முறிந்து வீழ்ந்ததில் இருவர் படுகாயம்

(அக்குறணை குறூப் நிருபர்)

தம்புள்ள பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பொலிஸ் போக்குவரத்துப்பிரிவின் உத்தியோகத்தர்கள் இருவர் பயணித்த மோட்டார் சைக்கிள் மீது பாரிய மரம் முறிந்து வீழ்ந்ததில் இருவரும் காயமடைந்துள்ளனர்.

மாத்தளை மற்றும் மரதன்கடவல பிரதேச போக்குவரத்துப்பிரிவுளைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் மீதே மரம் முறிந்து விழுந்துள்ளதாக தம்புள்ள பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் போக்குவரத்துப்பிரிவு தெரிவித்தது. இவர்கள்மாத்தளையிலிருந்து அநுராதபுரம் நோக்கிச்சென்று கொண்டிருந்தபோதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



கிராமிய வீதி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் உக்குவளை பிரதேசத்தில் ரூ.20 மில்லியன் செலவில் வரஹபிடிய வீதி புனரமைக்கப்பட்டுள்ளது. இதன்ஆரம்ப நிகழ்வு விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹண திசாநாயக்க தலைமையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

(படம்: மாத்தளை சுழற்சி நிருபர்)

## சடலம் மீட்பு

கிராந்துருகோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உள்ஹிடிய நீர்த்தேக்கத்தில் நபரொருவரின் சடலம் நீரில் மிதப்பதை மீன்பிடிக்க சென்ற ஒருவர் அவதானித்துள்ளார்.அதனைத்தொடர்ந்து மீனவர் சடலம் ஒன்று மிதப்பதாக கிராந்துருகோட்டை பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கியுள்ளார்.இதனைத்தொடர்ந்து அப்பகுதிக்கு விரைந்த கிராந்துருகோட்டை பொலிஸார் சடலம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் இதுவரையில் சடலம் அடையாளம் காணப்படவில்லை என தெரிவித்தனர்.சடலம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கிராந்துருகோட்டை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.





'வண்ணம் இரசனையில் தேடல்' எனும் தொனிப்பொருளில் இரத்தினபுரி ஹபுகஸ்தன்ன நாவலர் வித்தியாலயத்தில் அண்மையில் சித்திர கண்காட்சியொன்று நடைபெற்றது. பாடசாலை அதிபர் ஆர். சசிகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வை சித்திரப் பாட ஆசிரியர் பி. ரகுராஜ் மற்றும் பாடசாலைக்குழாமினர் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

இரத்தினபுரி நகரிலிருந்து 30 கிலோ மீற்றர் தொலைவில் தேயிலைத் தோட்டங்களுக்கு நடுவில் இப்பாடசாலை அமைந்துள்ளது. சித்திரங்களின் வியப்பினை கண்டுகளிக்க 17 வெளிப்பாடசாலைகளிலிருந்து பலரும் கலந்துகொண்டனர்.

# இரண்டு தனியார் பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்து 26 பேர் காயம்

கேகாலை அவிசாவளை வீதியின் கொட்டபொல பிரதேசத்தில் இரண்டு தனியார் பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.இந்த விபத்தில் 26 பேர் காயமடைந்துள்ளதாகவும், அவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கண்டியில் இருந்து அவிசாவளை நோக்கி பயணித்த தனியார் பேருந்து அதிவேகமாக பயணித்து மற்றுமொரு வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட போது இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். காயமடைந்தவர்கள் கேகாலை பொது வைத்தியசாலை மற்றும் தோரணகஹபிட்டிய கிராமிய வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பிந்தெனிய பொலிஸார் தெரிவித்தனர். விபத்துக்குள்ளான பேருந்து ஒன்றின் சாரதி ஆபத்தான நிலையில், உள்ளதாகவும் மற்றையவர் பெண் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# மாந்தை மேற்கு சாளம்பன் கிராம மக்களின் நீண்டகால பிரச்சினைக்கு தீர்வு

### ரூ.4.5 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் கழிவுநீர் கால்வாய் புனரமைப்பு

(மன்னார் குறூப் நிருபர்)



மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் சாளம்பன் கிராமத்தில் நீண்டகாலமாக நிலவி வந்த கழிவு நீர் பிரச்சினைக்கு தீர்வு கிடைத்துள்ளது.

இதனை சீர்செய்யும் நோக்கில் கால்வாய் புனரமைப்பு பணிகள் அண்மையில் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் அரவிந்தராஜா தலைமையில் வைபவ ரீதியாக இவ் வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.விழுதுகள் ஆற்றல் மேம்பாட்டு மையம் மற்றும் ஜீ.ஐ.சட் (GIZ)நிறுவனம் இணைந்து கோப் வேலைத்திட்டத்தின் கீழ் ரூ.4.5 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் கால்வாய் புனரமைப்பு பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

'கால்வாய்களை புனரமைப்பதன் மூலம் சமூகத்தை ஒன்றிணைக்கும் திட்டம்' எனும் தொனிப்பொருளில் சாளம்பன் கிராமத்தில் விழுதுகள் ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் மாவட்ட உத்தியோகத்தர் ஜெகநாதன் டலிமா தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

சாளம்பன் கிராமத்தில் பல்லின சமூகமும் வாழ்ந்து வருகின்ற நிலையில் குறித்த கிராமத்தினூடாக செல்லும் கால்வாயில் பாரிய புற்கள் காணப்படுகின்றது. அப்பகுதியில் பல கிராமங்களூடாக சென்று நாயாற்று வழி கடலில் கலக்கின்றது. இந்நிலையில் கால்வாய் உரிய முறையில் பராமரிப்பு இல்லாத காரணத்தால் பாரிய புற்கள் வளர்ந்துள்ளது. இதனால் கழிவுநீர் செல்ல முடியாத நிலை காணப்பட்டது. மழை காலங்களில் இக்கிராமத்தில் வெள்ள அனர்த்தம் ஏற்படும் நிலை காணப்படுகின்றது. இந்நிலையில் விழுதுகள் ஆற்றல் மேம்பாட்டு மையம் மற்றும் ஜீ.ஐ.சட் (GIZ) நிறுவனம் இணைந்து கோப் வேலைத் திட்டத்தின் கீழ் 4.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் குறித்த கால்வாய் புனரமைப்பு வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர்.

இந்நிகழ்வில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் அரவிந்தராஜா, ஜீ.ஐ.சட் (GIZ) நிறுவனத்தின் ஆலோசகர் சொர்ணம் பெர்ணான்டோ,மத தலைவர்கள்,நீர்பாசன பொறியியலாளர் உள்ளடங்கலாக கிராம மக்களும் கலந்து கொண்டனர்.

# வடக்கின் உதயம்





(யாழ்.விசேட நிருபர்)

இருபாலை தென்கோவை கற்பகப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 16 நாட்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 02ஆம் திகதி காலை தேர்த்திருவிழாவும் , 03ஆம் திகதி காலை தீர்த்த திருவிழாவும் நடைபெறவுள்ளது.

## சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய விசாகப் பொங்கல்

(சாவகச்சேரி விசேட நிருபர்)

சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய விசாகப் பொங்கல் மற்றும் அதனையொட்டிய காத்தவராயன் சிந்துநடைக் கூத்து நாடகம் ஆகியன இன்று (20) நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரியப்படுத்தியுள்ளனர். ஆலயத்தின் வருடாந்த விசாகப் பொங்கல் நிகழ்வுகள் இன்று காலை 7 மணிக்கு ஆரம்பமாகும் அதேவேளையில் ஆலயத்தில் 43 வருடங்களின் பின்னர் முதலி அம்மன் கலாமன்றத்தின் 'மாலைக்கு வாதாடிய மைந்தன்' காத்தவராயன் சிந்து நடை நாடகம் என்பன நடைபெறுவதுடன் அனைவருக்கும் இரவு நேர இராப் போசனமும் வழங்கப்படுமென ஆலய பரிபாலன சபையினர் தெரியப்படுத்தியுள்ளனர்.

## புதையல் தோண்டிய 7 பேர் கைது

(மன்னார் குறூப் நிருபர்)

மன்னார் பேசாலை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட சிறுத்தோப்பு காட்டுப் பகுதியில் புதையல் தோண்டிய கடற்படை அதிகாரியொருவர் உட்பட 7 பேர் நேற்றுமுன்தினம் மாலை கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைக்காக பேசாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இராணுவ புலனாய்வு துறையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மன்னார் மற்றும் பேசாலை பொலிஸார் இணைந்து நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் சிறுத்தோப்பு காட்டுப்பகுதியில் திடீர் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது புதையல் தோண்டும் உபகரணங்களுடன் 7 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் திருகோணமலை கடற்படை முகாமில் கடமையாற்றும் கடற்படை அதிகாரி என தெரிய வந்துள்ளது. ஏனையவர்கள் தென் பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரியவருகின்றது. கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் அவர்கள் பயன்படுத்திய இரண்டு வாகனங்கள் ஸ்கேனர் இயந்திரம்,மந்திரப்பொருட்கள் ஆகியவையும் மீட்கப்பட்டு பேசாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை பேசாலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## கடும் காற்று காரணமாக ஆலய கூரைகளுக்கு சேதம்

(யாழ்.விசேட நிருபர்)



யாழ்ப்பாணம் வேலணை பகுதியில் வீசிய கடும் காற்று காரணமாக ஆலயத்தின் கூரை சேதமடைந்துள்ளது. வேலணை செல்ல கதிர்காமம் முருகன் ஆலய கூரை ஓடுகளே இவ்வாறு சேதமடைந்துள்ளன4. சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## உணவகங்களில் திடீர் சோதனை

யாழ்ப்பாணம் , இணுவில் பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் உணவகங்களை நடத்திய உணவக உரிமையாளர் மூவரை கடுமையாக எச்சரித்த நீதிமன்றம், அவர்களுக்கு 60 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் விதித்துள்ளது. இணுவில் பகுதிக்கான பொது சுகாதார பரிசோதகர் சி. சிவானுஜன் இணுவில் பகுதியிலுள்ள உணவகங்களில் திடீர் சோதனை நடவடிக்கையை மேற் கொண்டார். இதன்போது மூன்று உணவகங்கள் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்துள்ளன, உணவக உரிமையாளர்களுக்கு எதிராக மல்லாகம் நீதவான் நீதி மன்றில் வழக்கு தொடர்ந்தார்.

## சூட்சுமமான முறையில் மேற்கொள்ளப்பட்ட மரக்கடத்தல் முயற்சி முறியடிப்பு

(ஓமந்தை விசேட நிருபர்)

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் வாகனமொன்றுக்குள் சூட்சுமமான முறையில் பாலை மரக்குற்றிகளை கடத்த முற்பட்ட வேளை வாகனமும் அதன் சாரதியும் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் பகுதியிலிருந்து வாகனமொன்றில் சூட்சுமமான முறையில் பாலை மரக்குற்றிகள் கடத்தப்படுவதாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.கே.ஹேரத் தலைமையிலான பொலிஸாரால் கடத்தல் முயற்சி முறியடிக்கப்பட்டிருந்தது.

வள்ளிபுனம் பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்ற வாகனம் தேராவில் வன இலாகாவிற்கு முன்பாக சென்றுகொண்டிருந்த போது நேற்று அதிகாலை வழிமறித்து சோதனையிடப்பட்டது இதன்போதே பாலை மரக்குற்றிகள் துண்டங்களாக போடப்பட்டு அதன்மேல் தண்ணீர் போத்தல்கள், ஊதுபத்தி வெற்று பெட்டிகளை கொண்டு மறைத்து இருந்ததை பொலிஸார் கண்டுள்ளனர்.

இவை வெளி மாவட்டத்துக்கு கொண்டு செல்லமுற்பட்ட போது பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

பல இலட்சம் பெறுமதியான பாலை மரக்குற்றிகளே இவ்வாறு துண்டங்களாக அறுக்கப்பட்டு கடத்தப்பட்டுள்ளன.

விசுவமடு பகுதியை சேர்ந்த வாகன சாரதியை இதன்போது கைது செய்யப்பட்டுள்ளதுடன் மீட்கப்பட்ட பாலைமரக் குற்றிகள் மற்றும் வாகனத்தையும் 46 வயதுடைய சந்தேக நபரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கையில் புதுக்குடியிருப்பு பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

# விலை கோரலுக்கான அழைப்பு (IFB)

# மேல் மாகாண சபை – பொறியியல் செயலணி

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக இயைபுடைய பிரதேச பொறியியலாளர் / பணிப்பாளர் (கட்டிடங்கள்) பெறுகைக் குழுத் தலைவரினால் தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. I. தேசிய போட்டிரீதியில் விலைக்கோரல் மூலம் ஒப்பந்ததாரர்கள் தெரிவு செய்யப்படுவர். 04/2016(iii)ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் (வெட் மற்றும் ஏனைய வரிகள் இன்றி) மொத்தப் பெறுகையின் பெறுமதி 50 மில்லியன் ரூபாவுக்குக் குறைவாக இருப்பதனால் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA பதிவுத் தர முன்னுரிமை பிரயோகிக்கப்படும்.
   II. 03/2020ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கை இந்தப் பெறுகைக்கு ஏற்புடையது.
3. ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்ளும் வெற்றிகரமான விலைகூறுநர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்கப்பட்டவர்களாக இருத்தல் ஆகாது என்பதுடன் விலைமனு ஆவணத்தின் பிரகாரம் பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

| (1) தொ. இல. | (2) ஒப்பந்தத்தின் இலக்கம் | (3) வேலையின் பெயர் | (4) நேரடி மதிப்பீட்டுக் கிரயம் | (5) 03ஆம் இலக்க பொது ஒப்பந்தத் தேவைப்பாடு | (6) CIDA பதிவு | (7) மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | (8) மீளளிக்கப்படும் விலைக்கோரல் பிணை முறி | (9) விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இடம் மற்றும் தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| **1** | **WP/PU/ CON/24/211** | பாணந்துறை - றோயல் கல்லூரியில் கேட்போர் கூடத்துடனான 150'x50' கட்டிடத்தின் மிகுதி வேலைகள் | 23,446,708.50 | ஆம் | C6 மற்றும் C5 | 5,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 150,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 300,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், ஸ்ரீ மகா விஹார வீதி, பாணந்துறை. T.P -: 038-2234774<br>சமர்ப்பித்தல்: பணிப்பாளர் (கட்டடங்கள்), பொறியியல் பணியகம் (மே.மா), 5ஆம் தளம், இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல. தொ.பே. **011-2092504** |
| 2 | WP/PU/ CON/24/212 | பாணந்துறை ஆதார வைத்தியசாலையிலுள்ள சமையலறையின் திருத்தவேலைகள் | 6,483,092.94 | ஆம் | C7 மற்றும் C6 | 2,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 40,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 80,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், ஸ்ரீ மகா விஹார வீதி, பாணந்துறை. T.P -: 038-2234774 |
| 3 | **WP/PU/ CON/24/213** | கம்பஹா மாவட்டப் பொது வைத்தியசாலையிலுள்ள 18ஆம் இலக்க வார்டை மேம்படுத்துதல் | 25,019,764.74 | ஆம் | C5 மற்றும் C4 | 8,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 160,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 320,000.00 | வழங்குதல்: பிரதேச பொறியியலாளர் அலுவலகம் கம்பஹா, நீதிமன்ற வீதி, கம்பஹா. தொலைபேசி இல. 033-2222515<br>சமர்ப்பித்தல்: பணிப்பாளர் (கட்டடங்கள்), பொறியியல் பணியகம் (மே.மா), 5ஆம் தளம், இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல. தொ.பே. **011-2092504** |
| 4 | WP/PU/ CON/24/214 | ஆய்வுகூட வசதிகளுக்காக கம்பஹா STD சிகிச்சையகத்தை விஸ்தரித்தல் | 9,793,996.10 | ஆம் | C6 மற்றும் C5 | 4,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 60,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 120,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம் கம்பஹா, நீதிமன்ற வீதி, கம்பஹா. தொலைபேசி இல. 033-2222515 |
| 5 | WP/PU/ CON/24/215 | வத்துபிட்டிவல ஆதார வைத்தியசாலையிலுள்ள பயிற்சி மருத்துவ அதிகாரிகளின் விடுதியை புதுப்பித்தல் (கூரை, கழிவறை, ஜன்னல்கள், நிறப்பூச்சு மற்றும் கதவு) | 8,107,829.90 | ஆம் | C7 மற்றும் C6 | 3,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 50,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 100,000.00 | |
| **6** | **WP/PU/ CON/24/216** | கம்பஹா DGH 10ஆம் இலக்க வார்டிற்கான திருத்தவேலைகள் | 19,239,732.25 | ஆம் | C6 மற்றும் C5 | 5,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 125,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 250,000.00 | |
| **7** | **WP/PU/ CON/24/217** | கம்பஹா DGH 9ஆம் இலக்க வார்டிற்கான திருத்தவேலைகள் | 17,565,759.80 | ஆம் | C6 மற்றும் C5 | 5,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 112,500.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 225,000.00 | |
| 8 | WP/PU/ CON/24/218 | மேமா/நீர்/சென் ஜோன் டி பெப்டிஸ்ட் ம. வி. - "L" வடிவிலான கட்டிடத்தின் திருத்தவேலைகள் | 3,283,115.40 | இல்லை | C8 மற்றும் C7 | 2,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 20,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 40,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், வத்தளை, இல. B/25/1, மகுள்பொக்குண வீதி, ராகம. தொலைபேசி இல. 0112952126 |
| 9 | WP/PU/ CON/24/219 | மேமா/கள/ஹீன்கந்த ம.வி. - இரண்டு மாடிக் கட்டிடத்தின் திருத்தவேலைகள் | 3,303,515.19 | இல்லை | C8 மற்றும் C7 | 2,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 20,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 40,000.00 | |
| இலக்கம் | ஒப்பந்தத்தின்/ வேலையின் பெயர் | கோவை இலக்கம் | மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணம் (ரூ.) | கேள்விப் பிணைக் கட்டணம் (ரூ.) |
|---|---|---|---|---|
| 01 | Sweat Inducer இயந்திரம் 01ஐ கொள்வனவு செய்தல் | LRH/$FB_1$/Sweat Inducer/2024 | ரூ. 2,000.00 | ரூ. 50,000.00 |

3. ஆய்வுகூடத்திற்கான Osmometer 01 இயந்திரத்தை கொள்வனவு செய்தல் லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலை (போதனா)

| இலக்கம் | ஒப்பந்தத்தின்/ வேலையின் பெயர் | கோவை இலக்கம் | மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணம் (ரூ.) | கேள்விப் பிணைக் கட்டணம் (ரூ.) |
|---|---|---|---|---|
| 01 | Osmometer இயந்திரம் 01ஐ கொள்வனவு செய்தல் | LRH/$FB_1$/Osmometer /2024 | ரூ. 2,000.00 | ரூ. 45,000.00 |

4. வைத்தியசாலையின் மின்சார லொன்டரிக்கு சலவை சாதனங்களை கொள்வனவு செய்தல் லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலை (போதனா)

| இலக்கம் | ஒப்பந்தத்தின்/ வேலையின் பெயர் | கோவை இலக்கம் | மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணம் (ரூ.) | கேள்விப் பிணைக் கட்டணம் (ரூ.) |
|---|---|---|---|---|
| 01 | Purchasing For Laundry Chemicals (Liquid) | LRH/F/FB/20/2024 | ரூ. 2,000.00 | ரூ. 45,000.00 |

5. வைத்தியசாலைக்கு கழிவுப் பொருட்கள் அகற்றும் உறைகளை கொள்வனவு செய்தல் லேடி ரிஜ்வே சிறுவர் வைத்திய சாலை (போதனா)

| இலக்கம் | ஒப்பந்தத்தின்/ வேலையின் பெயர் | கோவை இலக்கம் | மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணம் (ரூ.) | கேள்விப் பிணைக் கட்டணம் (ரூ.) |
|---|---|---|---|---|
| 01 | Purchasing For Garbage Bag | LRH/F/FB/19/2024 | ரூ. 2,000.00 | ரூ. 20,000.00 |

01. கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்காக கேள்விக்கட்டணமாக வைத்தியசாலை காசாளரிடம் காச செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுடன் குறித்த நிறுவனத்தின் கடிதத் தலைப்புடன் வேண்டுதல் கடிதமொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
02. கேள்விப் பத்திரத்தை கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கும் உருப்படிகளில் குறித்த பெறுமதி ரூபா 05 மில்லியனுக்கு மேற்படின் கேள்விதாரரிற்கு அல்லது சார்பாக நகல் பிரதிநிதியொருவர், உப முகவர், முகவர் அல்லது பெயர் குறிப்பிடுபவர் என பதிவுச் சான்றிதழை பொது ஒப்பந்த பதிவாளர், கொழும்பு இடம் பெற்றுக் கொண்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
03. கேள்விகள் வேறு வேறாக மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுவதுடன் கேள்விகளைச் சமர்ப்பிக்கும்போது பதிலீட்டுக்காக விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் கூடாது அத்துடன் அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
04. மேலதிக தகவல்கள் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்படும்
05. ஆர்வம் காட்டுகின்ற மற்றும் தகைமையுடைய கேள்விதாரர்கள், பிரதிநிதிகள் அல்லது பெயர் குறிப்பிடக்கூடியவரால் கீழ்க் குறிப்பிடப்படும் பொருட்களை சமர்ப்பித்து கொள்வனவு செய்யப்படும் முழுமையான கேள்வித் தொகுதியொன்றின் மூலம் மாத்திரம் பொறியிடப்பட்ட கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
    I. பணிப்பாளர், லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலை (போதனா) இற்கு குறித்த நிறுவனத்தின் கடிதத் தலைப்புடன் சமர்ப்பிக்கப்படும் எழுத்துமூல விண்ணப்பம்
    II. மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படாத கட்டணத்தை காசாகச் செலுத்தி லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் காசாளர் பிரிவில் இருந்து பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டு
06. லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் தொ.பே. இலக்கம் 0112-693711 (நீடிப்பு 350 அல்லது 379) இடமிருந்து கேள்விதாரர்களுக்கு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன் பெறுகை ஆவணங்களை 2024.06.07 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் மாத்திரம் லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் பிரதம கணக்காளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.
07. பெறுகை ஆவணங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் உருப்படியின் பெயரைக் தெளிவாகக் குறிப்பிட வேண்டியதுடன் இரு பிரதிகளுடன் தயாரிக்கப்பட்ட பொறியிடப்பட்ட கேள்விகள், தலைவர், பிரதேச பெறுகைக் குழு. லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலை, கொழும்பு -08 என்ற முகவரிக்கு 2024.06.10 மு.ப. 10.00 இற்கு முன்பு தபாலில் அனுப்பலாம் அல்லது லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் பிரதம கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் (அன்றே மு.ப. 10.00 இற்கு) கேள்விகள் திறக்கப்படும்.
08. கேள்விகள் திறக்கப்படும் வேளையில் நிறுவனத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பிரதிநிதியொருவர் சமுகமளிப்பதாயின் அது பற்றி உறுதி செய்யும் கடிதத்தை குறித்த நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் சமர்ப்பித்தல் வேண்டும்.
09. இப்பெறுகை பற்றிய வைத்தியசாலை பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**லேடி ரிஜ்வே சிறுவர் மருத்துவமனை,**
**பொரளை, கொழும்பு -08.**

# இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை

## பதவி நிலையினருக்கான வெற்றிடங்கள்

இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை (CAASL) மூலோபாய திட்டமிடல், தொழில்முறை வழிகாட்டுதல் மற்றும் தீவிர கண்காணிப்பு ஆகியவற்றின் மூலம் நன்கு நிறுவப்பட்ட ஒழுங்குமுறை கட்டமைப்பின் கீழ் தேசிய சட்டத் தேவைகள் மற்றும் சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்கு (SARPs) இணங்க பாதுகாப்பான திறமையான வழக்கமான மற்றும் சுற்றுச்சூழல் நட்புடன் தேசிய சிவில் விமானச் சேவை அமைப்பின் செயல்பாட்டை உறுதி செய்கின்றது. இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது பின்வரும் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் சிறந்த தகுதி மற்றும் விரிவான அனுபவத்தைக் கொண்ட ஆற்றல் மிக்க, அனுபவமுள்ள மற்றும் சுயமாக சிந்தித்து செயலாற்றக்கூடிய பணியாளர்களை தேடுகின்றது.

**பணிப்பாளர் (மனித வளம் மற்றும் ஆதன முகாமைத்துவம்)**
**பதவிக் குறியீடு HM-1-1D9 பதவிகளின் எண்ணிக்கை 01**

வழங்கப்படும் வேதனம்: (சம்பள அளவு) (HM1-1) ரூபா 80,295-15x2,2700-114,345 - 02/2016 (I) முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் பிரகாரம்.

அனைத்தையும் உள்ளடக்கிய மாதாந்த சம்பளம் அண்ணளவாக 173,595.00 ரூபாவாகும். அடிப்படைச் சம்பளம், வாழ்க்கைச் செலவுப்படி, மாதாந்த கொடுப்பனவு, இடைக்கால கொடுப்பனவு மற்றும் போக்குவரத்து கொடுப்பனவு என்பன பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் அடக்கப்படும்.

எரிபொருள் கொடுப்பனவு மாதத்திற்கு 115 லீட்டர் (அந்த நேரத்தில் உள்ள எரிபொருள் விலையில்)

பிற நன்மைகள்: மருத்துவ காப்பீட்டுத் திட்டம், விபத்து காப்பீட்டுத் திட்டம், இறப்பு மானியத் திட்டம், போனஸ், விடுமுறைக் கொடுப்பனவு, கையடக்கத் தொலைபேசி கட்டண பற்றுச்சீட்டுக்களை மீள்செலுத்துதல்.

| தகைமை மற்றும் அனுபவம் | |
|---|---|
| **வெளிவாரி விண்ணப்பதாரிகள்**<br>இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவம், நிர்வாகம் அல்லது வர்த்தகம் ஆகிய துறைகளில் பெற்ற மூன்று வருடங்களுக்கு குறையாத இளமாணிப் பட்டம்<br><br>**அத்துடன்**<br>முகாமைத்துவம், நிர்வாகம், வர்த்தகம் அல்லது தொடர்புடைய துறையில் பட்டப் பின்படிப்பு (Masters) பட்டத் தகைமை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் இணை அங்கத்துவம்<br><br>**மற்றும்**<br>கூட்டுத்தாபனமொன்றில், நியதிச்சட்ட சபை/ நிறுவனம்/அரசு சார்ந்த நிறுவனம் அல்லது புகழ்வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் ஆகக் குறைந்தது பத்து (10) வருட அனுபவம். | **உள்வாரி விண்ணப்பதாரிகள்**<br>(கீழேயுள்ள 01 அல்லது 02 விருப்பத் தேர்வு)<br><br>**விருப்பத் தேர்வு 01**<br>வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளைப் பெற்றிருத்தல்.<br><br>**விருப்பத் தேர்வு 02**<br>மனித வளம் மற்றும் ஆதன முகாமைத்துவத்தில் முகாமையாளர் வகுதி (எம்எம் 1-1) 1 ஆம் தர பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.<br>அத்துடன்<br>கடந்த ஐந்து (05) வருடங்களில் கறைபடாத சாதனைப் பதிவு மற்றும் தற்போதைய பதவியில் அனைத்து சம்பள உயர்வுகளையும் பெற்றிருத்தல்.<br>அத்துடன்<br>கடந்த ஐந்து (05) வருடங்களுக்கான வருடாந்த செயற்றிறன் மதிப்பீட்டில் 'சிறந்த' அல்லது அதற்கு மேலான தரப்படுத்தல். |

**வயது எல்லை:**

| பதவி | வயதெல்லை | குறிப்புக்கள் |
|---|---|---|
| பணிப்பாளர் | 35-55 வயதுக்கிடையில் | இலங்கை விமானப்படை, விமானநிலையம் மற்றும் வரையறுக்கப்பட்ட விமான சேவைகள் (ஸ்ரீலங்கா), உள்ளூர் விமான சேவைகள் அல்லது பறக்கும் பயிற்சி பாடசாலைகள் ஆகியவற்றில் பணியாற்றிய உள்வாரி மற்றும் ஆளணியருக்கு மேல் வயதெல்லை பிரயோகப்படுத்தப்பட மாட்டாது.<br><br>மேலதிக தகவல்கள், பதவி விபரங்கள் மற்றும் நிலையான விண்ணப்பப்படிவத்தை இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபையின் **www.caa.lk** என்ற உத்தியோகபூர்வ இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.<br><br>விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்த பதவிக்கான தகுதியை நிரூபிக்கும் தகுதிகள் மற்றும் அனுபவத்திற்கான ஆவண ஆதாரங்களின் பிரதிகளுடன் விண்ணப்பத்தை அனுப்புமாறு கேட்டுக் கொள்கின்றனர்.<br><br>நிலையான விண்ணப்ப படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும். எந்தவொரு அரசாங்க நிறுவனத்திலும் சேவை செய்யும் விண்ணப்பதாரர்கள் அந்தந்த நிறுவனத்தின் தலைவர் மூலமாகவே விண்ணப்பித்தல் வேண்டும்.<br><br>உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பின்வரும் முகவரிக்கு 2024.06.02 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் **employment@caa.lk** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டுமென்பதுடன் அவைகள் அங்கீகரிக்கப்படும்.<br><br>விண்ணப்பங்களை சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி, இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை, இல. 152/1, மினுவாங்கொட வீதி, கட்டுநாயக்க என்ற முகவரிக்கு அனுப்புதம் வேண்டும. விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.<br><br>தகுதித் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள வீண்ணப்பதாரிகள் மட்டுமே நேர்முகத் தேர்வு / பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்.<br><br>**சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகம்/ பிரதான நிறைவேற்று அதிகாரி,**<br>**இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை,**<br>**இல. 152/2, மினுவாங்கொட வீதி,**<br>**கட்டுநாயக்க.**<br>**19.05.2024** |

Daily News Classifieds, the Housewives' companion

## பெறுகை அறிவித்தல்

# போதனா வைத்தியசாலை – அநுராதபுரம்

அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்குத் தேவையான மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன என்பதுடன் அது தொடர்பான விபரங்களை இங்கு காணப்படும் QR குறியீட்டை Scan செய்வதன் மூலம் அல்லது tha.lk எனும் இணைய தளத்திற்குப் பிரவேசித்து services > tender என்பவற்றிற்குப் பிரவேசித்துப் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு 025-2222261/62-63 தொலைபேசி இலக்கத்தில் 122 நீடிப்பைத் தொடர்பு கொள்ளவும்.

# மக்கள் வங்கி

## பிராந்திய தலைமைக் காரியாலயம் -பொலன்னறுவை

மக்கள் வங்கி பொலன்னறுவை பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் சேவை மையங்களில் 28.02.2023 வரை அடகு வைக்கப்பட்டு 07.06.2024 திகதி வரை மீட்கப்படாததும் புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடக்கம் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 08.06.2024 மற்றும் 09.06.2024

**ஏல விற்பனை நிகழும் இடங்கள்**

| ஏல விற்பனை | பொலன்னறுவை கிளை | தெஹியத்த கண்டிய கிளை |
|---|---|---|
| கிளைகள் | பொலன்னறுவை கிளை பொலன்னறுவை, ஹிங்குராகொட, ஹபரண, மெதிரிகிரிய, பொலன்னறுவை நகரக்கிளை, பக்கமூன, தம்பால | அரலகங்வில, வெலிகந்தை, தெஹியத்தகண்டிய |
| **சேவை** மையங்கள் | கதுறுவெல, தியசென்புர, வைத்தியசாலை வளாகம், தியபெதும, லங்காபுர, ஜயந்திபுர, புலதிசி | மன்னம்பிட்டிய, செவனபிட்டிய, சிறிபுர, சந்துன்புர |

இந்த ஏலங்களை மறுஅறிவித்தல் இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், மக்கள்வங்கி, பிராந்திய தலைமைக் காரியாலயம், புதிய நகர், பொலன்னறுவை தொலைபேசி இல. 027-2223900, 027-2224404, 027-2225760, 027-2226626, 027-2226625.

PEOPLE'S BANK
Pride of the Nation

# அரச ஈட்டு முதலீட்டு வங்கி

SMIB

## கைவிடப்பட்ட சொத்து தொடர்பிலான அறிவிப்பு

- 72ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் படி கடந்த 10 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலங்கள் எவ்வித பரிவர்த்தனைகளும் மேற்கொள்ளப்படாத செயலற்ற நிலையில் காணப்படும் எந்த வங்கிக் கணக்கும் 'வாடிக்கையாளர்களால் கைவிடப்பட்ட சொத்துக்கள்' எனும் வகைக்கு உட்படுத்தப்படும்.
- வாடிக்கையாளர்களால் கைவிடப்பட்ட சொத்தின் கணக்கு விபரங்களை மேற்குறிப்பிட்டதற்கிணங்க, வங்கிச்சட்ட பிரிவு 73 (1)இன் படி இலங்கை மத்திய வங்கிக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
- கணக்குரிமையாளரின் சொத்தின் பாதுகாப்பை கருத்திற் கொண்டும் கணக்குரிமையைக் கோரும் எவ்வித தொடர்புகளுமற்ற நபர்களிடமிருந்து சொத்தை பாதுகாப்பதனை கருத்திற் கொண்டும் கைவிடப்பட்ட சொத்துக்கள் தொடர்பிலான விபரங்கள் பிரசுரிக்கப்பட மாட்டாது.
- கைவிடப்பட்ட சொத்துக்கள் என வகைப்படுத்தப்பட்ட கணக்குகளின் உறுதிப்படுத்தலைப் பெற்றுக் கொண்ட வாடிக்கையாளர்கள், எந்தவொரு கிளையிலேனும் உரிய கணக்கிற்கான ஒரு பரிவர்த்தனையை மேற்கொள்வதாலோ அல்லது கணக்கினை செயற்படுத்துவதற்கு எழுத்துமூல ஆவணமொன்றை சமர்ப்பிப்பதாலோ அல்லது உரிய ஆவணத்தை வங்கிக்கு அனுப்பி வைப்பதன் மூலமாகவோ கணக்கினை மீள செயற்படுத்திக் கொள்ள முடியும்.

**அரச ஈட்டு முதலீட்டு வங்கி,**
**இல. 269, காலி வீதி, கொழும்பு -03.**

கமத்தொழில் மற்றும் கைத்தொழில் அமைச்சு

# தேசிய உணவு மேம்பாட்டு சபை

(இலங்கை தேசிய பட்டினி இல்லாதொழிப்பு செயற்பாட்டு மையம்)

NFPB National Food Promotion Board

## பாடசாலை மதிய உணவுத் திட்டத்திற்கு அரிசியை உற்பத்தி செய்து விநியோகிக்க, பொருத்தமான வழங்குனர்களை அரசு தனியார் கூட்டாண்மையின் கீழ் தேர்வுதெடுப்பதற்கு பொருத்தமான ஆர்வ வெளிப்பாட்டாளர்களுக்கான அழைப்பு. (EOI)

தேசிய உணவு மேம்பாட்டு சபை உலக உணவுத் திட்டத்தின் நிதிப் பங்களிப்போடு பாடசாலை மதிய உணவுத் திட்டத்திற்காக இரும்பு மற்றும் ஃபோலிக் அமிலத்தால் செறிவூட்டப்பட்ட அரிசியை தயாரித்து விநியோகிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி, ஹம்பாந்தோட்டை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இரண்டு அதிகாரமளிக்கப்பட்ட அரிசி பதப்படுத்தும் அலகுகளை ஆரம்பிப்பதற்கான ஆர்வ வெளிப்பாட்டாளர்களுக்கான விலைமனுக்கோரல் அதன்படி, செறிவூட்டப்பட்ட அரிசியை உற்பத்தி செய்து விநியோகிக்க திறன் / சாத்தியமான திறன் கொண்ட அரிசி பதப்படுத்துபவர்களிடமிருந்து அழைப்பு விடுக்கப்படுகின்றன.

செயற்திட்டத்தின் வெளியீடுகளில் கிடைக்கும் நன்மைகள் மற்றும் பலன்களின் சேர்த்து அரிசியை பதப்படுத்துதல், விநியோகித்தல் தொடர்பாக உங்களால் முன்வைக்கப்படும் முன்மொழிவினை தெளிவாக குறிப்பிட வேண்டும். பதப்படுத்தப்பட்ட அரிசி உற்பத்தி செயல்முறைக்குத் தேவையான குறிப்பிட்ட இயந்திரம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆர்வவெளிப்பாட்டளருக்கு வழங்கப்படும் மேலும் இயந்திரத்தின் மதிப்புக்கு ஏற்ப பண வைப்புத்தொகையினை சபையினால் வழங்குவதற்கு ஆர்வவெளிப்பாட்டளரினால் ஒப்பந்தவாரியாக சம்மதிக்க வேண்டும்.

**சமர்ப்பித்தல்**

ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பம் மற்றும் பரிந்துரை வழிகாட்டி ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள **ரூ.2500.00** மீள் வழங்கப்படாத வைப்புத்தொகையைச் சபையின் கணக்குத் பிரிவிற்கு செலுத்துவதன் மூலம் விண்ணப்பம் மற்றும் பரிந்துரை வழிகாட்டி ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை பெற்றுக்கொள்வது **2024 மே மாதம் 30 ஆம் திகதி பி.ப.2.30 மணியுடன்** முடிவடைகிறது, மேலும் ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை இறுதி நேரத்திற்கு முன்பு பின்வரும் முகவரிக்கு கிடைக்ககூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் வந்து ஒப்படைக்களாம். கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில்,**"பாடசாலை குழந்தைகளுக்குச் செறிவூட்டப்பட்ட அரிசியை வழங்குதல்"** எனக் குறிப்பிடப்பட வேண்டும். குறிப்பிடப்பட்ட நேரம் அல்லது திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தகுதியான ஆர்வவெளிப்பாட்டாளர்களை தேர்வு பணி நிபுணர் குழுவால் மேற்கொள்ளப்படுகிறது. விண்ணப்பங்களை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தலைவருக்கு உண்டு.

**மேலதிக விவரங்களுக்கு தொடர்புகொள்ளவும் - 0112370020**

பணிப்பாளர்,
**தேசிய உணவு மேம்பாட்டு சபை**
இல. 45, கிரிமண்டல மாவத்தை, நாரஹேன்பிட்ட. தொலைபேசி : 011 2506895, பெக்ஸ் : 011 2506907
www.nfpb.lk

The Housewives' companion
Classifieds on
Daily News

அரச பொருந்தோட்ட தொழில்முயற்சி மறுசீரமைப்பு அமைச்சு
மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை

# மரங்களை வீழ்த்துவதற்கான பெறுகை அறிவித்தல்

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு சொந்தமான கேட்வெலி, ரஹதுன்கொட மற்றும் தெல்தொட்ட தோட்டங்களில் உள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மரங்களை விற்பதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன (அரசின் அனைத்து வரி மற்றும் கட்டணங்கள் சார்ந்தது)

| வரிசை இலக்கம் | தோட்டம் | பிரிவு | துறை | மர வகை | மரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 01 | கேட்வெலி | பட்டவீர | 11,6A | இயுகலிப்டஸ் | 192 |
| 02 | ரஹதுன்கொட | ரிவடேல் | 02 | இயுகலிப்டஸ் | 400 |
| 03 | தெல்தொட்ட | தெல்தொட்ட | 01,04, 05,07, 12,13, 15,17 | இயுகலிப்டஸ் | 214 |
| **மொத்தம்** | | | | | **806** |

கேள்விமனு விண்ணப்பங்களை குறித்த தோட்ட அலுவலகத்தில் அந்தப் பிரிவுக்காக வேறாக 10,000 ரூபா மீளளிக்கப்படாத கேள்விமனு கட்டணத்தை செலுத்தி 2024.05.20 ஆம் திகதி தொடக்கம் 2024.06.09ஆம் திகதி பி.ப. 3.00 வரை வாரத்தின் வேலை நாட்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விமனு ஆவணங்களை 2024.06.10 ஆம் திகதி பி.ப. 2.00க்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் கீழுள்ள முகவரிக்கு அனுப்புவது அல்லது இதற்காக வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு முடியும். கேள்விமனுக்கள் அன்றைய தினத்தில் அந்த நேரத்திற்கே திறக்கப்படுவதோடு கேள்விமனுதாரர் அல்லது அவர்தம் பிரதிநிதி ஒருவருக்கு அந்த சந்தர்ப்பத்திற்கு பங்கேற்க முடியும்.

**தலைவர்**
**மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை**
**55/75, வொக்சோல் வீதி,**
**கொழும்பு 02.**

## விசேட மகாசபை

# வ/ப இலங்கை சுகாதார ஊழியர் குழாம் அபவிருத்தி சேவை கூட்டுறவுச்சங்கம்

மேறப்டி பெயர் குறிப்பிடப்படும் எமது கூட்டுறவு சங்கத்தின் எதிர்வரும் வாக்கெடுப்பு வரை தலைவர் பதவிக்காக இடைக்கால யாப்பின் 3.16.3 பிரிவின் பிரகாரம் தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தவர் அல்லது 3.16.6 பிரிவின் பிரகாரம் வேறு அங்கத்தவர் அத்தலைவர் பதவிக்காக தேர்ந்தெடுத்தல் சார்பான விசேட மகாசபை இல. 65, ஹைலெவல் வீதி, மஹரகம, தேசிய இளைஞர் சேவை சபை கேட்போர் கூடத்தில் நடைபெறுவதாக வ/ப இலங்கை சுகாதார ஊழியர் குழாம் அபிவிருத்தி சேவை கூட்டுறவு சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

**விசேட மகா சபையை கோருவதற்கான காரணங்கள்**

01. இடைக்கால யாப்பின் 3.5.1 பிரிவின் பிரகாரம் முழு அங்கத்தவர் எண்ணிக்கையில் 1/8 இற்கு மேற்பட்ட தரப்பினரின் வேண்டுதலுக்கு அமைவாக விசேடமாக சபை கூட்டம் கோரப்பட்டு தலைவர் ஒருவரை தேர்ந்தெடுக்குமாறு அங்கத்தவர்கள் விடுவித்திடும் வேண்டுகோளை முதன்மையாகக் கொண்டு இவ்விசேட மகாசபை கோரப்படுகின்றது.
02. கடந்த வாக்கெடுப்பின் போது அதிகூடிய அங்கத்தவர் வாக்கில் சங்கத்தின் தலைவராக இருந்த திரு. எம். டபிள்யூ. கருணாரத்ன வ/ப சுகாதார திணைக்களத்தின் கூட்டுறவு சிக்கன கடன் வழங்கும் சங்கத்தின் மூலம் பெற்றுக் கொண்ட கடன் தொகை சார்பாக குறித்த தவணைக் கட்டணத்தை செலுத்தத் தவறியுள்ளமை தெரியவந்த படியால் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவு சங்க பதிவாளரால் அவர் வகித்த பதவி இரத்துச் செய்யப்பட்டுள்ளது.
03. அதன் பிரகாரம் 2024.04.04ம் திகதி இல. சா.சங்.தே./சட்டம்/1/11 உடனான கடிதம் மூலம் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவு சங்க பதிவாளரால் விநியோகிக்கப்பட்டுள்ள கட்டளையின் பிரகாரம் இடைக்கால யாப்பின் 3.16.3 பிரிவின் படி செயற்படல் வேண்டும்.
04. இடைக்கால யாப்பின் 3.16.3 முதல் 3.16.6 வரையான பிரிவு கீழ்க்காணுமாறு அமையும்.

3.16.3 அந்த நபர் இடைக்கால யாப்பில் குறிப்பிடப்படும் தன்மை உள்ள ஒருவராக இருத்தல் வேண்டும். அவ்வாறே வாக்கெடுப்பில் கூடுதல் வாக்கில் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவரின் வெற்றிடமாயின் அடுத்தபடியாக கூடுதல் வாக்கில் பெற்றுள்ளவர் அவ்வெற்றிடத்திற்கு நியமிப்பதற்கு பணிப்பாளர் சபைக்கு அதிகாரம் உண்டு.
3.16.4 அவ்வாறு வெற்றிடத்திற்கு ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு அடுத்து நடைபெறும் சங்கத்தின் மகாசபைக்கு அது பற்றி அறிவித்தல் வேண்டும்.
3.16.5 அவ்விடயம் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு உட்படுத்தப்படல் வேண்டும்
3.16.6 பெயர் குறிப்பிட்டு நபர் அல்லது வேறு நபர் வெற்றிடத்துக்கு தேர்ந்தெடுப்பதற்கு மகா சபைக்கு அதிகாரம் உள்ளவர் ஆவார் அதன் பிரகாரம் விசேட மகா சபைக்கு கீழ்க்காணும் ஆலோசனைகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

01. சங்கத்தின் இடைக்கால யாப்பின் 3.16.3 பிரிவின் பிரகாரம் தலைவர் பதவிக்காக அடுத்து கூடிய விருப்பு வாக்கு பெற்றுக் கொண்ட அங்கத்தவர் இல. 5736 உடைய திரு. கே. யூ. கே. நெலும்தெனிய 2024.05.11ம் திகதி சங்கத்தின் பணிப்பாளர் சபையினால் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் அதன் பிரகாரம் அவர் அப்பதவிக்கு நியமித்ததை விசேட மகா சபையில் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகின்றது.
02. சங்கத்தின் இடைக்கால யாப்பின் 3.16.6 பிரிவின் பிரகாரம் சங்கத்தின் மகா சபையின் மூலம் வேறு அங்கத்தவர் வெற்றிடத்திற்காக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு விசேட மகாசபை நடைபெறும் வேளையில் ஆலோசனைகள் இருப்பின் அவ்ஆலோசனைகள் சமர்ப்பித்தல் மற்றும் ஆமோதித்தல் கவனிக்கவும்

01. இவ்விசேட மகா சபையில் மேற்படி பதவிக்காக ஒரு பெயருக்கு மேற்பட்ட அளவில் முன்வருகின்ற சகல சந்தர்ப்பங்களிலும் வாக்கெடுப்பை நடத்துவதற்கு நடடிக்கையெடுக்கப்படும்.
02. இவ் ஆலோசனைகளை சமர்ப்பிக்கும் வேளையில் வாக்கை அளிப்பதற்கு முடியுமாறு அவ் ஆலோசனைகள் ஆமோதிக்கப்படும் வேளையில் மகா சபைக்கு வருகை தருகின்ற அங்கத்தவர்களுக்கு மட்டும்.

**மேற்படி விடயங்களுக்காக விசேட மகா சபை**

- 2024 ஜூன் 04ம் திகதி மு.ப. 10.00 முதல் தேசிய இளைஞர் சேவை சபை இல. 65, ஹைலெவல் வீதி. மஹரகம என்ற இடத்தில் நடைபெறுவதாக இத்தால் அறிவித்தல் விடுக்கின்றேன்.

அங்கு வாக்கெடுப்பு நடைபெற்றால் மாத்திரமே வாக்களிப்பதற்கு வாக்குரிமையுள்ள அங்கத்தவர்கள் தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதற்காக கீழ்க்காணும் ஆளடையாள பத்திரங்களில் ஒன்றை சமர்ப்பித்தல் கட்டாயமானது.

1. தேசிய அடையாள அட்டை
2. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்
3. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
4. செல்லுபடியாகும் சேவை அடையாள அட்டை

**டி.எம்.எஸ். திஸநாயக்க,**
**செயலாளர்,**
**வ/ப இலங்கை சுகாதார ஊழியர் குழாம் அபிவிருத்தி சேவை கூட்டுறவு சங்கம்,**
**இல. 19, ஹெஜக் கோட்,**
**கொழும்பு -10.**
2024.05.18

## கேள்வி அறிவித்தல்

# இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**சுத்திகரிப்புப் பிரிவு**
**சுத்திகரிப்பு வீடமைப்புத் திட்டத்தின் தோட்டப் பராமரிப்பிற்கான கேள்வி**
**கேள்விக் குறியீட்டு இல. – PD/SER/03/2024**

12 மாதங்களுக்கு சுத்திகரிப்பு வீடமைப்புத் திட்டத்தின் தோட்டத்தைப் பராமரிக்கும் சேவையை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் கோருகின்றார்.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்குத் தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் தகைமைத் தகவுத்திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விலைமனு ஆவணங்களை CPC இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம். உ-ம் http://ceypetco.gov.lk/public-tenders/. விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமான 1,000.00 ரூபாவை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் (தலைமை அலுவலகம்) பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலத்திற்குச் செலுத்தலாம். தயவு செய்து வங்கிப் பற்றுச்சீட்டை விலைமனுவுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

சகல விலைமனுதாரர்களும் 2024-06-06ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்புப் பிரிவில் இடம்பெறும் தள விஜயத்தில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

விலைமனுக்கள் 2024-06-14ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09.**
**தொலைபேசி: 0094-11-5455332**
**தொலைநகல்: 0094-11-5455424**

## 2025 வரவு செலவிற்கான முன்மொழிவுகள் பெற்றுக்கொள்ளல்

# பிரதேச சபை – பிபிலை

2025 வரவு செலவினை அமைப்பதற்கு நிலையான வருமான மதிப்பீட்டிற்கு மற்றும் அபிவிருத்தி திட்டத்திற்கு உட்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள முன்மொழிவுகளை 2024 ஜூன் 30 ஆம் திகதிக்கு முன் பிபிலை பிரதேச சபை காரியாலயத்திற்கு அல்லது info.bibile.ps@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாக பெற்றுத் தருமாறு அறிவிக்கின்றேன்.

**சபை செயலாளர்,**
**பிரதேச சபை - பிபிலை**

## 1964ஆம் ஆண்டின் 28ஆம் எண் காணி கையகப்படுத்துதல் (திருத்தம்) சட்டத்தால் திருத்தப்பட்ட காணி கையகப்படுத்துதல் சட்டத்தின் (அத்தியாயம் 460) பிரிவு 7(1)இன் கீழ் அறிவிப்பு

**எனது இலக்கம்:**
KDS/UDB/4/1/1/147(உது/2/5/2/71)

**காணி அமைச்சின் இலக்கம்:**
4-3/2/2012/FR/107

கீழே உள்ள உபஅட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள காணி/காணிகள் பொது நோக்கத்திற்காக அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட வேண்டும். மேலும் தகவலுக்கு 02.03.2024ஆம் திகதி இலக்கம் 2373/58 இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் சிறப்பு வர்த்தமானியைப் III பகுதியை பார்க்கவும்.

**ஜயமினி போகஹவத்த**
**பிரதேச செயலாளர்,**
**உடதும்பர.**

13.05.2024 திகதி
**உடதும்பர பிரதேச செயலகத்தில்**

**உப அட்டவணை**

மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டம், உடதும்பர பிரதேச செயலகப் பிரிவின் மீமுரே கிராம உத்தியோகத்தர் பிரிவின் அமைந்துள்ள காணி

காணியின் பெயர் : வெல்கால
வரைபடம் இலக்கம் : க.சி. 321379
காணி துண்டு : 01, 03

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT, WE HAVE IT
Sunday Observer adz Auto Focus



THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adz



- Auto Focus
adz Magazine Issued with Sunday Observer
Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail adzsuo@gmail.com

# காலிங்கவுக்கு வெள்ளி பதக்கம்

ஜப்பானின் டோக்கியோ நகரில் நடைபெறும் செய்கோ கிராண்ட் ப்ரிக்ஸ் தடகளப் போட்டியின் ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப்போட்டியில் இலங்கையின் காலிங்க குமாரகே வெள்ளிப் பதக்கத்தை வென்றார். எனினும் அவருக்கு ஒலிம்பிக் தகுதிக்கான திறமையை வெளிப்படுத்த முடியாமல்போனது.

நேற்று (19) நடைபெற்ற இந்த ஓட்டப் போட்டியில் குமாரகே 45.57 விநாடிகளில் போட்டித் தூரத்தை முடித்து இரண்டாவது இடத்தை பிடித்தார். இதில் போட்டித் தூரத்தை 45.21 விநாடிகளில் பூர்த்தி செய்த ஜப்பானின் கன்டாரோ சாட்டோ முதலிடத்தையும் மற்றொரு ஜப்பான் வீரரான கைடோ கவபாடா மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.எனினும் எதிர்வரும் ஜுலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் நடைபெறவுள்ள பாரிஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெறுவதற்கு ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப்போட்டியை 45.00 விநாடிகளுக்குள் பூர்த்தி செய்ய வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக கடந்த வாரம் ஜப்பானில் நடந்த தடகளப் போட்டியில் 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் குமாரகே தங்கப் பதக்கம் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.






# யுபுனுக்கு 4ஆம் இடம்

இத்தாலியில் நடைபெற்ற ரோமா ஓட்டப்போட்டியில் தெற்காசியாவின் அதிவேக வீரர் யுபுன் அபேகோன் 100 மீற்றர் ஓட்டத்தை 10.21 விநாடிகளில் முடித்து நான்காவது இடத்தையே பெற்றுக்கொண்டார்.

இதன்மூலம் அவர் இந்த ஆண்டு நடைபெறும் பாரிஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெறுவதற்காக 10.00 விநாடி என்ற தகுதி அளவு கோலை எட்டுவதற்கு தவறியுள்ளார்.

ஐரோப்பிய போட்டியில் அவர் இந்த தகுதி இலக்கை எட்டத் தவறியபோதும் அவருக்கு ஒலிம்பிக் தகுதி பெற தொடர்ந்தும் வாய்ப்பு இருப்பதாக நம்பப்படுகிறது. இதில் நேற்று முன்தினம் (18) நடந்த போட்டியில் ஒலிம்பிக் சம்பியனான மாசர் ஜகப் போட்டித் தூரத்தை 10.07 விநாடிகளில் முடித்து முதலிடத்தை பிடித்ததோடு அலி சிட்டுரு இரண்டாம் இடத்தைப் பிடித்தார்.

யுபுன் போட்டியில் மந்தமான ஆரம்பத்தை பெற்றதாலேயே அவரால் சிறந்த காலத்தை பெற முடியாமல் போயுள்ளது.

'தொடர்ந்தும் முயற்சிப்பேன்... ஒவ்வொரு அடியும் பெறுமதி மிக்கது' என்று போட்டிக்குப் பின்னர் யுபுன் தெரிவித்துள்ளார்.

## உடற்கட்டழகு போட்டியில்

# லேக் ஹவுஸ் உதயாவுக்கு முதலிடம்






48ஆவது தேசிய மாபெரும் விளையாட்டுப் போட்டியின் உடல் கட்டழகுப் பிரிவின் கொழும்பு மாவட்டப் போட்டி கடந்த 18ஆம் திகதி (சனிக்கிழமை) கொலன்னாவ பிரதேச செயலக வளாகத்தில் நடைபெற்றது.

லேக் ஹவுஸ் விளையாட்டுக் கழகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி 70, 75 கிலோ எடைப் பிரிவின் கீழ் போட்டியிட்ட லேக் ஹவுஸ் நிறுவனத்தின் கணக்குப் பிரிவில் பணிபுரியும் எல்.பி.ஐ உதய, முதலாம் இடத்தைப் பெற்றார்.

இலங்கை உடற்கட்டழகு மற்றும் உடற்தகுதி சம்மேளனத்தின் பூரண மேற்பார்வையின் கீழ், விளையாட்டு அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்போட்டி, 55, 60, 65, 70, 75, 80, 85, 90 மற்றும் 90 கிலோவுக்கும் அதிகமான எடைப் பிரிவுகளின் கீழ் நடைபெற்றது. இதில் பல போட்டியாளர்கள் போட்டியிட்டனர். .

## சர்வதேச செய்திகள்



# காசாவில் இஸ்ரேலின் குண்டு மழையில் பெரும் உயிர்ச்சேதம்: மோதலும் தீவிரம்

இஸ்ரேலிய போர் விமானங்கள் மற்றும் டாங்கிகள் காசாவில் குண்டு மழை பொழிந்து வரும் நிலையில் நுஸைரத் அகதி முகாமில் உள்ள வீடு ஒன்றின் மீது நேற்று நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்றில் 31 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்த கொடிய போர் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜக் சுலிவான் இஸ்ரேல் விரைந்துள்ளார்.

காசாவில் அடைக்கலம் பெற்ற மக்கள் நிரம்பி வழியும் தெற்கு நகரான ரபாவை நோக்கி இஸ்ரேலிய துருப்புகள் முன்னேறி வரும் நிலையில் அங்கிருந்து புதிதாக இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை 800,000 ஐ தாண்டி இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிடுகிறது.

ஹமாஸ் அமைப்பின் கடைசி கோட்டை என்று இஸ்ரேல் கூறும் ரபாவில் உக்கிர மோதல் நீடித்து வருவதோடு வடக்கு காசாவிலும் பலஸ்தீன போராளிகள் இஸ்ரேலிய படைக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர். குறிப்பாக வடக்கு மற்றும் மத்திய காசாவை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததாக இஸ்ரேலிய இராணுவம் முன்னதான குறிப்பிட்டிருந்த நிலையில் பதில் தாக்குதல்கள் தீவிரம் அடைந்த சூழலில் இஸ்ரேலிய போர் விமானங்கள் சரமாரி தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

இதில் நுஸைரத் அகதி முகாமில் இருக்கும் குடும்ப வீடு ஒன்றின் மீது நடத்திய வான் தாக்குதலிலேயே 31 பேர் கொல்லப்பட்டு மேலும் 20 பேர் காயமடைந்திருப்பதாக காசா சிவில் பாதுகாப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஹசன் குடும்பத்திற்கு சொந்தமான வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து தொடர்ந்து மீட்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களில் சிறுவர்கள் மற்றும் பெண்களும் இருப்பதாக அது தெரிவித்துள்ளது.

வடக்கு காசாவின் ஜபலியா நகரில் கடும் தாக்குதல்கள் மற்றும் மோதல்கள் நீடிக்கும் நிலையில் அங்கு குழந்தைகள் உட்பட பாதிக்கப்பட்டவர்கள் உறவினர்களின் அழுகைக்கு மத்தியில் கமால் அத்வான் மருத்துவமனைக்கு அழைத்துவரப்பட்டதாக ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் தெரிவித்தது.

ஜபலியா குடியிருப்பாளர் ஒருவரான அபூ நபில் கூறும்போது, 'டாங்கிகள் மற்றும் புல்டோசர்கள் எமது வீடுகளை நோக்கி வந்து எம்மை வலுக்கட்டாயமாக வெளியேற்றியதோடு, அண்டைய வீடுகளில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் நாம் காயமடைந்தோம்.

மனித நேயம் கொண்ட உலகின் சுதந்திரமான மக்கள் அனைவரையும் நான் அழைக்கிறேன்.. இங்கே படுகொலைகள் நிகழ்ந்து வருகின்றன. குழந்தைகள் துண்டு துண்டாக சிதறடிக்கப்படுகிறார்கள். இந்த சிறுவர்கள் மற்றும் பெண்கள் என்ன தவறு செய்தார்கள்?' என்றார்.

ஹமாஸ் அமைப்பு தோற்கடிக்கப்பட்டு பணயக்கைதிகள் விடுவிக்கப்படும் வரை தொடர்ந்து போரிடுவதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறி வருகிறார். இந்நிலையில் இஸ்ரேல் விரைந்திருக்கும் அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் நேற்று நெதன்யாகுவை சந்தித்து பேசியதோடு முன்னதான சவூதி அரேபியா சென்ற அவர் அந்நாட்டு முடிக்குரிய இளவரசர் முஹமது பின் சல்மானை சந்தித்தார்.

பலஸ்தீனர்கள் மற்றும் பிராந்திய சக்திகளின் ஆதரவுடன் காசாவில் போருக்கு பின்னரான திட்டம் ஒன்றை வகுக்க இஸ்ரேலை அமெரிக்கா வலியுறுத்தி வருவதோடு இஸ்ரேல் மற்றும் சவூதி அரேபியா இடையே இராஜதந்திர உறவை ஏற்படுத்தவும் அது முயன்று வருகிறது.

அமெரிக்காவுடன் பாதுகாப்பு உறவை பலப்படுத்தக் கோரும் சவூதி அரேபியா, பலஸ்தீன நாடு ஒன்றை உருவாக்க இஸ்ரேலின் இணக்கத்தையும் கோருகிறது.

எட்டு மாதங்களாக நீடிக்கும் காசா போருக்கு மத்தியில் அங்கு இஸ்ரேல் முழு முற்றுகையை செயற்படுத்தி வருவதோடு இதனால் சுத்தமான நீர், உணவு, மருந்து மற்றும் எரிபொருளுக்கு தட்டுப்பாடு நிலவி வருகிறது. அங்கு மட்டுப்படுத்தப்பட்ட உதவிகளே அனுமதிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் காசாவுக்காக மனிதாபிமான உதவிகள் செல்லும் பிரதான வாயிலாக உள்ள எகிப்துடனான ரபா எல்லையை இஸ்ரேல் ஒரு வாரத்துக்கு முன்னர் கைப்பற்றிய நிலையில் அந்த எல்லைக் கடவையும் மூடப்பட்டுள்ளது.

காசா கடற்கரையில் அமெரிக்கா கட்டிய தற்காலிக துறைமுகத்தின் வழியாகவும் உதவிகள் காசாவுக்குள் செல்ல ஆரம்பித்தபோதும் தரைவழியாக விநியோகிக்கப்படும் உதவிகளே அங்கு துன்பத்தை தணிக்க சிறந்த வழி என ஐ.நா. நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இந்த மாத ஆரம்பத்தில் இஸ்ரேல் ரபாவில் படை நடவடிக்கையை ஆரம்பித்தது தொடக்கம் காசாவுக்கு மருத்துவ உதவிகள் செல்லவில்லை என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 35,500ஐ நெருங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# இஸ்ரேல் அரசுக்குள் வலுக்கும் பிளவு: பதவி விலக எச்சரிக்கை

## ஜூன் 8ஆம் திகதி வரையில் கெடு



காசாவில் போருக்குப் பின்னரான திட்டத்தை எதிர்வரும் ஜூன் 8ஆம் திகதிக்குள் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு சமர்ப்பிக்கத் தவறினால் அரசில் இருந்து விலகுவதாக இஸ்ரேலிய போர்க் கால அமைச்சரவை உறுப்பினரான பென்னி கான்ட்ஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை (18) செய்தியாளர் சந்திப்பில் பேசிய கான்ட்ஸ், போர் முடிந்த பின்னர் காசாவின் நிர்வாகம் தொடர்பில் ஆறு புள்ளி திட்டம் ஒன்றுக்கு அமைச்சரவை இணங்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் காசா போரை மேற்பார்வையிட கடந்த ஆண்டு அமைக்கப்பட்ட அவசர ஐக்கிய அரசில் இருந்த தமது மையவாத கட்சி விலகிக்கொள்ளும் என்று முன்னாள் பாதுகாப்பு அமைச்சரான கான்ட்ஸ் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலில் நெதன்யாகுவின் பிரதான போட்டியாளராகவே கான்ட்ஸ் பார்க்கப்படுகிறார்.

போர்க்கால அமைச்சரவையில் இணைவதற்கு முன்னர் அவர் முன்னணி எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்து வந்தார்.

அவரது இந்த நிபந்தனை இஸ்ரேலிய அரசில் பெரும் பிளவை ஏற்படுத்தி இருப்பதோடு நெதன்யாகுவின் காசா கொள்கைக்கு எதிராக உள்நாடு மற்றும் வெளிநாட்டில் அழுத்தத்தை அதிகரிப்பதாக உள்ளது.

காசாவில் உள்ள பணயக்கைதிகளை விடுவிப்பது, அந்தப் பகுதியை இராணுவமயமற்ற பகுதியாக மற்றுவது மற்றும் அங்கு சிவில் விவகாரங்களை மேற்பார்வையிடுவதற்கு அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், அரபு மற்றும் பலஸ்தீன தரப்புகளுடன் சர்வதேச கூட்டணி ஒன்றை அமைக்கும் திட்டம் ஒன்றுக்கே கான்ட்ஸ் அழைப்பு விடுத்து வருகிறார்.

இதில் போருக்குப் பின்னர் காசாவில் ஹமாஸோ அல்லது பலஸ்தீன அதிகாரசபையின் ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸோ ஆட்சி நடத்தக் கூடாது என்ற நெதன்யாகுவின் நிலைப்பாட்டையே கான்ட்ஸும் எதிரொலிக்கிறார்.

இதில் காசாவை இராணுவமயமற்ற பகுதியாக மாற்றுவதற்கு ஹமாஸ் ஆயுதப் பிரிவை முற்றாக ஒழிக்க வேண்டும் என்றபோதும் கடந்த 225 நாட்கள் நீடிக்கும் போரில் இஸ்ரேலால் அதனைச் செய்ய தவறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில் கான்ட்ஸ் பிரதமர் நெதன்யாகு மற்றும் அவரது தீவிர வலதுசாரி கூட்டணி மீது மறைமுகமான எதிர்ப்பையும் வெளியிட்டுள்ளார். 'நீங்கள் மதவெறியர்களின் பாதையைத் தேர்ந்தெடுத்து ஒட்டுமொத்த தேசத்தையும் பாதாளத்திற்கு இட்டுச் சென்றால், நாங்கள் அரசாங்கத்தை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்படும்' என்று எச்சரித்துள்ளார்.

அரசுக்கு எதிர்ப்புகள் வலுத்து வரும் அதேநேரம் நெதன்யாகு அரசுக்கு எதிராக இஸ்ரேலியர்களும் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர்.

டெல் அவிவில் கடந்த சனிக்கிழமை கூடிய ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் போரை கையாள்வது மற்றும் பணயக்கைதிகளை திரும்ப அழைத்துவர தவறிய நெதன்யாகுவை பதவி விலக அழைப்பு விடுத்தனர்.

# ஏவுகணை பாகங்களால் கூடாரம்

காசாவில் இடம்பெயர்ந்த மக்கள் அங்குள்ள இஸ்ரேலிய தாக்குதல்களால் குவிந்து கிடக்கும் ஏவுகணை பாகங்களை பயன்படுத்தி கூடாரங்களை அமைந்து வருகின்றனர்.

ராபாவில் இஸ்ரேலியப் படை முன்னேறி வரும் நிலையில் அங்கிருந்து மக்கள் வெளியேறி வருவதோடு வடக்கு காசாவில் ஜபலியா நகரில் இருந்தும் பலஸ்தீனர்கள் மீண்டும் ஒருமுறை வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

இதில் தெற்கு காசாவின் மிகப் பெரிய நகரான கான் யூனிஸில் முன்னதாக படை நடவடிக்கையை மேற்கொண்ட இஸ்ரேலிய படை அங்கு பெரும் அழிவுகளை செய்திருக்கும் நிலையில் அங்கு தமது சொந்த ஊருக்கு திரும்பிய மக்கள் தங்குவதற்கு கூடாரங்களை அமைத்து வருகின்றனர்.

ஏற்கனவே காசாவில் கட்டுமானப் பொருட்களுக்கு தட்டுப்பாடு இருக்கும் நிலையில் இடிபாடுகளுக்கு மத்தியில் அங்கு இருக்கும் இஸ்ரேலிய ஏவுகணை பாகங்களை மக்கள் கூடாரம் கட்ட பயன்படுத்தி வருகின்றனர்.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மே மாதம் 20ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# விலைமனுகோரல்

## மாவட்ட செயலகம் – புத்தளம்

புத்தளம் மாவட்ட செயலகத்தினால் பின்வரும் வழங்கல்கள் தொடர்பாக திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல | விலைமனு இல | செயற்றிட்டத்தின் பெயர் | மீள்செலுத்தப்படாத விலைமனு வைப்புத் தொகை (ரூபா) | விலைமனு பிணைப் பணம் (ரூபா) மற்றும் செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|
| 01 | PU/PR/ PUR/24/28 | உரிமை நிகழ்ச்சித்திட்டத்திற்காக 16 மேசைக் கணினிகள் கொள்வனவு செய்தல். 16 யுபிஎஸ்கள் கொள்வனவு செய்தல். | ரூபா.1,000.00 | ரூபா.50,000.00 2024.07.22 வரை |
| 02 | PU/PR/ PUR/24/29 | உரிமை நிகழ்ச்சித்திட்டத்திற்காக 16 ஸ்கேனர் இயந்திரத்தினை கொள்வனவு செய்தல். | ரூபா.1,000.00 | ரூபா.50,000.00 2024.07.22 வரை |
| 03 | PU/PR/ PUR/24/38 | மாவட்ட செயலகத்திற்காக 17 மேசைக் கணினிகளை கொள்வனவு செய்தல். | ரூபா.1,000.00 | ரூபா.50,000.00 2024.07.22 வரை |

02. மேற்கூறப்பட்ட விலை மனு ஆவணங்கள் 2024.05.20 ஆந் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 2024.06.19 ஆந் திகதி புதன்கிழமை வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை மேற்குறிப்பிட்ட கட்டணத்தை புத்தளம் மாவட்ட செயலக வளாகத்தில் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கிளையில் அல்லது புத்தளம் இலங்கை வங்கிக் கிளையில் செலுத்தியபின்னர் மாவட்ட செயலகக் கொள்வனவு அலகில் பெற்றுக்கொள்ளலாம்.

03. விலை மனுவினை விலை மனு வழிகாட்டற் கோவையில் குறிப்பிட்டுள்ளவாறு "மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி" என தொகுதி இரண்டாக பூர்த்தி செய்து முத்திரையிடப்பட்ட கடித உறைகளில் வெவ்வேறாக இட்டு அவற்றின் இடப் பக்கமேல் மூலையில் உரிய விலை மனு இலக்கம் மற்றும் வேலை விடயத்தினை குறிப்பிட்டு 2024.06.20 ஆம் திகதியான வியாழக்கிழமை பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு மாவட்ட செயலாளர்/ தவிசாளர், திணைக்கள கொள்வனவு சபை, மாவட்ட செயலகம் புத்தளம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புமாறு அல்லது மாவட்ட செயலக கொள்வனவு அலகில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியினுள் இடுமாறோ வேண்டப்படுகின்றனர். பி.ப.2.00 மணி நிறைவடைந்ததும் விலை மனுப்பத்திரம் மாவட்ட செயலகக் கொள்வனவு அலகினால் திறக்கப்படும்.

04. விலைமனுதாரர் ஒருவருக்கு ஒரு விலை மனுவினையே சமர்ப்பிக்க முடியும். ஒன்றுக்கு மேல் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் அனைத்து விலைமனுக்களும் நிராகரிக்கப்படும்.

05. விலைமனுவிற்கு முன்னரான கூட்டம் 2024.06.03 ஆந் திகதியான திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடாத்தப்படும்.

06. விலைமனு திறக்கப்படும்போது விலைமனுதாரர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்வதற்கு அனுமதியுண்டு.

07. மேற்குறிப்பிட்ட அனைத்து உபகரணங்களும் மாவட்ட செயலகத்திற்கு இலவசமாக கொண்டு வந்து தருதல் அவசியம்.

08. மேலதிக விபரங்களுக்கு மாவட்ட செயலகத்தின் 032-2265335 என்ற தொலைபேசி வழியினூடாக பெற்றுக் கொள்ளலாம்.

**2024.05.20**

**எச்.எம்.எஸ்.பி.ஹேரத்**
**மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர்**
**தவிசாளர் - திணைக்கள கொள்வனவு சபை**
**மாவட்ட செயலகம், புத்தளம்**

MILCO Since 1956

**முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களுக்கான அழைப்பு**
**பாதுகாப்பு சேவைகளை வழங்குதல் - 2024ஆம் வருடம்**

# மில்கோ (பிரைவட்) லிமிட்டெட்

**(அரசுரிமை தொழில் முயற்சி)**

இலங்கையில் ''ஹைலண்ட்'' என்ற வர்த்தக நாமத்தின் கீழ் பாற்பண்ணை உற்பத்திகளை தயாரிக்கும் முதன்மையான பால் பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல் நிறுவனமே மில்கோ (பிரைவட்) லிமிட்டெட் ஆகும். 2024ஆம் வருடத்தில் மில்கோ (பிரைவட்) லிமிடெட்டிற்கு பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்காக ஆர்வமுள்ள தரப்பினரிடமிருந்து மில்கோ (பிறைவட்) லிமிட்டெடின் கேள்விக் குழுத் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.

- கேள்வி இலக்கம் : M/PUR/TEN/2024/02
- மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணம் : ரூபா 5000.00
- கேள்விகள் முடிவுறுத்தப்படும் மற்றும் திறக்கப்படும் திகதி : 2024-06-12ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு

மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தை பின்வரும் வங்கி விபரங்களின் பிரகாரம் மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலும் ரொக்கப் பணமாக வைப்புச் செய்தல் வேண்டும்.

| | |
|---|---|
| வங்கிக் கணக்கின் பெயர் | : மில்கோ (பிரைவட்) லிமிட்டட் |
| கணக்கிலக்கம் | : 004100180210331 |
| வங்கி மற்றும் கிளை | : மக்கள் வங்கி கோப்பரேட் வங்கிப் பிரிவு |
| காரணம் | : மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் |

**அமைவிடங்கள்:**

❖ கொள்ளுப்பிட்டி - மில்கோ தலைமை அலுவலகம்
❖ கொழும்பு / திகன / அம்பேவல / பொலன்னறுவை / படல்கம பாலுற்பத்தித் தொழிற்சாலைகள்
❖ காலி / இரத்தினபுரி / அநுராதபுரம் / பதுளை / குருநாகல் / சம்மாந்துறை / அம்பலாந்தோட்டை / யாழ்ப்பாணம் விற்பனை நிலையங்கள்
❖ பொல்கஹவளை மாட்டுத் தீவண பொறித்தொகுதி

**பொது நிபந்தனைகள்**

1) முழு விபரங்களுடன் கூடிய முழுமையான கேள்விப்பத்திர ஆவணங்களை மில்கோ (பிரைவட்) லிமிட்டெட்டின் கொள்வனவுப் பிரிவான ஐந்தாம் மாடி, இல. 345, காலி வீதி, கொழும்பு-3, என்ற முகவரியில் 2024-05-22 ஆம் திகதி முதல் 2024-06-11ஆம் திகதி வரையில் (வாரத்தின் வேலை நாட்களில்) மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 மணி வரையில் கொழும்பு-03, இல. 345, காலி வீதி, 5ஆம் மாடி. மில்கோ (பிறைவட்) லிமிட்டட்டிற்கு எனும் முகவரிக்கு வங்கி வைப்பு பற்றுச்சீட்டு மற்றும் எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கொள்வனவு செய்யலாம். (004100180210331 கணக்கிலக்கத்திற்கான வங்கி வைப்பு பற்றுச்சீட்டின் மூலப்பிரதி மற்றும் வேண்டுகோள் கடிதம் இன்றி கேள்வி ஆவணங்கள் வழங்கப்பட மாட்டாது)
2) விலைமனுக்களுடன் ஆறு இலட்சம் (ரூபா 600,000.00) ரூபாவிற்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற கோரிக்கை வங்கி உத்தரவாதமாகவிருத்தல் வேண்டும்.
3) முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''மில்கோ (பிரைவட்) லிமிட்டெட்டிற்கு பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்கான கேள்வி - கேள்வி இலக்கம், முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம்'' என்பவற்றைக் குறிப்பிட்டு 2024-06-12ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் மில்கோ (பிரைவட்) லிமிட்டெட், 5ஆம் மாடி, இல. 345, காலி வீதி, கொழும்பு-03 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இதே முகவரியில் கொள்வனவுப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
4) முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் மில்கோ (பிரைவட்) லிமிட்டெட்டின் கொள்வனவுப் பிரிவில் 2024-06-12ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் விலைமனுக்களைத் திறக்கும் நேரத்தில் அங்கு சமுகமளித்திருக்கலாம்.
5) கேள்வி ஆவணங்களை கொள்வனவுப் பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6) எக்காரணமும் காட்டாமல் எந்தவொரு கேள்வியையும் அல்லது சகல கேள்விகளையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை கேள்விக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
7) மில்கோ நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய உறவினர்கள் இந்த கேள்வியில் பங்குபற்ற முடியாது.

இந்த கேள்வி கோரல் பற்றிய மேலதிக தகவல், விபரம் அல்லது விளக்கம், தேவைப்படின் மில்கோ (பிரைவட்) லிமிட்டெட்டின் கொள்வனவு முகாமையாளரிடமிருந்து 011-4500530-4 எனும் தொலைபேசி இலக்கத்தில் அல்லது 011-4500560 எனும் தொலைபேசி இலக்கத்தில் மனித வளம் மற்றும் நிர்வாக முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர் - கேள்விக் குழு**
**மில்கோ (பிரைவட்) லிமிட்டெட்**
**இல. 345, 5ஆம் மாடி, காலி வீதி, கொழும்பு-03.**

**For classified advertisements and for replies**

**received in response to advertisements published under Lake House box numbers**

**+94 112429342**
**+94 112429343**

**Best way to fulfil your Future Dreams**

**Marriage Proposals**

**in the**

**Sunday Observer**

அரச பெருந்தோட்ட தொழில்முயற்சி மறுசீரமைப்பு அமைச்சு

## மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை

**பச்சை இலை மற்றும் இறப்பர் பால் விற்பனைக்கான கேள்விமனு**

➢ **பின்வரும் தோட்டங்களில் இருந்து மூன்று மாத காலத்திற்காக (2024 ஜுலை தொடக்கம் 2024 செப்டெம்பர் வரை) பச்சை இலை விற்பனைக்கு முத்திரை பொறிக்கப்பட்ட கூறுவிலைகள் கோரப்படுகின்றன. (அரச கட்டணங்கள் மற்றும் வரிகள் பொருந்தும்)**

| தோட்டங்கள் | மதிப்பிடப்பட்ட பயிர் (கி.கி.) ஜுலை 2024 | மதிப்பிடப்பட்ட பயிர் (கி.கி.) ஓகஸ்ட் 2024 | மதிப்பிடப்பட்ட பயிர் (கி.கி.) செப்டெம்பர் 2024 | கேள்விமனு ஆவணக் கட்டணம் (மீளளிக்கப்படாதது) ரூபா சதம் | மீளளிக்கப்படும் வைப்பு ரூபா சதம் |
|---|---|---|---|---|---|
| கிரேட்வெல்லி போப்பிட்டிய | 17,870 | 17,780 | 24,660 | 5,000/- | 100,000/- |
| போவ்ஹில் | 20,200 | 17,300 | 23,100 | | |
| தெல்தொட்ட | 25,800 | 26,600 | 24,500 | | |
| கல்லேபொட | 27,200 | 20,400 | 20,400 | | |
| ஹன்தானே | 44,100 | 42,200 | 40,000 | | |
| கந்தலோய | 19,500 | 18,200 | 16,000 | | |
| கொலபத்தன | 40,400 | 34,100 | 29,900 | | |
| மஹவில்ல | 23,700 | 20,500 | 19,900 | | |
| மௌன்ட் ஜீன் | 20,590 | 14,560 | 16,570 | | |
| நாகஸ்தென்ன | 21,100 | 24,000 | 30,000 | | |
| ரஹதுன்கொட | 40,700 | 40,700 | 36,300 | | |
| ரூக்வூட் | 40,000 | 35,000 | 47,000 | | |

அனைத்து கேள்விமனு ஆவணங்களையும் 2024 ஜுன் 10 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் தலைவர் - கேள்விக் குழு, மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை, 55/75, வொக்ஷோல் ஒழுங்கை, கொழும்பு - 02 என்ற முகவரிக்கு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பச்சை இலை விற்பனை" என்று குறிப்பிட்டு முத்திரை பொறிக்கப்பட்ட உறையில் பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது இந்த நோக்கத்திற்கு வைக்கப்பட்டுள்ள விலைகேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும்.

பின்வரும் தோட்டங்களில் இருந்து மூன்று மாத காலத்திற்காக (2024 ஜுலை தொடக்கம் 2024 செப்டெம்பர் வரை) இறப்பர் பால் விற்பனைக்கு முத்திரை பொறிக்கப்பட்ட கூறுவிலைகள் கோரப்படுகின்றன. (அரச கட்டணங்கள் மற்றும் வரிகள் பொருந்தும்)

| தோட்டங்கள் | மதிப்பிடப்பட்ட பயிர் (கி.கி.) ஜுலை 2024 | மதிப்பிடப்பட்ட பயிர் (கி.கி.) ஓகஸ்ட் 2024 | மதிப்பிடப்பட்ட பயிர் (கி.கி.) செப்டெம்பர் 2024 | கேள்விமனு ஆவணக் கட்டணம் (மீளளிக்கப்படாதது) ரூபா சதம் | மீளளிக்கப்படும் வைப்பு ரூபா சதம் |
|---|---|---|---|---|---|
| குமாரவத்த | 38,309 | 31,158 | 28,899 | 5,000/- | 100,000/- |
| தியலும | 4,250 | 4,450 | 3,300 | | |

அனைத்து கேள்விமனு ஆவணங்களையும் 2024 ஜுன் 10 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் தலைவர் - கேள்விக் குழு, மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை, 55/75, வொக்ஷோல் ஒழுங்கை, கொழும்பு - 02 என்ற முகவரிக்கு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இறப்பர் பால் விற்பனை" என்று குறிப்பிட்டு முத்திரை பொறிக்கப்பட்ட உறையில் பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது இந்த நோக்கத்திற்கு வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும்.

கூறுவிலையை சமர்ப்பிப்பதற்கான விலைமனு படிவங்கள் உட்பட நிபந்தனைகளுடனான கேள்விமனு ஆவணங்களை எந்த ஒரு வேலை நாட்களிலும் 5,000 ரூபா (ஐயாயிரம்) ஆவணக் கட்டணத்தை செலுத்தி 2024 ஜுன் 09 ஆம் திகதி வரை கொழும்பு - 02, வொக்ஷோல் ஒழுங்கை, 55/75, மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையில் இருந்து பெற முடியும்.

ரூபா 100,000 விலைமனு பிணையை ஹைட் பாக், இலங்கை வங்கியில் 2327555 என்ற எமது வங்கிக் கணக்கிற்கு வைப்புச் செய்வதன் மூலம் அல்லது ரொக்கப் பணத்தில் JEDB தலைமை அலுவலக காசாளருக்கு செலுத்த முடியும் என்பதோடு கட்டணத்தை வைப்புச் செய்த ரசீதை கேள்விமனு ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்.

கேள்விமனுக்கள் அவை ஏற்கும் நேரம் முடிவுற்ற உடன் கேள்விமனு திறக்கும் குழுவின் முன்னிலையில் 2024 ஜுன் 10 ஆம் திகதி பி.ப. 2.00க்கு JEDB தலைமை அலுவலகத்தில் திறக்கப்படும் என்பதோடு வாங்குபவர் அல்லது அவரது பிரதிநிதிக்கு இந்த சந்தர்ப்பத்திற்கு பங்கேற்க முடியும். கூறுவிலையில் ஏற்படும் தாமதம் தொடர்பில் JEDB எந்த பொறுப்பையும் ஏற்காது என்பதோடு கேள்விமனுவை ரத்துச் செய்யும் உரிமை பெறுகைக் குழு, தலைவருக்கு உள்ளது. (ஏதேனும் தகவலை பெற உதவி அத்தியட்சகரை தொடர்பு கொள்ளவும் - 011-4758623)

**தலைவர்**
JEDB

# INVITATION FOR BIDS (IFB)

## DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE

## VALVETTITHURAI URBAN COUNCIL

## LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a **grant** from the **European Union** towards the cost of **Local Development Support Project** and intends to apply part of the proceeds of this **grant** to payments under the Contract for work as described below.
2. The **Chairman, Provincial Project Procurement Committee (PPPC)** on behalf of the **Valvettithurai Urban Council** now invites sealed bids from eligible and qualified bidders for the work as described below.

| No. | Contract No. | Contract Name | Employer's Estimated Cost (Rs. Mn.) | CIDA Grade & Specialty | Contract Period (Days) | Bid Security Amount (Rs.) | Bid Validity Period | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | **LDSP/NP/ JAF/ VVTUC/ 2024/ PT3/01** | Construction of Shopping Units at Revady, Valvettithurai | 30.52 | C5 or above Building Construc-tion | 91 | 460,000.00 | 6-Oct-2024 | 6-Nov-2024 |

3. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** procedure.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty and grade as stated above with the Construction Industry Development Authority (CIDA).
5. Qualification requirements to qualify for contract award are included in Section 5 (Bidding Data and Contract Data) in the Bidding Document.
6. Interested bidders may obtain further information from **Secretary, Valvettithurai Urban Council, Kankesanthurai Road, Valvettithurai, (T.P No: 0212263973, Fax No: 0212265166) and inspect the bidding documents at Valvettithurai Urban Council, Kankesanthurai Road, Valvettithurai, from 20-May-2024 until 9-Jun-2024 between 09:00 Hrs and 15:00 Hrs** on normal working days.
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the **Secretary, Valvettithurai Urban Council, Kankesanthurai Road, Valvettithurai from 20-May-2024 until 9-Jun-2024 between 09:00 Hrs and 15:00 Hrs** on normal working days upon payment of a non-refundable fee of **Rs.8,500.00.** The method of payment will be **by cash.**
8. Bids shall be delivered in duplicate to the **Chairman, Provincial Project Procurement Committee (PPPC), Local Development Support Project (LDSP), Department of Local Government (NP), Elders' Home Complex, Kaithady** at or before **14.00 Hrs on 10-Jun-2024.** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
9. All bids shall be accompanied by a **Bid Security** as stated in the table above.

**Chairman,**
**Provincial Project Procurement Committee (PPPC),**
**Local Development Support Project (LDSP),**
**Department of Local Government (NP),**
**Elders' Home Complex,**
**Kaithady.**

20-May-2024

**The Housewives' companion**
**Classifieds on**
**Daily News**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்கோரல்

### வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்காக சேவை வழங்கல்

01. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) நிட்டம்புவ நிறைவேற்று பொறியியலாளர் பிரிவின் கொள்முதல் குழுத் தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் நிட்டம்புவ நிறைவேற்று பொறியியலாளர் பிரிவில் வீதி பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக **பெக்கோ லோடர் இயந்திரமொன்றினை 07 மாத காலத்திற்கு வாடகை அடிப்படையில்** கொள்வனவு செய்வதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

    ஒப்பந்த இலக்கம் - **RDA/EE/NIT/TEN/2024/07**

02. மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள பின்வரும் இணையதளங்களை பார்வையிடவும்.

    **போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - www.mohsl.gov.lk**

    **வீதி அபிவிருத்தி அதிகார சபை - www.rda.gov.lk**

**தலைவர்,**
**கொள்முதல் குழு, தலைமை பொறியியலாளர் அலுவலகம்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**நிட்டம்புவ.**

SELACINE

OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www. observerjobs. lk

# பெறுகை அறிவித்தல்

## மாவட்டப் பொது வைத்தியசாலை

நுவரெலியா, மாவட்ட பொது வைத்தியசாலையின் பின்வரும் வேலைகளுக்காக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரலின் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | விலைக்கோரல் இல. | வேலை விடயம் | தகைமை | மீளளிக்கப் படாத விலைமனுக் கட்டணம் | மீளளிக்கப்படும் விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி | ஒதுக்கப் பட்டுள்ள மானியம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | DGH/NE/AV/11/01/AC System/2024-2025 | Preventive & Corrective Maintenance & Services of Air Conditioning System 2024/2025 | | ரூபா 3,000.00 | ரூபா 50,000.00 | |
| 2 | DGH/NE/AL/03/20/2023 | Development Water Supply in Ward No. 10 | C9, C8 and C7 | ரூபா 3,000.00 | ரூபா 22,000.00 | 2.2 மில்லியன் ரூபா |

- 2024-05-20ஆம் திகதி முதல் 2024-06-10ஆம் திகதி வரையிலான சகல வேலை நாட்களிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 வரையான காலத்தினுள் நுவரெலியா, மாவட்ட பொது வைத்தியசாலை வழங்கல் பிரிவிற்கு வந்து, இயைபுடைய வேண்டுகோள் கடிதம், வியாபாரப் பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்து விலைக்கோரல் மாதிரிப் படிவக் கட்டணத்தை வைத்தியசாலை கணக்கிடல் பிரிவிற்கு செலுத்தியதன் பின் விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
- முத்திரைக் குறி பொறிக்கப்பட்டு மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறான கடித உறைகளில் இட்டு பின் மீண்டும் அவ்வுறைகளை வேறொரு உறையில் இட்டு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது வைத்தியசாலையின் கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகை விலைமனுப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம். பெறுகை விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பின்வரும் வகையில் பெறுகை இலக்கம் மற்றும் இயைபுடைய பெறுகையின் பெயரை மிகவும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
- விலைக்கோரல் ஆவணங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் 2024-06-11ஆம் திகதி மு.ப. 11.00 மணியாகும். 2024-06-11ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவரின் பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம். நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
- சகல விலைமனுக்களின் பொருட்டும் மேற்கூறப்பட்ட விபரங்களின் பிரகாரம் விலைக்கோரல் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அதை அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட வங்கிப் பிணை முறியாக அல்லது கட்டளையொன்றாகச் சமர்ப்பிக்கலாம்.
- விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-05-29ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் கூட்ட மண்டபத்தில் இடம்பெறும்.
- எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை வைத்தியசாலை பிராந்திய பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**மருத்துவ நிபுணர் W.R.M. மஹேந்திர செனெவிரத்ன,**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பொது வைத்தியசாலை, நுவரெலியா.**

**தொலைபேசி இல. 0522224307-10**
**(Ext. 2271 அல்லது 2272)**

PSFTA இன் கீழ் பாஸ்மதி அரிசி இறக்குமதியாளர்களுக்கான விஷேட அறிவித்தல்

**வர்த்தக திணைக்களம் (DOC)**

வர்த்தக, வாணிப மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

# 2024 ஆம் ஆண்டிற்காக பாகிஸ்தான் – இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் (PSFTA) கீழ் பாஸ்மதி அரிசியை இறக்குமதி செய்தல்

2024 ஆம் ஆண்டிற்கான பாகிஸ்தான்-இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் 6,000 மெ.தொன் பாஸ்மதி அரிசியை இறக்குமதி செய்வதற்காக வர்த்தக திணைக்களத்தினால் வழங்கப்பட்ட இறக்குமதி கட்டண அறவீட்டு நீக்க பரிந்துரைகள் 2024 மே 20 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் ஆரம்பமாகும்.

பதிவு செய்தலுக்கான இறுதித் திகதியானது 2024 மே 31 ஆம் திகதியென்பதுடன் அனைத்து பதிவுகளும் 2024 டிசம்பர் 31 ஆம் திகதியன்று வரையும் மாத்திரமே செல்லுபடியாகும் தன்மையிலிருக்கும். பதிவு செய்தலுக்கான நேரங்கள் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையுமாகும்.

தீர்வையற்ற பரிந்துரைகள் பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் **PK385 variety of Basmati Rice/Super Kernel Basmati/Super Basmati Rice/1121 –Kainat Rice/D-98 Basmati Rice** ஆகியவற்றிற்கு மாத்திரமே ஏற்புடையதாகும்.

பங்கீட்டு விண்ணப்பங்கள் கொழும்பு-03, ஆர்.ஏ.டி மெல் மாவத்தை, 492 ஆம் இலக்கத்திலுள்ள எல்.ஏச்.பி. கட்டிடம் 1 ஆம் மாடியிலமைந்துள்ள வர்த்தக திணைக்களத்தில் ஒப்படைக்கப்படலாம்.

**புதிய பதிவு செய்தலுக்காக தேவைப்படும் ஆவணங்கள்.**

அ) உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் - www.doc.lk என்பதிலிருந்தும் விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்யலாம்.

ஆ) கம்பனி பதிவின் மூலப்பிரதி மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று.*

இ) TIN சான்றிதழின் மூலப்பிரதி மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று.*

ஈ) வர்த்தக திணைக்களத்தினால் தேவைப்படுத்தப்படும் வேறேதாவது ஆவணங்கள்/ தகவல்.

இலங்கைப் பணத்திலமைந்ததும் மீளளிக்கப்படாததும் ஒவ்வொரு பதிவிற்கானதுமான இலங்கைப் பணத்திலமைந்த 10,000 ரூபாவானது அறவிடப்படும். பணக்கொடுப்பனவானது பின்வரும் வங்கி கணக்கிற்கு வரவு வைக்கப்படல் வேண்டும்/ பணக்கொடுப்பனவுத் துண்டின் விபரத்தில் "Basmati-PSFTA/2024" என குறிப்பிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

| | |
|---|---|
| கணக்கிலக்கம்: | 014100129027293 |
| கணக்கு வைத்திருப்பவர்: | வர்த்தக பணிப்பாளர் நாயகம் |
| வங்கிக் கிளை மற்றும் பெயர்: | யூனியன் பிளேஸ், மக்கள் வங்கி |

பங்கீட்டு ஒதுக்கீட்டின் உறுதிப்படுத்தலின் பின்னர், பதிவு செய்யப்பட்ட இறக்குமதியாளர்கள் PSFTA இன் கீழ் பாஸ்மதி அரிசியை இறக்குமதி செய்யலாமென்பதுடன் பின்வரும் ஆவணங்களை சமர்ப்பிப்பதன் மூலம், வர்த்தக திணைக்களத்திலிருந்து தீர்வு விலக்கழிப்பு சான்றிதழுக்கு விண்ணப்பிக்கலாம்.

அ. வர்த்தக திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பதிவு செய்தல் கடிதத்தின் மூலப்பிரதி.

ஆ. பதிவு செய்தல் கட்டணக் கொடுப்பனவு பற்றுச்சீட்டு (வங்கி பணவரவுத் துண்டு)

இ. பாகிஸ்தான் வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி அதிகாரிகளினால் (TDAP) வழங்கப்பட்ட சான்றிதழின் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி.

ஈ. பாகிஸ்தான் தாவர பாதுகாப்பிற்கான தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி அமைச்சினால் வழங்கப்பட்ட Phytosanitary சான்றிதழ்.

உ. பாகிஸ்தான் தாவர பாதுகாப்பிற்கான தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு நிறுவகத்தினாலும் வழங்கப்பட்ட புகைத்தலுக்கான சான்றிதழ்.

ஊ. பாஸ்மதியின் திடநுட்பமான இனத்தை உறுதி செய்யும் SGS Pakistan (Pvt) Ltd இனால் வழங்கப்பட்ட மூன்றாம் சாரார் தர சான்றிதழ்.

எ. பாஸ்மதியின் திடநுட்பமான இனத்தை உறுதி செய்யும் பாகிஸ்தான் M/s Trading Co-operation இனால் வழங்கப்பட்ட தர சான்றிதழ்.

ஏ. ஏற்று பொருட் பட்டியல், வர்த்தகம்சார் விலைப்பட்டியல், பொதி செய்யும் பட்டியலின் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியொன்று.

* சரிபார்த்தலின் பின்னர் மூலப்பிரதி ஆவணங்கள் விண்ணப்பதாரிக்கு திருப்பப்படும்.

இறக்குமதி செய்யப்படும் ஒவ்வொரு தொகுதி அரிசியும் இலங்கை சுங்கத்தினால் தரம் மற்றும் சுகாதார நியமங்கள் போன்றவற்றை சரிபார்த்தலுக்கு உட்பட்டதாக அமைந்திருக்கம்.

எந்தவொரு மேலதிக விபரங்களுக்கும் தயவு செய்து பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும்.

**வர்த்தக பணிப்பாளர் நாயகம்**
**வர்த்தக திணைக்களம், எல்ஏச்பி கட்டிடம்,**
**இல. 492, ஆர்.ஏ. டி மெல் மாவத்தை (டுப்பிளிக்கேசன் வீதி),**
**கொழும்பு-03.**
**தொலைபேசி: 011 232 97 33/011 243 61 14/011 232 71 91/011 232 55 24**
**தொலைநகல்: 011 2430233**
**மின்னஞ்சல்: fortrade@doc.gov.lk**
**இணையம்: www.doc.gov.lk**

திகதி: 20.05.2024

## மாவட்ட செயலாளர் அலுவலகம் - மொனராகலை

# பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்ட வாகனங்களின் விற்பனைக்கு விலைமனுக்களுக்கான அழைப்பு

மொனராகலை மாவட்ட செயலாளர் அலுவலகத்திற்கு சொந்தமான, பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்ட கீழ் குறிப்பிடப்பட்ட வாகனங்களை விற்பதற்கு விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**வாகனங்களை பரீட்சிப்பது**

இந்த வாகனங்களை ஒவ்வொரு வாகனங்களினதும் முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலக வளாகத்தில் 2024.05.20ஆம் திகதி தொடக்கம் 2024.06.11 ஆம் திகதி வரை வார நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.30 வரையான காலத்தில் பரீட்சிக்க முடியும்.

**விலைமனு விண்ணப்பப் படிவங்களை வழங்கல்**

விலைமனு சமர்ப்பிப்பதற்கான விண்ணப்பப் படிவங்களை மொனராகலை மாவட்ட செயலாளர் அலுவலகத்தின் நிறுவனப் பிரிவில் 2024.05.20 ஆம் திகதி தொடக்கம் 2024.06.11 ஆம் திகதி வரை வார நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.30 வரை பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பப் படிவங்களை பெற்றுக்கொள்ளும்போது மீளளிக்கப்படும் மற்றும் மீளளிக்கப்படாத விலைமனு வைப்புத் தொகை மற்றும் விலைமனு கட்டணத்தை மொனராகலை மாவட்ட செயலாளர் அலுவலகத்தின் சிறாப்பருக்கு செலுத்தி பற்றுச்சீட்டு ஒன்றை பெறுதல் வேண்டும். குறித்த விலைமனுக்கள் பின்வருமாறு அமையும். வாகனம் ஒன்றை ஏலத்தில் இருந்து அகற்றும் முழு உரிமை மாவட்ட செயலாளர் வசமானது.

| வரிசை இலக்கம் | வாகனத்தின் இலக்கம் | வாகனம் | உற்பத்தி ஆண்டு | விலைமனு கட்டண மீளளிக்கப் படாத தொகை (ரூபா) | விலைமனு வைப்பு (மீளளிக்கப் படும் தொகை ரூபா) | வாகனம் நிறுத்தி வைக்கப் பட்டுள்ள இடம் | வேறு |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 43 – 3028 | லொறி பௌசர் | 1992 | 1000.00 | 5000.00 | வெல்லவாய பிரதேச செயலாளர் அலுவலகம் | வாகனமாக ஏலத்தில் விடப்படவுள்ளது. |
| 02 | UP GN 8137 | மோட்டார் லொறி | 2002 | 1000.00 | 5000.00 | மொனராகலை மாவட்ட செயலாளர் அலுவலகம் | |
| 03 | 131 – 3049 | மோட்டார் சைக்கிள் | 1992 | 1000.00 | 1000.00 | மொனராகலை மாவட்ட செயலாளர் அலுவலகம் | பதிவு இரத்துச் செய்யப்பட்ட துண்டுகளாக ஏலத்தில் விடப்படவுள்ளது. |
| 04 | 150 - 6038 | மோட்டார் சைக்கிள் | 1997 | 1000.00 | 1000.00 | மொனராகலை மாவட்ட செயலாளர் அலுவலகம் | |

1. முறையான வகையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2024.06.12 ஆம் திகதி மு.ப. 10.30க்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் "தலைவர், பெறுகைக் குழு, மாவட்ட செயலாளர் அலுவலகம், மொனராகலை" என்ற முகவரிக்கு அனுப்புவது அல்லது கணக்காளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு முடியும்.
2. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலக்கம் ................ கொண்ட வாகனத்திற்கான விலைமனு" என்று குறிப்பிட்டு நிறுவனப் பிரிவில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப் படிவங்களை மாத்திரம் பயன்படுத்தி ஒவ்வொரு வாகனத்திற்காகவும் வெவ்வேறாக விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
3. விலைமனுக்களை திறப்பது 2024.06.12 ஆம் திகதி மு.ப. 10.30 க்கு மொனராகலை மாவட்ட செயலாளர் அலுவலகத்தின் நான்காவது மாடியில் அமைந்துள்ள கேட்போர்கூடத்தில் மேற்கொள்ளப்படுவதோடு அதற்காக விலைமனு விண்ணப்பதாரருக்கு அல்லது அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும். விலைமனுவுடன் தொடர்புபட்ட அனைத்து செயற்பாடுகளின் இறுதி முடிவு திணைக்கள பெறுகைக் குழு வசமானது என்பதோடு திணைக்கள பெறுகைக் குழுவின் முடிவு இறுதி முடிவாகும்.
4. விலைமனுதாரரின் வருகை கட்டாயம் என்பதோடு முன்வைக்கப்படும் விலைமனு விண்ணப்பதாரர் அல்லது அவர் தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதி வருகைதராவிட்டால் அடுத்துள்ள விலைமனுதாரருக்கு விலைமனு வழங்கப்படும்.
5. விலைமனு நிறைவு செய்யப்பட்ட பின் அன்றைய தினத்தில் அதிக கூறுவிலையிடும் விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதி விலைமனு தொகையில் 50% அல்லது முழுத் தொகையையும் மாவட்ட செயலாளர் அலுவலக சிறாப்பருக்கு செலுத்தி பற்றுச்சீட்டு ஒன்றை பெற்று வாகனத்தை ஒதுக்கிக் கொள்ளுதல் வேண்டும். வாகனத்தை ஒதுக்கிக் கொள்வதற்காக செலுத்தப்படும் தொகை மீளளிக்கப்படுவதில்லை என்பதோடு முழு பணத்தையும் செலுத்துகின்ற வாகனம் அன்றைய தினத்திலேயே அலுவலக வளவில் இருந்து அகற்றிக் கொள்ள வேண்டும் என்பதோடு 50% தொகையை செலுத்தி இருந்தால் விலைமனு திறக்கப்பட்ட தினத்தில் இருந்து 14 நாட்களுக்குள் எஞ்சிய தொகையை செலுத்தி வாகனத்தை அகற்றிக்கொள்ள வேண்டும்.

**ஆர்.எம். பசன் எஸ்.பி. ரத்நாயக்க,**
**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாவட்ட செயலாளர் அலுவலகம்,**
**மொனராகலை.**

The Housewives' companion
Classifieds on
Daily News

## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

### குழாய்கள் மற்றும் பொருத்தல்களின் பெறுகைக்காக விலைமனு கோரல்

**B/23/2024**

**திருத்தம் 01**

மேற்படி தலைப்பின் கீழ் இந்தப் பத்திரிகையில் பிரசுரமான விளம்பரத்தின் பிரகாரம் ஏற்கனவே குறித்த விலைமனுக்களை பெற்றுக்கொண்ட வளமுள்ள மற்றும் இந்த விலைக்கோரல் செயற்பாடுகளில் பங்குபற்ற ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கவனத்திற் கொள்ளுமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இத்தால் அழைப்பு விடுக்கப்படுகின்றது.

விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் 2024-05-22ஆம் திகதி பி.ப. 2.00 மணி எனத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அது இப்போது 2024-06.05 திகதி பி.ப. 2.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதுடன் அதன் பின் கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், 1ஆம் தளம், முகாமையாளர் (பெறுகை மற்றும் களங்சியம்) அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.

இதன் பிரகாரம் விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும் (உ-ம் 2024-09-04 வரை) மற்றும் விலைக்கோரல் பிணை முறியானது விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 119 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும் (உ-ம் 2024-10-02 வரை)

மேலும் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் கட்டாயத் தேவைப்பாடு கைவிடப் பட்டுள்ளது.

ஏனைய அனைத்து நிபந்தனைகளும் விலைமனு ஆவணத்தில் உள்ளவாறு மாறாமல் அவ்வாறேயிருக்கும்.

ஏதேனும் சிரமத்திற்கு இபொகூ வருத்தத்தைத் தெரிவிக்கின்றது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09.**
**இலங்கை.**

## சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி பகிரங்க ஏல விற்பனை

சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி மூலம் பெற்றுக்கொண்ட தங்கக் கடனில் ஈடு வைக்கப்பட்ட கால எல்லைக்குள் பணத்தை செலுத்தத் தவறியதால், அந்தத் தங்கக் கடன் வசதிக்காக பத்திரங்களாக அடமானம் வைக்கப்பட்ட தங்கப் பொருட்கள் கீழ் குறிப்பிடப்பட்ட திகதிகளில் மு.ப. 10.00 க்கு பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

திகதி மற்றும் ஏல விற்பனை இடம்

திகதி : **04/06/2024**
இல.343, மாத்தளை வீதி, தம்புள்ளை.
இல.328, ரஜின சந்தி, தம்புத்தேகம.
இல.05, மைத்திறிபால சேனநாயக்க மாவத்தை, அநுராதபுரம்.
இல.80, யாழ்ப்பாணம் வீதி, மதவாச்சி.
இல.28, 30, இரண்டாம் குறுக்குத் தெரு, வவுனியா.
இல.86, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
இல.462/A, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
A 9 வீதி, கரடிபோக்கு சந்திக்கு அருகில், கிளிநொச்சி.
இல.15, அலகு 07, துன்னாலை வீதி, நெல்லியடி.
இல.34, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.
இல.498, ஆர். ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 03.
இல.163C/1/1, கொழும்பு வீதி, நீர்கொழும்பு.
விக்டோரி கட்டிடம், சிலாபம் வீதி, வென்னப்புவ.
இல.179/1/1, ஹெட்டிபொல வீதி, குளியாப்பிட்டி.
இல.65, மாஹவ வீதி, நிக்கவரட்டி
இல.42, மிஹிந்து மாவத்தை, குருணாகல்
இல.140/B, கொழும்பு வீதி, குருணாகல்.
இல.311/J, ரன்வல சந்தி, கேகாலை.
இல.103/C, நீர்கொழும்பு வீதி, கிரியுள்ள.

திகதி : **05/06/2024**
இல.14, மங்கல வீதி, கம்பஹா.
இல.837E, தலங்கம வடக்கு, மாலபே.
இல.579, காலி வீதி, வெள்ளவத்தை.
இல.348, காலி வீதி, பாணந்துறை.
இல.362, கோட்டை வீதி, ராஜகிரிய.
இல.34, ஹொரன வீதி, பிலியந்தல.
இல.188, பிலியந்தல வீதி, மஹரகம.
இல.173, இரத்தினபுரி வீதி, ஹொரன.
இல.16, ஹைலெவல் வீதி, ஹோமாகம.
இல.546, காலி வீதி, தெற்கு களுத்துறை, களுத்துறை.
இல.29, ஸ்டேசன் வீதி, தெஹிவளை.
இல.30A, நாவல வீதி, நுகேகொட.
இல.106/1, துட்டுகெமுனு வீதி, கொஹுவளை.

திகதி : **06/06/2024**
இல.64, மாகொல வீதி, கிரிபத்கொடை.
இல.493, நீர்கொழும்பு வீதி, வத்தளை.
இல.120, நீர்கொழும்பு வீதி, ஜாஎல
இல.143 J, கண்டி வீதி, கடவத்த.
இல.310/2A, ஜோர்ஜ் ஆர். டி சில்வா மாவத்தை, கொழும்பு 13.
இல.49, சைமன்ட்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10.
இல.115/1, புதிய நகர வீதி, எம்பிலிபிட்டிய.
முத்துகுமாரண கட்டிடம், கீழ் வீதி, திஸ்ஸமகாராம.
இல.46/1/1, கொழும்பு வீதி, கலுவெல்ல, காலி.
இல.235, புதிய காலி வீதி, அம்பலாங்கொட.
இல.01, அநகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை.
இல.103, டி.எஸ் சேனநாயக்க மாவத்தை, அம்பாறை.
இல.131, நுவரெலிய வீதி, கம்பளை.
இல.271/1, 1ஆவது மாடி, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி.
இல.186. டி.எஸ். சேனநாயக்க மாவத்தை, கண்டி.
இல.18/2, பதியதலாவ வீதி, மஹியங்கனை.
இல.80, கண்டி வீதி, நுவரெலியா.

எந்த ஒரு முன் அறிவித்தலும் இன்றி ஏல விற்பனையை இரத்துச் செய்வது அல்லது ஒத்திவைக்கும் உரிமை சிங்கர் பினான்ஸ் (லங்கா) நிறுவனத்தின் வசமானதாகும்.

தங்கக் கடன் முகாமையாளர்
**SINGER FINANCE**
இல. 498, ஆர்.ஏ.டி மேல் மாவத்தை, கொழும்பு 03.

Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

## இலங்கை துறைமுக அதிகார சபை

## பதவி வெற்றிடங்கள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதிவிக்கு வேண்டப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### பதவி 1 பொறியியல் அலுவலர் JLM (திருகோணமலை துறைமுகத்திற்கு)

**(அ) தகுதித்திறன்**

உந்து சக்தி (Propultion Power) கிலோ வோட் 2000 (KW) வரையிலான கரையோரக் கலமொன்றில் பொறியியல் அலுவலரொருவராக (Officer in charge of an Engineering Watch) சேவையில் ஈடுபடுவதற்கு இலங்கை வணிக கப்பல் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழ் அல்லது அவுஸ்திரேலியா அல்லது இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட அதற்கு சமனான தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

**அனுபவம்**

உந்து சக்தி (Propultion Power) கிலோ வோட் 3000 (KW) வரையிலான கரையோரக் கலமொன்றில் பொறியியல் அலுவலரொருவராக (Officer in charge of an Engineering Watch) இரண்டு (02) வருட கடற் பயண அனுபவம்.

**(ஆ) சம்பளம்**

சம்பள வகையீடு : (JLM)
ஆரம்பச் சம்பளம் : ரூ. 75,065/-
வருடாந்த சம்பள ஏற்றம் : ரூ. 1,440/-

கொடுப்பனவுகள் அடங்கலாக மாத மொத்தச் சம்பளம் ரூ. 150,500/- அளவினதாக இருக்கும்

**வயதெல்லை:** 45 வயதிற்கு விடக் குறைந்தவராக இருத்தல் வேண்டும் (இவ்வயதெல்லை அரச சேவை அல்லது அரச கூட்டுத்தாபனங்களின் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதல்ல)

இலங்கைத் துறைமுக அதிகாரசபையில் ஏற்கனேவ விதிக்கப்பட்ட அல்லது எதிர் காலத்தில் விதிக்கப்பட கூடிய சகல சட்ட திட்டங்களுக்குமிணங்க நியமனம் பெருபவர்கள் செயற்படுதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் தேவைக்கேற்ப அதிகாரசபையின் எந்தவொரு பகுதி/பிரிவில் அல்லது நாட்டின் எந்தவொரு பகுதியில் சேவை புரிய உட்படுவர்.

விண்ணப்பங்கள் வயது, கல்வி, தொழில் தகைமைகள், அனுபவம் ஆகியவற்றின் சான்றிதழ்களின் பிரதிகளுடன் பிரதான முகாமையாளர் (மனித வளம் மற்றும் நிருவாகம்), மனித வளப் பகுதி, இலங்கை துறைமுக அதிகார சபை, கொச்சிக்கடை, கொழும்பு -13 என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக 2024.06.04ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

இந்த அறிவித்தல் www.slpa.lk என்ற இணையதளத்திலும் பிரசுரிக்கப்படும்.

அரச அல்லது அரச கூட்டுத்தாபனங்களில் சேவையிலுள்ள ஊழியர்களின் விண்ணப்பங்கள் அவர்களது திணைக்கள/கூட்டுத்தாபன தலைவர்கள் உடாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். மேலே பதவிக்கு விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படின் குறித்த திணைக்கள/கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க இணங்கும் குறிப்பொன்றும் அதில் இடப்பட்டிருத்தல் வேணடும்.

**தலைவர்.**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
### பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

**ஐரோப்பிய முதலீட்டு வங்கியினால் நிதியிடப்பட்ட பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்படுத்தல் முதலீட்டு திட்டம்**

### வடிவமைத்தல் மேற்பார்வை செய்தல் மற்றும் முகாமைத்துவ உசாத்துணை சேவைகளுக்காக தனிநபர் உசாத்துணையாளர்களை ஆட்சேர்த்தல்

பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்படுத்தல் முதலீட்டுத் திட்டத்தின் 3 ஆம் பாகமானது ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் நிதியுடன் அமுல் நடத்தப்பட்டு மேலேயுள்ள திட்டமானது வழங்கப்படுகின்றது. இச்செயற்றிட்டமானது பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் நிறைவேற்றப்பட்டு கொழும்பு மாநகர சபையினால் அமுல் நடத்தப்படுகின்றது.

2026 ஜூலை 31 ஆம் திகதிக்கு முன்னராக பூர்த்தி செய்யப்பட நோக்கமுள்ள மேலேயுள்ள வேலைகளை அமுல் நடத்துவதற்காக தகுதியான முகாமைத்துவம், தொழில்நுட்பம் மற்றும் ஒப்பந்த மேற்பார்வையிடல் ஆகியவற்றை வழங்குவதற்காக தனிநபர் அடிப்படையில் வடிவமைத்தல், மேற்பார்வையிடல் ஆகியவற்றிற்காக முகாமைத்துவ உசாத்துணையாளர்களை ஆட்சேர்ப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| தொடர்பு | வெளியக உசாத்துணை | பதவிகளின் எண்ணிக்கை | காலஎல்லை (மனித மாதம்) |
|---|---|---|---|
| 1 | கழிவுநீர் முகாமைத்துவ சிரேஷ்ட உசாத்துணையாளர் | 01 | 12 |
| 2 | ஒப்பந்த நிர்வாக விஷேடத்துனர் | 01 | 30 |
| 3 | கட்டமைப்பு உருவாக்கல் சிரேஷ்ட உசாத்துணையாளர் | 01 | 08 |
| 4 | புவிதொழில்நுட்ப சிரேஷ்ட பொறியியலாளர் | 01 | 08 |
| 5 | நிர்மாண சிரேஷ்ட பொறியியலாளர் | 01 | 30 |
| 6 | நிர்மாண பொறியியலாளர் | 01 | 30 |
| 7 | Electrical Instrumentation Engineer | 01 | 08 |
| 8 | அளவை அளவையாளர் ( QS) | 01 | 30 |
| 9 | நிதி முகாமையாளர் | 01 | 30 |
| 10 | சமுகவியலாளர் | 01 | 10 |
| 11 | HSE Consultant | 01 | 10 |

பொருத்தமான முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப திறன்களையுடைய தகுதியுள்ள தனிநபர்களை ஆட்சேர்ப்பதற்காக பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் அமைச்சு உசாத்துணையாளர்கள் பெறுகைக் குழுத் தலைவர் உத்தேசிக்கின்றார். தனிநபர் பணிஒதுக்கீடுகளுக்கான நியதிக் குறிப்புக்கள் 2024.05.30 ஆம் திகதியன்று வரையும் https://www.mpclg.gov. lk என்ற இணையதளத்திலிருந்து அல்லது செயற்றிட்ட பணிப்பாளரின் அலுவலகத்திலிருந்து, இன்னும் பலவும், கையேற்றுக் கொள்ளலாம்.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**செயற்றிட்ட முகாமைத்துவ அலகு,**
**பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்படுத்தல் முதலீட்டு செயற்றிட்டம்**
**இல.: 86, மிலேனியம் நிலையம்,**
**ஆனந்த குமாரசுவாமி மாவத்தை,**
**கொழும்பு-07.**

**தொலைபேசி: 011 2665331, மின்னஞ்சல் : pdgcwmp@sltnet.lk**

உசாத்துணையாளரொருவர் பகிரங்க நடைமுறைகளை பின்பற்றி EIB இனால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களுக்கான பெறுகை வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளுக்கு இசைவாக தெரிவு செய்யப்படுவார்.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் மேலதிக தகவலை மற்றும் ஐயவினாக்களை பொது வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3.30 மணிக்குமிடையில் 2024.05.17 ஆம் திகதியிலிருந்து 2024.05.30 ஆம் திகதி வரையும் பின்வரும் முகவரியிலிருந்து அல்லது பின்வரும் மின்னஞ்சலிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். **pdgcwmp@sltnet.lk** தொலைபேசி: 011 2665331.

அனைத்து விண்ணப்பங்களும் 2024.05.31 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் கீழேயுள்ள முகவரியில் கிடைக்கும் வகையில் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் பொருத்தமான தலையங்கத்தை தெளிவாக குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**அமைச்சு உசாத்துணையாளர்கள் பெறுகைக் குழு,**
**பெறுகை பிரிவு,**
**நிதி பிரிவு**
**பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,**
**இல.: 330, யூனியன் இடம்,**
**கொழும்பு-02.**

OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www.observerjobs.lk

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்
### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

| தொ. இல. | ஒப்பந்தப் பெயர் |
|---|---|
| 01. | Plate Compactor ஐ வழங்கல்<br>நாவல, நாவின்ன, இரத்மலான, ஒறுகொடவத்த, கடுவெல டிப்போ நிபொ பிரிவு, கொழும்பு. |
| 02. | Supply of Emulsion CRS 1 & CSS 1<br>நாவல, நாவின்ன, இரத்மலான, ஒறுகொடவத்த, கடுவெல டிப்போ நிபொ பிரிவு, கொழும்பு. (1500 கிமீ திட்டம்) |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள வேலைக்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2024 மே 20 ஆம் திகதியிலிருந்து 2024 ஜூன் 10 ஆம் திகதியன்று வரையும் www.rda.gov.lk என்ற வீஅஅ மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் இணையபக்கங்களை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு,**
**நிறைவேற்று பொறியியலாளரின் அலுவலகம் - கொழும்பு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை.**

## சுகாதார அமைச்சு
### தேசிய பாலியல் நோய் /எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்டம்

## வழங்குனர்களை பதிவு செய்தல் - 2024

2024 ஆம் ஆண்டிற்காக தேசிய பாலியல் நோய்/எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்டம் பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக பதிவு செய்ய ஆர்வம் காட்டும் மேல் மாகாணத்தில் உள்ள நிறுவனங்கள் அல்லது அதன் செயலில் உள்ள கிளையை பராமரிக்கும் வழங்குனர்கள், உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் சேவை வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**A - வழங்கல்கள்**

1. **எழுதுபொருட்கள் மற்றும் பிற பொருட்கள்**

நகல் அச்சிடும் பேப்பர், ஏனைய அனைத்து அலுவலக எழுதுபொருட்கள், பேனை ஹோல்டர்கள/பஞ்சர்கள்/கணிப்பான்கள் மற்றும் பிற பொருட்கள், மின்களங்கல் (A,AA,AAA) கை துடைக்கும் டிஷ்யூ, பைண்டிங் டேப்/கடித உறைகள்/கம்கள்/அளவுகோல், கோப்பிடும் அட்டை கவர்கள்/அனைத்து அலுவலக பொருட்கள்

2. **பல்வேறு வகையான டோனர்கள்**

நல்ல நிலையிலுள்ள (Original) டோனர்/மாஸ்டர் ரோல்/கார்ட்ரிட்/நிறப்பூச்சி/ரிப்பன்

3. **அலுவலக உபகரணங்கள்**

(அ) தொலைநகல் இயந்திரங்கள்/அச்சிடும் இயந்திரங்கள்/நகல் இயந்திரங்கள்

(ஆ) மடிக்கணினிகள், மேசைகணினிகள், கணினிகள்/அனைத்து கணினி துணைக்கருவிகள்/கணினி மென்பொருள்/கணினி/ UPS / ஊடக உபகரணங்கள்

4. **அலுவலக பொருட்கள் மற்றும் உபகரணங்கள்**

அலுவலக தளபாடங்கள் உபகரணங்கள்/அலுவலக உலோக பொருட்கள்/அலுவலக நாற்காலிகள்/தளபாடங்கள்

5. **சுகாதார பொருட்கள் மற்றும் பொருட்கள்**

வாசனை சோப்புகள், கார்போலிக் சோப்புகள், பார் சோப்புகள் மற்றும் சலவை தூள் வகைகள்/ Dish wash வகைகள்/வாகனங்கள் கழுவும் திரவங்கள்/ ஏர் ஃப்ரெஷ்னர்கள்/ கை துடைப்பான்கள் (வாகனங்களுக்கு)/ குப்பையிடும் உறைகள் மற்றும் பிளாஸ்டிக் கொள்கலன்கள்

6. **பராமரிப்பு உபகரணங்கள்**

அனைத்து வகையான குமிழ்கள்/ மின் இணைப்பை பெறுவதற்கான அனைத்து துணைக்கருவிகளும் (Wiring Items)/நீர்பம்புகள்/மின் பிளம்பிங் மற்றும் மெக்கானிக்கல் பராமரிப்பு கருவிகள்/அனைத்து ஆணிகள், கீல்கள், பூட்டுகள் சாவிகள், ஸ்பேனர்கள் போன்ற வன்பொருள் பொருட்கள்.

7. **வாகனங்களுக்குத் தேவையான பொருட்கள்**

டயர்கள்/டியூப்கள், வாகன வடிகட்டிகள், மசகு எண்ணெய், வாகன மின்கலங்கள்

8. **ஆய்வக பரிசோதனை உபகரணங்கள்**
9. **ஆய்வக பரிசோதனை உபகரணங்களின் பாகங்கள்**

**B - சேவைகள்**

1. **புதுப்பித்தல்**

நகல் இயந்திரங்கள் / அச்சிடும் இயந்திரங்கள் / தொலைநகல் இயந்திரங்கள் / கணினிகள் / மின்சார கெட்டில்கள் / கொதிகலன்கள் / ஊடக உபகரணங்கள்

2. **கட்டிடங்கள் பழுது**

நுண் பராமரிப்பு

3. **மின் உபகரணங்கள் பழுது**

தொலைக்காட்சிகள்/ குளிர்சாதனப் பெட்டிகள்/ மின் விசிறிகள்/ சலவை இயந்திரங்கள்/ மின் வெதுபகங்கள்

4. **அச்சிடும் சேவைகள் மற்றும் புகைப்படம் எடுத்தல்**

அனைத்து அச்சிடும், நிர்மாண வடிவமைப்பு, புகைப்படம் எடுத்தல்

5. **தகவல் தொழில்நுட்ப சேவைகள்**

இணையதள வடிவமைப்பு/கணினி மென்பொருள் அமைப்பு வடிவமைப்பு சேவைகள்/பினைய சேவைகள்

6. **வாகனங்களுக்கு தேவையான சேவைகள்**

என்ஜின் பழுது, நிறம் பூசுதல்
மின்னியல்/இலத்திரனியல் பழுது
வாகன இருக்கை பழுது மற்றும் அனைத்து குஷன் வேலைகள்
வாயு சீராக்கி பழுது, வாகனங்களை சர்வீசிங் செய்தல் (Service)

7. **ஆய்வக உபகரணங்களுக்கான சேவைகளை வழங்குதல்**

- மீள்ச்செலுத்தப்படாத **ரூ.1,000.00** கட்டணத்தை செலுத்தி குறித்த விண்ணப்பத்தை கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் உள்ள அலுவலகத்தில் **2024.05.20 முதல் 2024.06.10** வரை **மு.ப. 09.00 மணி முதல் பி.ப.3.00** மணி வரை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை இடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"2024 ஆம் ஆண்டிற்காக வழங்கல்கள் / சேவைகளுக்காக பதிவு செய்தல்"** எனக் குறிப்பிட்டு தலைவர், **பிராந்திய கொள்முதல் குழு, தேசிய தேசிய பாலியல் நோய்/எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்டம், இல-29, சேரம் பிரதேசம், கொழும்பு 10** எனும் முகவரிக்கு **2024.06.11** ஆம் திகதி **பி.ப.3.00** மணிக்கு முன் பெற்றுக்கொள்ளும் வகையில் பதிவு தபால் மூலம் அனுப்ப வேண்டும். அல்லது தேசிய தேசிய பாலியல் நோய்/எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்ட டெண்டர் பெட்டியில் இடலாம். (அஞ்சல் தாமதங்களுக்கு நிறுவனம் பொறுப்பேற்காது).

**முக்கியமாக :**

நிகழ்நிலை மூலமாக கொள்முதல் செயல்முறையை மேற்கொள்ள விரும்பும் வழங்குனர்கள் **promise.lk** இணையதளத்திற்குச் சென்று பதிவு செய்வது கட்டாயமாகும்.

**பொதுவான காரணங்கள் :**

மேற்குறிப்பிடப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு 2024 ஆம் ஆண்டிற்கு பதிவு செய்ய விரும்பும் வழங்குனர்கள் தமது கோரிக்கையை ஒரு உருப்படி வகைக்கு தனி தனி விண்ணப்பமாக சமர்ப்பிக்க வேண்டும்.

அனைத்து விண்ணப்பதாரர்களும் விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

i. வியாபாரத்தின் பெயர் பதிவுச் சான்றிதழின் நகல்

ii. பதிவுக் கட்டணம் செலுத்தியமையை உறுதிப்படுத்தும் தேசிய தேசிய பாலியல் நோய்/எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்ட சரப் அதிகாரியால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டின் (அசல் நகல்)

- முழுமையடையாத விண்ணப்பங்கள் மற்றும் உரிய திகதிக்கு பின்னர் கடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும்.
- 2024 ஆம் ஆண்டில் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளின் விநியோகத்திற்காக பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்து மனுக்கள் கோரப்படுகின்றன, மேலும் பதிவு செய்யப்படாத அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் அவசரத் தேவைகளின் அடிப்படையில் விலைமனுக்கோரும் உரிமை நிறுவனத்தின் தலைவர், பிராந்திய கொள்முதல் குழுவுக்கு உண்டு.
- கோரிக்கையின் போது விமைனுக்கள் சமர்ப்பிக்கப்படாவிட்டால், பொருட்களுக்கான கேள்வியினை முன்வைத்த பின்னர் சரியான நேரத்தில் பொருட்கள் வழங்கப்படாவிட்டால் அல்லது சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகளின்படி பொருட்கள் வழங்கப்படாவிட்டால், வழங்குனர்களின் பெயர்கள் வழங்குனர்களின் பட்டியலிலிருந்து எவ்வித முன் அறிவிப்பும் இன்றி நீக்கப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய கொள்முதல் குழு,**
**தேசிய பாலியல் நோய் /எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்டம்,**
**இல-29, சேரம் பிரதேசம்,**
**கொழும்பு 10.**

## 2025ம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளல்

### ஆரச்சிகட்டுவ பிரதேச சபை

1987 இல.15 பிரதேச சபை சட்டத்துடன் வாசிக்கப்பட வேண்டிய, வடமேல் மாகாண கௌரவ ஆளுநரான ராஜா கொல்லுரேயினால் 2020.10.29ம் திகதி மற்றும் இல. 2199115 இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையில் (அதிவிசேட பிரசுரிப்பிற்கு ஏற்படாகி இருந்த பிரதேச சபை வரவு செலவுத்திட்ட தயாரிப்பு மற்றும் செயற்படுத்தும் வீதி இல.6 இன் பிரகாரம் ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபையின் செயலாளரான என்னால் 2025ம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்திற்கான அபிவிருத்தி ஆலோசனைகள் பொது மக்களிடம் கோரப்படுவதாக அறிவித்துக் கொள்கிறேன். உங்களது 2025ம் ஆண்டிற்கான அபிவிருத்தி ஆலோசனை அல்லது ஆலோசனைகள் 2024 ஜூன் 30ம் திகதிக்கு முன் எனக்குக் கிடைக்குமாறு தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைக்குமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பீ.ஏ.எம். ஷினானி அபேசிங்ஹ,**
**செயலாளர்,**
**ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபை.**

**2024.05.15ம் திகதி**
**ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபை.**

## கிரிபாவ பிரதேச சபையின் 2025ஆம் ஆண்டிற்கான வரவு, செலவு அபிவிருத்தி திட்டத்தின் ஒழுங்கமைப்பதற்கு கருத்துக்களை பெற்றுக் கொள்வதற்காக பொது மக்களுக்கு செய்யப்படும் அறிவித்தல்

கிரிபாவ பிரதேச சபையினால் 2025ஆம் ஆண்டிற்கான வரவு, செலவு திட்டத்தினை ஒழுங்கமைத்தல் இத்தினங்களில் நடைபெறுவதுடன், குறித்த வரவு, செலவு திட்டத்தில் மூலதன செலவு மதிப்பீடு மற்றும் எதிர்கால அபிவிருத்தி திட்டத்திற்கு உள்வாங்குவதற்கு இயலுமான வகையில் கிரிபாவ பிரதேச சபை அதிகாரப் பிரிவில் வாழ்கின்ற உங்களது கருத்துக்கள் இருக்குமாயின் அவற்றை எழுத்து மூலம் 2024 ஜூன் மாதம் 30ஆந் திகதிக்கு முன் நேரில் வந்து அல்லது தபால் மூலம் அல்லது மின் அஞ்சல் மூலம் கிரிபாவ பிரதேச சபைக்கு கிடைக்கும் வகையில் 'செயலாளர், பிரதேச சபை, கிரிபாவ' என்ற முகவரிக்கு அனுப்புமாறு இத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**எச்.எம்.எஸ். ஹேரத்,**
**செயலாளர்,**
**கிரிபாவ பிரதேச சபை,**

**முகவரி** : **பிரதேச சபை, கிரிபாவ**
**மின் அஞ்சல்** : giribawaps@gmail.com

## 2025ம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளல்

### புத்தளம் பிரதேச சபை

புத்தளம் பிரதேச சபையில் 2025ம் ஆண்டுடன் சம்பந்தப்பட்ட வரவு செலவுத்திட்ட அறிக்கையை தயாரிப்பதற்காக புத்தளம் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்துடன் சம்பந்தப்பட்ட அபிவிருத்தி திட்டமிடலுக்கு உற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்படுகின்ற ஆலோசனைகள், 2024 ஜூன் 30ம் திகதிக்கு முன்னர் செயலாளர், புத்தளம் பிரதேச சபை, மதுரங்குளி என்ற முகவரிக்கு சமர்ப்பிக்குமாறு அதிகாரப் பிரதேசத்தின் பிரஜைகளுக்கு மற்றும் சமூக அமைப்புகளுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**ஏ.எம். மங்கலிக்கா செனவிரத்ன,**
**செயலாளர்,**
**புத்தளம் பிரதேச சபை.**

## பொது மக்களிடம் அபிவிருத்தி ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளல்

### படல்கும்புர பிரதேச சபை

2025ஆம் ஆண்டினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் செலவு மதிப்பீடு மற்றும் அபிவிருத்தி திட்டமிடலுக்கு உற்படுத்துவதற்காக படல்கும்புர பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் பொதுமக்களிடம் அபிவிருத்தி ஆலோசனைகலைப் பெற்றுக் கொள்வதற்கு படல்கும்புர பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

அதன் பிரகாரம் அதனோடு சம்பந்தப்பட்ட ஆலோசனைகள் 2024 ஜூன் 20ம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் சபை செயலாளர், பிரதேச சபை, படல்கும்புர என்ற முகவரிக்கு அனுப்புமாறு பிரதேச சபை அதிகாரப் பரதேசத்தின் பொது மக்களிடம் வேண்டிக் கொள்கிறேன்.

**சபை செயலாளர்,**
**பிரதேச சபை.**
**படல்கும்புர.**
**055 2250175**

## அப்புத்தளை பிரதேச சபை
## 2025ம் ஆண்டிற்காக முன்வைக்கப்படும் வரவு செலவு திட்டம் அமைப்பதற்குரிய ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளல்

அப்புத்தளை பிரதேச சபையின் 2025ம் ஆண்டிற்காக முன்வைக்கப்படும் வரவு செலவு திட்டம் அமைப்பதற்குரிய செலவு மதிப்பீடு மற்றும் 2025ம் ஆண்டிற்கான வருடாந்த அபிவிருத்தி ஆலோசனைகளை 30.06.2024 அன்றைய தினத்திற்கு முன்னர் 'செயலாளர், அப்புத்தளை பிரதேச சபை, தியத்தலாவ' எனும் விலாசத்திற்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கும்படி அனைத்து பிரஜைகளுக்கும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கே. எம். பீ. சீ. குலசேகர,**
**செயலாளர்,**
**அப்புத்தளை பிதேச சபை,**
**தியத்தலாவ.**

## கேள்வி அறிவித்தல்
## அம்பலாந்தோட்டை பிரதேச சபை

அம்பலாந்தோட்டை பிரதேச சபைக்கு சொந்தமான பரவகும்புக்க அதிவேகப் பதை பஸ் தரிப்பிடத்தின் மேல் மாடியில் அமைந்துள்ள உணவகத்தை 2024 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் திகதி தொடக்கம் 2034 ஜூன் 30 ஆம் திகதி வரை 10 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு என்னால் கேள்விமனுக்கள் ஏற்கப்படும்.

- குறைந்தபட்ச விலைமனு:- ரூபா 285,000.00
- மீளளிக்கப்படும் கேள்வி பிணைத் தொகை:- ரூபா 15,000.00
- கேள்விமனு படிவக் கட்டணம்:- ரூபா 2,000.00
  கேள்விமனு ஆவணங்களை வழங்கல்:- 2024.05.20 ஆம் திகதி தொடக்கம் 2024.06.10 ஆம் திகதி பி.ப. 3.00 வரை தேசிய அடையாள அட்டை/ ஓட்டுநர் அனுமதிப்பத்திரம்/ செல்லுபடியான கடவுச்சீட்டு மற்றும் கிராம உத்தியோகத்தர் சான்றிதழை சமர்ப்பித்து அம்பலாந்தோட்டை பிரதேச சபை அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

- கேள்விமனு ஆவணங்களை ஏற்றல்:- 2024.06.11 ஆம் திகதி மு.ப. 10.00 வரை
- கேள்விமனு ஆவணங்களை திறப்பது:- 2024.06.11 ஆம் திகதி மு.ப. 10.15 க்கு
- கேள்விமனு நிபந்தனைகள்:- கேள்விமனு படிவங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
- மேலதிக விபரங்களுக்கு:- 0472223275

கேள்விமனு ஆவணங்களை பதிவுத் தபாலில் அல்லது பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு குறித்த திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் அனுப்ப வேண்டும்.

2024.05.15
அம்பலாந்தோட்டை பிரதேச சபை
அலுவலகத்தில்

செயலாளர்
அம்பலாந்தோட்டை பிரதேச சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**(GOSL நிதியளிக்கப்பட்ட திட்டம்)**

**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு**

## இலங்கை பொலிஸ்

### வெலிகமவில் முன்மொழியப்பட்ட பொலிஸ் நிலையத்தின் எஞ்சிய வேலைகளை பூர்த்தி செய்தல்

**ஒப்பந்த இல.: LA/BI/136/13**

ஆரம்ப திகதியில் இருந்து 365 நாட்காட்டி தினங்களின் ஒப்பந்தக் காலத்திற்காக ஒப்பந்த இல.: LA/BI/136/13, "வெலிகமவில் முன்மொழியப்பட்ட பொலிஸ் நிலையத்தின் எஞ்சிய வேலைகளை பூர்த்தி செய்வதற்காக" பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து சுஹுருபாய பத்தரமுல்லை, 18ஆவது மாடி, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, அமைச்சு பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

வெலிகமவில் முன்மொழியப்பட்ட பொலிஸ் நிலையத்தின் எஞ்சிய வேலைகளை பூர்த்தி செய்வதில், பகுதி அளவு பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடத்தை பூர்த்தி செய்வதற்கான வேலைகள் அடங்கும். அளவை பட்டியலில் விபரிக்கப்பட்டவாறு பிரதானமாக கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்பு மற்றும் களித் தொட்டியுடன் வெளிப்புற குழாய் அமைப்பு முதலியன, மின் கம்பி வேலை (பகுதி அளவு பூர்த்தி செய்யப்பட்டது), அலுமினிய வேலை, டைல் பொருத்தல் வேலை, எல்லை சுவரின் நிர்மாணம், பாதுகாப்பு கூடாரம், கொடிக் கம்பம், வெளிப்புற நிரப்பல் முதலியன உட்பட நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு வேலை.

1. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
2. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதிக்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் பின்வரும் தேவைகளை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.
   **தேவையான CIDA பதிவு :**
   **நிபுணத்துவம் : கட்டிடம்**
   **தரம் : விலைமனுக்கள் மூடப்படும் திகதி வரை செல்லுபடியாக C3 மற்றும் அதற்கு மேல். மேலும் ஒப்பந்தம் வழங்கப்படும் திகதியில் பதிவு செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.**
3. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதிக்கு தேவையான தகைமை:
   கடந்த ஐந்து ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலையின் சராசரி ஆண்டுப் புரள்வின் பெறுமதி குறைந்தது 274.0 மில்லியன் ரூபா.
   இந்த திட்டத்திற்கானவற்றை தவிர்த்து இலங்கையில் இயங்கும் வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து பெறப்பட்ட கடன் வசதிகள் குறைந்தது 46.0 மில்லியன் ரூபா இருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் தொலைபேசி: 011-2887397, தொலைநகல்: 011-2887784, சுஹுருபாய, பத்தரமுல்லை, 17ஆவது மாடி, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, தலைமை கணக்காளரின் அலுவலகத்தில் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 2024.05.20 ஆம் திகதி தொடக்கம் 2024.06.10. ஆம் திகதி வரை வேலை நாட்களில் 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை கீழ் தரப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களை கட்டணம் இன்றி பரீட்சிக்கலாம்.
5. மீளளிக்கப்படாத கட்டணமாக 39,200.00 ரூபாவை (ரூபா முப்பத்து ஒன்பதாயிரத்து இரு நூறு மாத்திரம்) செலுத்தி 2024.05.20 ஆம் திகதி தொடக்கம் 2024.06.10ஆம் திகதி வரை சுஹுருபாய, பத்தரமுல்லை, 17ஆவது மாடி, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, தலைமை கணக்காளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்.
6. இரு பிரதிகளிலான முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024.06.11ஆம் திகதி 11.00 மணிக்கு முன்னர் கிடைப்பதற்கு கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது சுஹுருபாய, பத்தரமுல்லை, 17ஆவது மாடி, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, தலைமை கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடலாம். இரு பிரதிகளிலான விலைமனுக்களை வெவ்வேறு முத்திரையிடப்பட்ட உறைகளில் இட்டு "அசல்" மற்றும் "நகல்" என குறிப்பிட்டு கீழுள்ள 9 இன் கீழான அனைத்து ஆவணங்களுடனும் சேர்த்து பிரதான ஒற்றை உறை ஒன்றில் சமர்ப்பித்தல் வேண்டும். பிரதான உறை முத்திரையிடப்பட்டு பிரதான உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்விமனுவின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.
7. சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களின் செல்லுபடிக் காலம் 91 நாட்கள் இருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட 2,740,000.00 ரூபாவின் விலைமனு பிணை ஒன்று அல்லது பொலிஸ்மா அதிபரின் பெயரில் நிர்மாண உத்தரவாத நிதியை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு அது 2024.10.08 ஆம் திகதி வரை (விலைமனுக்கள் மூடப்படும் திகதியில் இருந்து 119 நாட்கள்) செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
9. கூறுவிலையிடும் அனைத்து கேள்விமனுதாரர்களும் விலைமனுவுடன் சேர்த்து பின்வரும் தகவல்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்:
   - வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராக இருத்தல் வேண்டும்.
   - நிதி ஸ்திரத்தன்மை மற்றும் வங்கிக் கடன் வசதிகள் தொடர்பான தகவலுக்கு (வங்கியிடம் இருந்து அத்தாட்சி கடிதத்துடன்) தொடர்புபட்ட ஆவணம்.
   - நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (CIDA) பதிவு செய்யப்பட்ட தரத்தை நிரூபிக்கும் ஆவணங்கள்.
   - விலைமனு ஆவணத்தில் கோரப்பட்டுள்ள ஏனைய விபரங்கள்.
10. இந்தத் திட்டம் 1987இன் (03) ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்திற்கு தொடர்புபட்டுள்ளது. அதனால் அனைத்து விலைமனுதாரர்களும் இந்த சட்டத்தின் ஒழுங்குமுறைகளை பின்பற்றல் வேண்டும்.
11. 2024.05.31 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின், பத்தரமுல்ல, "சுஹுருபாய", 17 ஆம் மாடியில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

**மேல் குறிப்பிடப்பட்ட முகவரியானது**

**தலைவர் - அமைச்சு பெறுகைக் குழு,**
**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு**
**18ஆவது மாடி,**
**சுஹுருபாய,**
**பத்தரமுல்லை.**

## பெறுகை அறிவித்தல்

### கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை - ராகம

கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை மற்றும் அதனோடு இணைந்த ராகம புனர்வாழ்வு வைத்தியசாலையில் கீழ்க்காணும் கட்டிடங்களைப் பழுது பார்ப்பதற்காக கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இலக்கம் | இணைப்பு இலக்கம் | நிறுவனம் | உருப்படி | CIDA பதிவுத் தகைமை | கேள்விப் பிணை முறி |
|---|---|---|---|---|---|
| 01 | AC/T/02/2024 | கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை - ராகம | வார்ட் இல. 31 புதுப்பித்தல் | C9, C8, C7, தரங்கள் | ரூ. 43000.00 |
| 02 | AC/T/04/2024 | கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை - ராகம | வார்ட் இல. 32 இல் ஆண் நோயாளர்களின் மலசலகூட அமைப்பை பழுது பார்த்தல் | C9, C8, C7, தரங்கள் | ரூ. 35000.00 |
| 03 | AC/RRH/T/01/ 2024 | புனர்வாழ்வு வைத்தியசாலை - ராகம | வார்ட் இல. 01 இன் கூரையைப் பழுது பார்த்தல் | C9, C8, C7, தரங்கள் | ரூ. 66000.00 |

02. இதற்காக தேசிய போட்டி கேள்வி கோரல் மூலம் ஒப்பந்தக்காரர்கள் நியமிக்கப்படுவர்

03. மேற்படி வேலைக்காக ஆர்வம் காட்டுகின்ற தகைமையுள்ள எந்தக் கேள்விதாரருக்கும் கீழ்க்காணும் பொருட்களை சமர்ப்பித்து 2024.05.20 முதல் 2024.06.10 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 2.30 வரை கொழும்பு வடகு போதனா வைத்தியசாலையின் நிதிப் பிரிவிலிருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

- கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு அனுப்பப்படும் எழுத்துமூல விண்ணப்பம்
- கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் காசாளருக்கு மீளளிக்கப்படாத ரூ. 2500.00 கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு
- வியாபார பதிவுச் சான்றிதழின் உறுதி செய்த பிரதி

04. ரூ. 05 மில்லியனுக்கு மேற்பட்ட கேள்விக்காக 1987 இல. 03 பொது ஒப்பந்த சட்டத்தின் கீழான கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

05. 2024.06.11 மு.ப. 10.30 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு பொறியிடப்பட்ட கேள்விகள் கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுத் தலைவருக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் பிரதம கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும் கேள்வி திறக்கப்படும் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

06. சகல கேள்விகளும் இரு பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் அத்துடன் 'மூலப்பிரதி' மற்றும் ' நகல் பிரதி' என்று குறிப்பிடுதல் வேண்டும். கேள்வி உள்ளிடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த பழுது பார்த்தலின் பெயர் மற்றும் திறக்கப்படும் தினத்தை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

**(தொ. பே. இல. 011-2959261/2 நீடிப்பு - 139**
**பெக்ஸ்: 011-2959266)**

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை - ராகம.**

**The Housewives' companion**
**Classifieds on**
**Daily News**